REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்
2024 ஓகஸ்ட் 5 திங்கட்கிழமை
வரு. 92 இல. 185 | Monday 05, August, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## லெபனானில் இலங்கையரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

**ஐரோப்பியர்களை வெளியேறுமாறு அறிவுறுத்தல்**

லெபனானில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக இருப்பதால், தேவையற்ற அச்சங்களை தவிர்க்குமாறு இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. லெபனானுக்கான இலங்கைத் தூதுவர் கபில ஜயவீர அது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது: லெபனானிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை அறிந்து கொள்வதில், தூதரகம் அக்கறையுடன் 06

# பொருளாதார மூலோபாய திட்டத்தை முன்னெடுக்காவிடில் வரிசை யுகம்

## மீண்டும் இந்த யுகம் ஏற்படாமல் தடுக்கும் பொறுப்பு தொழில் வல்லுநர்களிடமே

## நிலாவெளி முதல் அறுகம்பை வரை சுற்றுலா மையமாக அபிவிருத்தி





நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசாங்கம் ஆரம்பித்துள்ள மூலோபாய வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து, முன்னெடுக்காவிட்டால் மீண்டும் வரிசை யுகத்திற்கு செல்ல நேரிடும் எனவும் அந்நிலையைத் தடுப்பது அனைத்து தொழில் வல்லுநர்களின் பொறுப்பாகும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் வல்லுநர்களுடன் மட்டக்களப்பு சன்சைன் ஹோட்டலில் நடைபெற்ற சந்திப்பிலேயே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இந்நிகழ்வில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், மகளிர் அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் ஆற்றலைக் கண்டறிந்து, அதன் அபிவிருத்திக்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத் திட்டங்களை விளக்கிய ஜனாதிபதி, நிலாவெளி முதல் அறுகம்பை வரையிலான பிரதேசத்தை பிரதான சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் ஐம்பது பாரிய ஹோட்டல்களை உருவாக்குதல் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களையும் விளக்கினார்.

அதனையடுத்து மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினருடனான சந்திப்பிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

பிராந்திய விரிவான பொருளாதார கூட்டு முயற்சியில் (RCEP) இணைந்து, தென்கிழக்காசிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவது குறித்து, விளக்கிய ஜனாதிபதி, நாட்டின் புதிய பொருளாதார சீர்திருத்த செயல்முறை மற்றும் சட்டத் திருத்தம் குறித்தும் சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடினார். சர்வதேச விமானங்கள் தரையிறங்கும் வகையில் ஹிங்குரங்கொட விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் திட்டம் மற்றும் மட்டக்களப்பு மற்றும் கல்முனை பிரதேசங்களை பிரதான 06

## தபால் மூல வாக்கு; விண்ணப்பங்கள் இன்று பூர்த்தி

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதித் தேர்தல் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் காலம் இன்று (05) நள்ளிரவுடன் நிறைவடைவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இன்று நள்ளிரவு 12 மணிக்கு முன்பாக விண்ணப்பப்பத்திரங்கள் குறித்த 06

## சமய, சமூகப்பணிகளில் ஈடுபட்ட மிகச்சிறந்த தேரரை இழந்துள்ளோம்

**கங்காராம பொடி ஹாமுதுருவுக்கு ஜனாதிபதி அனுதாபம்**



அமரத்துவம் அடைந்த கங்காராம பொடி ஆமுதுரு முன்னெடுத்த சேவைகளால் அவர் சமூகப்பணிகளில் ஈடுபட்ட மிகச்சிறந்த தேரராக போற்றப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுதாபம் தெரிவித்துள்ளார். அன்னார் அமரத்துவம் அடைந்தமை குறித்து ஜனாதிபதி வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளதாவது: இலங்கை இளைஞர்களுக்கு தொழிலுக்கான பாதைகளையும் ஆங்கில மொழிக் கல்வியை யும் வழங்க அரும் பாடுபட்டார். 06

## குவைத்தில் கைது செய்யப்பட்ட இலங்கையரில் 24 பேர் விடுதலை

**இருவர் மேலும் தடுத்துவைப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



குவைத்தில் கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இலங்கை தூதரகம் முன்னெடுத்த நடவடிக்கையின் பலனாக இவர்கள் விடுதலையாகினர். முறையான அனுமதியின்றி இசை நிகழ்ச்சி நடத்தியதால் பாடகர்கள் உட்பட இலங்கையர்கள் 26 பேரை குவைத் அரசாங்கம் கைது செய்தது. பாடகர்களான இந்திரசாப லியனகே, சமனலி பொன்சேகா, ஜோலி சியா மற்றும் உபேகா நிர்மானி உட்பட 26 பேரே, வெள்ளிக்கிழமை (02) குவைத் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ஜே.வி.பி.க்கு சார்பான அமைப்பொன்று ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தபோதே இவர்கள் கைதாகினர்.

குவைத்தில் உள்ள இலங்கை தூதரகம் மேற்கொண்ட நடவடிக்கையையடுத்து நேற்று முன்தினமிரவு இவர்களில் 24 பேர் விடுவிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இசைக்குழுவின் இசைக்கருவிகளும் கைப்பற்றப்பட்டன.

**காக்கைதீவு சங்கமத்தில் பிதுர்க்கடன்**



ஆடி அமாவாசை தினத்தையொட்டி இந்துக்கள் நேற்றைய தினம் (04) கொழும்பு மட்டக்குளி காக்கைதீவு சங்கமத்தில் பிதுர்க்கடன்களை நிறைவேற்றுவதை படத்தில் காணலாம்.
(படம்: வடகொழும்பு தினகரன் நிருபர்)

## கட்சியை விட நாடே பெரிது ஜனாதிபதிக்கே எனது ஆதரவு

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதித் தேர்தலில், இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கே ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் நேற்றைய தினம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 06

## சட்டபூர்வ உரிமையின்றி கட்சியின் பெயர், பதவிகளை பாவிப்போருக்கு நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெயர் மற்றும் பதவிகளை உபயோகப்படுத்தி சிலர் கட்சியின் ஆதரவாளர்களை ஏமாற்றுவதாகவும், இவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த கட்சியின் உப தலைவர் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களுடன் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே, அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 06

## தாய், மகள் உட்பட மூவரை சுட்டுக்கொன்றுவிட்டு தானும் தற்கொலை

**அப்பாறையில் சம்பவம்; காணித்தகராறே காரணம்**

லோரன்ஸ் செல்வநாயகம்



மூவரைச் சுட்டுக்கொன்ற பொலிஸார் ஒருவர் துப்பாக்கியால் தன்னையும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். ஒரு பொலிஸாரும் இரண்டு பெண்களுமே இவ்வாறு சுடப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

அம்பாறை கராண்டுகல பகுதியில் இடம்பெற்ற இக்கோரச் சம்பவம், காணித்தகராறால் இடம்பெற்றதாகவும் சந்தேகிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் மொத்தம் நால்வர் உயிரிழந்தனர். இப்பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று அதிகாலை 54 வயதுடைய பெண் ஒருவரும் 17 வயதான அவரது மகளும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார். 06



03 பேருவளை இரத்தினக்கல் சமூகம் ஜனாதிபதியை ஆதரிக்க முடிவு

## ஏழு கோடி ரூபா பெறுமதியான கஞ்சாவுடன் வடக்கில் மூவர் கைது

**கடற்படையினர் தெரிவிப்பு**



வடக்கில், 07 கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் மூவரைக் கைது செய்துள்ளதாக கடற் படையினர் தெரிவித்துள்ளனர். இரணைதீவு கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த படகொன்றை சுற்றிவளைத்த கடற்படையினர் அதில், சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 176 கிலோ கஞ்சாவை கைப்பற்றினர். 06

## கட்சிக்கு மீண்டும் வருவோருக்கு வாசல் கதவு திறந்தே இருக்கும்

லோரன்ஸ் செல்வநாயகம்



கட்சிக்கு மீண்டும் திரும்பும் எவருக்கும் கட்சியின் கதவு திறந்தே இருக்கும் என, பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கட்சி ஆதரவாளர்களின் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷவின் சலூன் கதவினூடாக 06

## பொருளாதார வளர்ச்சியை IMF பாராட்டு: மீறினால் மீண்டும் வீழ்ச்சி

**நிதி இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை**

லோரன்ஸ் செல்வநாயகம்



பொருளாதாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டம் மற்றும் கொள்கையை மாற்றினால், மீண்டும் நாடு பாரிய வீழ்ச்சியை எதிர்கொள்ளும் என்பதே சர்வதேச நாணய நிதியத்தின் 06

## ஜனாதிபதித் தேர்தல்: அச்சக செலவினங்கள் ரூ. 800 மில்லியனாக மும்மடங்கு அதிகரிப்பு

**அச்சக கூட்டுத்தாபன தலைவர் தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சக செலவினங்கள் இம்முறை வெகுவாக அதிகரிக்கக்கூடும் என, அரசாங்க அச்சகத்தின் தலைவர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இம்முறை அந்த செலவினங்கள் மூன்று மடங்காக அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சு நடவடிக்கைகளுக்காக 800 மில்லியன் ரூபாவை 06

### அடுத்த ஆண்டு முதல் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

# இளைஞர்களின் எதிர்பார்ப்புக்களை அரசாங்கம் என்றும் மறந்துவிடல்லை

## யாழ். மாவட்ட இளைஞர்கள் முன்னிலையில் ஜனாதிபதி தெரிவிப்பு

இளைஞர்களுக்கு தொழில் வழங்கும் வேலைத்திட்டம் அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கப்படும் எனவும், அதற்காக அரச மற்றும் தனியார் துறைகளில் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதே தமது நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொவிட் 19 பெருந்தொற்று மற்றும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக கடந்த 4 வருடங்களாக இலங்கையின் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்க முடியவில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டிருப்பதால் தற்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும், அதனால் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களை செயல்படுத்தி நாட்டை முன்னேற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம், வலம்புரி ஹோட்டலில் கடந்த 02 ஆம் திகதி நடைபெற்ற இளைஞர் சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்தார்.

"செழிப்பான எதிர்காலத்திற்கான பயணம்" என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வைபவத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, 'இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை அரசாங்கம் ஒருபோதும் மறக்கவில்லை' என்றும் சுட்டிக்காட்டினார்.

நிதிப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் இவ்வருடம் நிதி ஒதுக்கியுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,







ஆசிரியர் சேவையில் புதியவர்களை இணைத்துக் கொள்வதற்கு அடுத்த வருடம் மேலதிக நிதியை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுயதொழிலில் ஈடுபட விரும்பும் இளைஞர்களுக்கு நிவாரணத்துடன் கூடிய கடன் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தில் இணைந்து இளைஞர்கள் முன்னோக்கிச் செல்வதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். இளைஞர்கள் எழுப்பிய சில கேள்விகளுக்கு சாதகமான பதில்களை வழங்கிய ஜனாதிபதி, அவர்களது கருத்துக்களை கேட்டறிந்து கொண்டதோடு சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இளைஞரொருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்காலத்தில் அனுபவத்தைப் பொருட்படுத்தாமல் தனியார் துறை தொழில் வாய்ப்புக்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யுமாறு தனியார் துறையிடம் கோரிக்கை விடுப்பதாகவும் உறுதியளித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுரேன் ராகவன், காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.





**ஜனாதிபதி ஊடகப் பிரிவு**

# வடக்கின் உயர் பொருளாதார திறன் வடக்கினதும் நாட்டினதும் அபிவிருத்திக்காக பயன்படுத்திக்கொள்வோம்

## யாழ்ப்பாணத்தில் கல்வியியலாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட மாகாண மக்கள் நீண்ட காலமாக பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்ற போதிலும், அந்த மாகாணத்தில் பாரிய பொருளாதார திறன் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த சந்தர்ப்பங்களை வடக்கு மாகாணம் உட்பட முழு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**புதிய பொருளாதார, அரசியல் முறைமையுடன் முன்னேறிச் செல்வதற்காக ஒன்றிணைவது கல்வியியலாளர்கள், தொழில் வல்லுநர்களின் பொறுப்பு**



யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில் கடந்த சனியன்று இடம்பெற்ற யாழ்.மாவட்ட கல்வியியலாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைக் தெரிவித்தார்.

தேர்தல் மேடைகளில் பல்வேறு வாக்குறுதி



களை வழங்கிவிட்டு அவற்றை நிறைவேற்ற கடன் பெற்றதாலேயே நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதே தவறை மீண்டும் நடக்க அனுமதிக்காமல் புதிய பொருளாதார மற்றும் அரசியல் முறையில் முன்னேறிச் செல்வதற்கு பங்களிப்பது நாட்டிலுள்ள அனைத்து கல்வியியலாளர்கள், தொழில் வல்லுநர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் ஏனையவர்களின் பொறுப்பாகும் என்பதையும் வலியுறுத்தினார்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்களுக்கும் முதன்மை இடம் கிடைத்தாலும், அனைவரையும் சமமாக நடத்துதல், மற்றும் பாலினச் சமத்துவம் உள்ளிட்ட விடயங்களை இதன்போது கருத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன், தமிழ் மொழியையும் சிங்கள மொழியையும் ஊக்குவிப்பதற்கான முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்வரும் காலங்களில் தமிழ் நாட்டில் ஏற்படவிருக்கும் பொருளாதார வளர்ச்சியுடன், மற்றவர்களுக்கு இல்லாத வாய்ப்புகள் தமிழ் பேசும் இலங்கையர்களுக்கு கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

**இனப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும். நல்லிணக்கமும் சமத்துவமும் மிக முக்கியமானவை.**

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "முதலில் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட அளவில் வரி விதிக்க இணக்கம் காணப்பட்ட போதிலும் அதன் பின்னர் வந்த அரசாங்கம் தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் வரிகளை குறைத்தது. இது அரசாங்க வருவாய் குறைவதற்கு வழிவகுத்தது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்திலிருந்து விலகி, அந்த தவறை நாம் மீண்டும் செய்ய முடியாது. ஒரு நாடாக நாம் முன்னேறும்போது, நமது அரசியல் முறைமையையும் மாற்ற வேண்டும்.

கடந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டின் பிரதமர் பதவியை ஏற்க எவரும் தயாராக இருக்கவில்லை. நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் திறன் கொண்ட ஒருவரைக் கண்டுபிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. ஜனாதிபதி வெளியேறிய பின்னர், நான் பதவி விலகுவதாகச் சொன்னேன். ஆனால் யாரும் பொறுப்பை ஏற்க விரும்பவில்லை. நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பானது கடன் வாங்குதல் மற்றும் போலி வாக்குறுதிகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பது அப்போது புரிந்தது.

நமது அரசியல் முறைமையைக் கருத்தில் கொண்டு வலுவான தீர்மானங்களை எடுக்க வேண்டும். நல்ல எதிர்காலத்திற்காக நாட்டுக்கு புதிய அரசியல் முறைமையொன்று தேவை. அந்த அரசியல் முறைமையை தலைமைத்துவத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தக் கூடாது. பொறுப்பை ஏற்கக்கூடிய தைரியமான தலைவர்களே நாட்டுக்குத் தேவைப்படுகின்றனர். அத்தோடு இந்த பயணத்தை நாம் அனைவரும் ஒன்றாக செல்ல வேண்டும். இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்களுக்கும் முதன்மை இடம் கிடைத்தாலும், அனைவரையும் சமமாக நடத்துதல், மற்றும் பாலினச் சமத்துவம் உள்ளிட்ட விடயங்களை இதன்போது கருத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன் சிங்கள, தமிழ் இனப்பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும். பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தாலும், அனைவரையும் சமமாக நடத்துவது மிகவும் அவசியம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் இன மற்றும் மத குழுக்களிடையே சமத்துவம் மற்றும் பெண்கள் மற்றும் ஆண்கள் இடையே சமத்துவம் உள்ளது.

நாட்டில் ஒருபாதியாக இருக்கும் பெண்களுக்கு பாராளுமன்றத்தில் சரியான பிரதிநிதித்துவம் இல்லை. இதற்கு நாம் தீர்வு காண வேண்டும். சிங்கள மொழியையும் தமிழ் மொழியையும் நாம் ஊக்குவிக்க வேண்டும். எதிர்காலத்தில் தமிழகத்தில் ஏற்படப்போகும் பொருளாதார வளர்ச்சியால் தமிழ் பேசும் இலங்கையர்களுக்கு மற்றவர்களுக்கு கிடைக்காத வாய்ப்புகள் கிடைக்கும்.

**சிங்கள மொழியுடன் தமிழையும் ஊக்குவிக்க வேண்டும். தமிழகத்தில் எற்படவிருக்கும் பொருளாதார வளர்ச்சியினால் இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்பு கிடைக்கும்.**

மேலும் நாட்டின் அனைத்து மாகாணங்களையும் ஒன்றாக அபிவிருத்தி செய்ய வேண்டும். நான் அமைச்சராக இருந்த காலத்தில் நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் இருந்த போதிலும் பின்னர் அது பின்தங்கிப் போனது. இப்போது போர் முடிந்துவிட்டது. எனவே யாழ்ப்பாணத்தையும் வடமாகாணத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய தருணம் வந்துள்ளது.

வறுமை ஒழிப்பு, விவசாய நவீனமயமாக்கல் போன்ற பிராந்திய அபிவிருத்திக்காக மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்க வேண்டும்.

தேசிய காணி ஆணைக்குழு மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பனவற்றை வர்த்தமானியில் வெளியிட எதிர்பார்க்கின்றோம். பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கும் வகையில் மாகாண சபைத் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்து, மாகாண சபையிலும் பாராளுமன்றத்திலும் ஒரே நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பணியாற்றுவதற்கு இடமளிக்க எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் மத்திய அரசும், மாகாண நிர்வாக பொறிமுறையும் இணைக்கப்படும்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுற்றுலா, விவசாயம் ஆகியவற்றில் யாழ்ப்பாணம் பெரும் திறனை கொண்டுள்ளது. திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்து இந்தியாவுடன் தரைமார்க்க இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் முதலீட்டு வலயங்களை அபிவிருத்தி செய்து நாட்டின் அபிவிருத்திக்கான பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

யாழ்ப்பாணம் மற்றும் வட மாகாண மக்கள் நீண்டகாலமாக நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தனர். ஆனால், இந்த மாகாணத்தில் நாம் பயன்படுத்த வேண்டிய பாரிய வளங்கள் உள்ளன. பழைய முறையில் முன்னேறிச் செல்ல முடியாது. நல்ல எதிர்காலத்திற்காக தற்போதுள்ள முறைமை மாற்றப்பட வேண்டும். அதற்கு பங்களிப்பை வழங்குவது, மருத்துவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சிவில் சமூகத் தலைவர்கள் என்ற வகையில் நீங்கள் முன்னோடியாவிருந்து பங்களிப்பை வழங்க வேண்டும். புதிய இலங்கைக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். 2022 ஆம் ஆண்டில் நாங்கள் எதிர்கொண்ட சிரமங்கள் கடுமையானவை. இருந்தாலும், நாம் அதை உறுதியுடன் எதிர்கொண்டோம். நமது நாட்டை முன்னேற்றும் சவாலை வெல்வோம். அனைவரும் ஒன்றுபட்டு புதிய பயணத்தை தொடர்வோம் என்று அழைப்பு விடுக்கிறேன்" என்றார்.

தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில்முனைவோர் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி இதன்போது சாதகமான பதில்களை வழங்கியதுடன், நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கான யோசனைகளையும் ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுரேன் ராகவன், காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு**

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஒகஸ்ட் 5 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.45
லுஹர் - 12.18
அஸர் - 03.38
மஃரிப் - 06.29
இஷா - 07.43

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆடி 20
ராகுகாலம் : காலை : 7.34 - 9.04வரை
சுபநேரம் : பகல் : 12.04 - 1.34வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# பேருவளை இரத்தினக்கல் சமூகம் ஜனாதிபதியை ஆதரிக்க முடிவு

## பொருளாதார வாய்ப்புக்களுக்கு இதுவே வழி

பேருவளை இரத்தினக் கல் ஏற்றுமதி துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் மற்றும் முஸ்லிம்கள்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் 06


மர்ஜான் பழீல் எம்.பியின் வேண்டுகோளுக்கமைய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பேருவளை தர்கா நகர் ஸஹிரா மாவத்தை, சென்ரல் வீதி ஆகியவற்றுக்கு வருகை தந்தபோது


அமரத்துவமடைந்த கங்காராம பொடி ஹாமுதுரு சங்கைக்குரிய விகாராதிபதி கலகொட ஞானீஸ்ஸர தேரரின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியாரும் இறுதி மரியாதை செலுத்தினர்.

தினகரன்
THINAKARAN

# 92 வருடங்களுக்கு முன் தினகரன்

இன்று 05 ஒகஸ்ட் 1932


திரை மறைவில் கூட்டம்

மொத்தப் பென்ஷன்கள் சம்பந்தமான திருத்தப் பிரேரணை

புதிய வரிகள் வேண்டாம்

அரிசியில் அந்தர் ஒன்றுக்கு 50 சதம் தீர்வை உயர்த்த வேண்டுமென்ற சிபார்சு

நேற்று முன்தினம், அரசாங்க சபை அங்கத்தவர்களும் மந்திரி சபையாரும் நடத்திய மூடுமந்திரக் கூட்டத்தில், அடுத்த பண வருடத்துக்கு வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, புதிய வரிகள் விதிக்கப்பட வேண்டுமென்ற கூற்றை மறுத்த மந்திரி சபையாரின் தீர்மானத்தை அரசாங்க சபை அங்கத்தவர்களும் கைக் கொள்ளுவதாகத் தீர்மானித்திருக்கிறார்களென்று தெரிய வருகின்றது.

## திரை மறைவில் கூட்டம்

மொத்தப் பென்ஷன்கள் சம்பந்தமான திருத்தப் பிரேரணை

## புதிய வரிகள் வேண்டாம்

அரிசியில் அந்தர் ஒன்றுக்கு 50 சதம் தீர்வை உயர்த்த வேண்டுமென்ற சிபார்சு

நேற்றுமுன்தினம், அரசாங்க சபை அங்கத்தவர்களும் மந்திரி சபையாரும் நடத்திய மூடுமந்திரக் கூட்டத்தில், அடுத்த பண வருடத்துக்கு வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, புதிய வரிகள் விதிக்கப்பட வேண்டுமென்ற கூற்றை மறுத்த மந்திரி சபையாரின் தீர்மானத்தை அரசாங்க சபை அங்கத்தவர்களும் கைக் கொள்ளுவதாகத் தீர்மானித்திருக்கிறார்களென்று வருகின்றது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# புத்தபெருமானின் போதனைகள் ஐரோப்பிய நாடுகளை கவர்ந்துள்ளன

புத்த பெருமானின் போதனைகளும் அவர் காட்டிய பாதையும் ஐரோப்பியர்கள் மற்றும் மேற்கத்திய நாடுகளில் உள்ளவர்களை மிகவும் கவர்ந்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். கற்றறிந்த ஐரோப்பியர்களும் புத்தரின் வெளிப்படைத்தன்மை மற்றும் பௌத்த சமயத்தில் சொல்லப்படும் பகுப்பாய்வு நோக்கிலான எண்ணக்கருவை பெரிதும் மதிக்கிறார்கள்.

அவர்களிடம் கேட்டுக்கொள்வது எதையும் நம்ப வேண்டும் என்றல்லாது முதலில் கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்து பார்ப்பது குறித்த புத்தரின் போதனைகளைப் பின்பற்ற வேண்டும்.

அலரி மாளிகையில் நடைபெற்ற (03) ஜேர்மனியின் பேர்லின் பௌத்த விகாரையின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

ஐரோப்பாவில் பௌத்தத்தை பிரபல்யப்படுத்த பேர்லின் பௌத்த விகாரையின் செயற்பாடுகளுக்கு முழு ஆதரவை வழங்குவதாக உறுதியளித்த பிரதமர், "இலங்கை கிழக்கு மற்றும் மேற்கின் இயற்கையான மையமாக, பாளி சமஸ்கிருத அறிஞர்களைக் கொண்ட ஒரு சிறந்த தேசமாக இருந்தது. ஆனால் அதன் உண்மையான பெறுமதி இலங்கையின் தேரவாத பௌத்த தர்மமாகும். 06




# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தளை மாவட்ட குழு ஜனாதிபதிக்கு ஆதரவு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தளை மாவட்ட குழு, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதென, ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கூட்டம் நேற்று பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்டத் தலைவருமான .ஜனக பண்டார தென்னகோன் தலைமையில் தம்புள்ளையில் நடைபெற்றது. விளையாட்டு, இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் ஆகியோர் கலந்து கொண்டு இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டனர்.

மாத்தளை மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல தொகுதி அமைப்பாளர்கள் ,முன்னாள் மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் பிரதிநிதிகள், வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் மாவட்ட இணைப்பு அமைப்புகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



# தேர்தல் முறைகேடுகள்: மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

ஜனாதிபதித் தேர்தலில் இடம் பெறும் முறைகேடுகளை கண்காணிக்கவும் அது குறித்த தகவல்களை பெறுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக 0767914696 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது 0112505566 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு இது தொடர்பான முறைப்பாடுகளை, சமர்ப்பிக்க முடியும் எனவும் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்தும் நோக்கில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் வழிகாட்டுதல்கள் ஒன்றை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுயநலமாக சிந்தித்தோராலேயே பொதுஜன பெரமுன பிளவுபட்டது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பவர்களால் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பிளவுபடவில்லை எனவும் கட்சியைப் பற்றி கவலைப்படாது தனிப்பட்ட நலன்களுக்காகச் செயற்பட்ட ஒரு சிலரின், செயற்பாடுகளாலேயே கட்சி பிளவுபட்டதாகவும்



அமைச்சர் பிரசன்னரணதுங்க தெரிவித்தார்.

இவ்வாறான சிலர்,பணத்துக்காக கட்சிக்கு துரோகம் இழைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். இரத்தினபுரி மாவட்ட உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளுடன் (03) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர்:

கட்சியைப் பிளவுபடுத்தாமல் ஒன்றித்து செயற்பட நான் விரும்புகிறேன். பிளவை ஏற்படுத்தியவர்கள் 2022 இல், ரணிலை நியமிக்காமல் டலஸை நியமித்திருக்க வேண்டும்.

நாடு ஆபத்தான நிலையிலிருக்கையில் சவால்களை ஏற்றுக்கொண்டவர் ரணில். ஆனால், சஜித் பிரேமதாச, ஹர்ஷ எம். பி. ஆகியோர் சவால்களை பொறுப்பேற்க முடியாது என்று ஒதுங்கிவிட்டனர்.

தொகுதி அமைப்பாளர் பதவி பற்றிப் பேசும் நேரம் இதுவல்ல.நாட்டைப்பற்றியே சிந்திக்க வேண்டும் என்றார்.

# பொதுஜன பெரமுனவின் மாவட்ட புதிய அமைப்பாளர்கள் நியமனம்

## இரண்டு இராஜாங்க அமைச்சர்களும் உள்ளடக்கம்

லோரன்ஸ் செல்வநாயகம்

பொதுஜன பெரமுன கட்சி நாமல் ராஜபக்ச உட்பட நான்கு மாவட்ட அமைப்பாளர்களை புதிதாக நியமித்துள்ளது. அவர்களில் இரண்டு இராஜாங்க அமைச்சர்களும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கிணங்க கட்சியின் அனுராதபுரம் மாவட்ட அமைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும் கம்பஹா மாவட்ட அமைப்பாளராக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுராதவும் மாத்தறை மாவட்ட அமைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்கவும் காலி மாவட்ட அமைப்பாளராக இராஜாங்க அமைச்சர் மொஹான் டி சில்வாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

எனினும், கட்சியின் முடிவுக்கு மாறாக செயற்பட்டு வேறு ஒரு வேட்பாளரை ஆதரிக்க தீர்மானித்துள்ள பலர்மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைகளில் 06

# ஷுஹதாக்களை நினைவுகூரும் விசேட நிகழ்வு

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

நாட்டில் நிலவிய அசாதாரண காலங்களில் கொல்லப்பட்ட,காயமடைந்த மற்றும் காணாமலான

அக்கரைப்பற்று முஸ்லிம்களை நினைவுகூரும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை (06) நடைபெறவுள்ளது.

அக்கரைப்பற்று சுகதா ஞாபகார்த்த அமைப்பினர்

இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர். அக்கரைப்பற்று ஜூம்ஆ பட்டினப்பள்ளிவாசலில் அஸர் தொழுகையின் பின்னர் அமைப்பின் தலைவர் 06

# ஸ்ரீ.மு,.கா, மலையக மக்கள் முன்னணி சஜித்துக்கு ஆதரவு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர் பீடம் நேற்றுக் கூடி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு நிபந்தனைகளுடன் ஆதரவு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

கொழும்பு கொம்பனித் தெருவிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் இக்கூட்டம் இடம் பெற்றுள்ளது இதையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்பி; எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு நிபந்தனைகளுடன் ஆதரவளிப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் பீடம் தீர்மானித்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை,மலையக மக்கள் முன்னணியானது தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் இணைந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

நேற்றைய தினம் ஹட்டனில் இடம் பெற்றுள்ள 06

# நாமலின் தவறுகளால்தான் எமது வீடுகள் தாக்கப்பட்டன

## பொருளாதாரத்தை மீட்ட தலைவரை ஆதரிப்பதே முடிவு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் செய்த தவறுகளாலேயே கடந்த 2022 .05.09 தமது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாக அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே,அவர் இதனை தெரிவித்தார்.இங்கு உரையாற்றிய அவர்:

காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை தாக்குமாறுகூட்டங்களை நடத்தினர்.இதனால் எழுந்த சர்ச்சைகள் இறுதியில் கலவரமாக வெடித்து எங்கள் வீடுகளும் தாக்கப்பட்டன.

அனுராதபுரம் மாவட்ட மக்களின் அபிலாகைஷகளுக்கு முன்னுரிமை அளித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்தேன். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீண்டுள்ளது. தற்போதய முன்னேற்றத்தை தொடர வேண்டுமாயின் ஜனாதிபதி தலைமையில் மீண்டும் அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும். சாதாரண மக்களின்



விருப்பம் இது. போராட்டத்தின் போது அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டமை சிறந்தது என நாமல் தெரிவித்துள்ள கருத்து முறையற்றது.

நாமல் ராஜபக்ஷ வரலாறு தெரியாமல் அரசியல் தெரியாமல் கருத்துக்களை தெரிவிப்பது கவலைக்குரியது. வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது சிறந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 20ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 29

### குறள் தரும் சிந்தனை

காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு

அறிவற்றவனுக்கு அறிவு காட்ட முயல்பவன்
அறிவற்றவனால் அறிவற்றவனாய் எண்ணப்படுவான்;
அறிவற்றவன், தான் அறிந்ததே அறிவாக எண்ணுவான்.

# மத்திய கிழக்கிலுள்ள இலங்கையர் குறித்து அரசாங்கம் கூடிய கரிசனை

காஸாவில் சுமார் பத்து மாதங்களாக யுத்தம் இடம்பெற்றுவரும் சூழலில் ஹமாஸ் அமைப்பின் தலைவரும் முன்னாள் பிரதமருமான இஸ்மாயீல் ஹனியே கடந்த புதனன்று அதிகாலையில் ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்த சில மணித்தியாலயங்களில் ஹிஸ்புல்லாஹ்வின் இரண்டாவது தளபதி புவார்ட் சுஹூர் லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் கொல்லப்பட்டார். அதிலும் இஸ்மாயீல் ஹனியே ஈரானின் புதிய ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்தில் விஷேட விருந்தாளியாகக் கலந்து கொண்ட சமயத்தில் கொல்லப்பட்டிருக்கிறார்.

'இப்படுகொலைக்கு இஸ்ரேலே பொறுப்பு' என்று குற்றம் சாட்டியுள்ள ஈரான் 'தமது நாட்டின் விருந்தாளியைப் படுகொலை செய்துள்ளமைக்கு கடும் பதிலடி கொடுக்கப்படும். அது ஈரானின் கடமை' என அந்நாட்டின் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லாஹ் அலி காமெனெய் கூறியுள்ளார்.

இந்நிலையில் மத்திய கிழக்கில் உச்ச கட்ட போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால் இஸ்ரேல், லெபனான் ஆகிய நாடுகளுக்கான விமான சேவைகளை பல நாடுகளும் இடைநிறுத்தியுள்ளன. லெபனானிலுள்ள தம் பிரஜைகளை அங்கிருந்து வெளியேறுமாறு பல நாடுகளும் அறிவுறுத்தியுள்ளன. இதேவேளை அமெரிக்க யுத்த கப்பல்களும் யுத்த விமானங்களும் மத்திய கிழக்கு நோக்கி விரைந்துள்ளளன.

இந்த சூழலில் இஸ்ரேல், லெபனான், ஜோர்தான் ஆகிய மூன்று நாடுகளிலும் பணியாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் இலங்கையர் குறித்து அவர்களது உறவினர்கள் கூடுதல் கவனம் செலுத்தும் நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் லெபனானில் உள்ள இலங்கை தூதரகம், 'லெபனானில் பணியாற்றும் இலங்கையர் பாதுகாப்பாக இருப்பதாகவும் தேவையற்ற அச்சங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுள்ளது.

இலங்கையின் லெபனான் நாட்டுத் தூதுவர் கபில ஜயவீர, 'லெபனானில் 7600 க்கும் மேற்பட்ட இலங்கையர் பணியாளர்களாக உள்ளனர். அவர்களில் சுமார் 25 பேர் யுத்தம் நிலவும் பிரதேசங்களில் இருக்கின்றனர். என்றாலும் எமது நாட்டு பிரஜைகளின் பாதுகாப்பு தொடர்பில் உச்சபட்ச கவனம் செலுத்தி செயற்பட்டுள்ளதாகவும் அதன் நிமித்தம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் தேவையற்ற நடமாட்டங்களையும் மக்கள் கூடும் இடங்களில் தங்குவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது' என்றுள்ளார்.

இதேவேளை இஸ்ரேலிலும் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர் பணியாளர்களாக உள்ளனர். அவர்களது நலனகள் குறித்தும் கூடுதல் கரிசனை செலுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கைக்கான இஸ்ரேலியத் தூதுவர் நிமல் பண்டார, இஸ்ரேலில் இருந்து டுபாய், அபுதாபி, புதுடில்லி ஊடாக கொழும்புக்கு பயணிப்பதற்கான விமானங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் விமான நிலையத்திற்கு செல்வதற்கு முன்னர், நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

மேலும் ஜோர்தானில் 15 ஆயிரம் இலங்கை தொழிலாளர்கள் உள்ளனர். எகிப்தில் கிட்டத்தட்ட 500 பேர் இருக்கின்றனர். இவை தவிர, மத்திய கிழக்கின் ஏனைய நாடுகளிலும் பெருந்தொகையான இலங்கையர் தொழிலாளர்களாக உள்ளனர். என்றாலும் தற்போது உச்சபட்ச போர்ப் பதற்றம் உருவாகியுள்ள நாடுகளில் உள்ள பணியாளர்களின் நலன்கள் குறித்து அந்தந்த நாடுகளில் கடமையாற்றும் தூதுவர்கள் ஊடாக உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும் மத்திய கிழக்கில் யுத்தம் மூளும் நிலை ஏற்படுமாயின் அங்கு பணியாளர்களாக உள்ள இலங்கையரை பாதுகாப்பாக நாட்டுக்கு திரும்பவும் அழைத்து வருவதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இதன் நிமித்தம் ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ள, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, இஸ்ரேல், லெபனான், ஜோர்தான் ஆகிய நாடுகளில் உள்ள இலங்கை தொழிலாளர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைகளுக்கு அமைய பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாதிருப்பதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்..

மக்களின் நலன்கள் குறித்து கவனம் செலுத்திவரும் அரசாங்கம் என்ற வகையில் இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நாட்டு பிரஜைகள் உள்நாட்டிலோ தொழில்புரியும் நாடுகளிலோ பாதிப்புகளுக்கோ அசௌகரியங்களுக்கோ உள்ளாகிவிடக்கூடாது என்பதில் அதிக கரிசனை எடுக்கப்பட்டுள்ளன. அந்தப் பின்னணியில் தான் இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனால் அந்தந்த நாடுகளில் பணிபுரியும் இலங்கையர் அந்தந்த நாடுகளிலுள்ள தூதரகங்கள் ஊடாக வழங்கப்படும் அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளுக்கு அமைய செயற்படுவது அவசியம். அத்தோடு உள்நாட்டவர்களும் எரிபொருள் மற்றும் எரிவாயு பயன்பாட்டையும் பொறுப்புடன் மேற்கொள்ளவும் தவறலாகாது.

தற்போதைய சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளிலும் அறிவுறுத்தல்களிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதுவே குடிமக்களின் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# இன, மத பேதமின்றி நாட்டைக் கட்டியெழுப்புவோம்

## யாழ் ஊடகவியலாளர்கள் மத்தியில் ஜனாதிபதி

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டியது அவசியமென்பதை தான் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன, மத பேதமின்றி நாட்டைக் கட்டியெழுப்பு ம் வேலைத்திட்டத்துடன் இலங்கையர் என்ற வகையில் அனைவரும் ஒன்றுபட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (03) பிற்பகல் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் பணிமனைக்கு சென்றிருந்தோடு, அதன் ஊழியர்களையும், ஏனைய ஊடகவியலாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது உதயன் பத்திரிகை பணிமனையின் பிரதம நிறைவேற்று அதிகாரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், தலைமை ஆசிரியர் த. பிரபாகரன் ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்றனர்.

அதனையடுத்து ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, அவர்களின் கேள்விகளுக்கும் சாதகமான பதில்களை வழங்கினார்.

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்க வேண்டும் என்பதே முதல் பிரச்சினையாக இருந்ததாகவும், கடந்த ஜூன் மாதத்தில் அந்த பிரச்சினையை நிறைவுக்கு கொண்டு வர முடிந்திருந்தமையினால் தற்போது ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவது குறித்து சிந்தித்து வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்களின் போது இளைஞர்கள் பெரும்பாலும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பிலான கோரிக்கைகளையே முன்வைத்தனர். அதனால் வடக்கிலும், தெற்கிலும் உள்ள இளையோரின் எதிர்பார்ப்புக்களில் வேறுபாடுகள் தெரியவில்லை என்றும் கூறினார்.

மாகாண சபைகளை வலுவூட்டி அந்தந்த மாகாணங்களின் அபிவிருத்திக்கான பரந்தளவான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதே தனது எதிர்பார்ப்பாகும் என தெரிவித்த ஜனாதிபதி, அனைத்து மாகாணங்களுக்கும் மத்திய அரசாங்கம் உதவிகளை வழங்குமெனவும் உறுதியளித்தார்.



உதயன் பணி மனைக்கும் நேரில் விஜயம்



# பூமிக்கு திரும்ப முடியாமல் தவிக்கும் சுனிதா வில்லியம்ஸ்

பத்து நாட்கள் என திட்டமிடப்பட்ட சுனிதா வில்லியம்ஸின் விண்வெளி பயணம், 50 நாட்கள் கடந்துள்ள போதிலும் இன்னும் பூமிக்கு திரும்ப முடியாத நிலை நீடித்து வருகிறது. இந்நிலையில், சுனிதா வில்லியம்ஸ் தீவிரமான உடல்நலப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வாய்ப்பிருப்பதாக ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். குறிப்பாக சுனிதா தசை மற்றும் எலும்பு அடர்த்தியை இழக்க நேரிடலாம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனளர்.

பூமியிலிருந்து ஏறத்தாழ 400 கி.மீ உயரத்தில் உள்ள சர்வதேச விண்வெளி மையத்திற்கு அடிக்கடி விண்வெளி வீரர்கள் சென்று ஆய்வு செய்வது வழக்கம். அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாதான் இந்த பணிகளை மேற்கொண்டு வந்தது. இந்த பணிகளை தனியார் வசம் ஒப்படைக்க அண்மையில் நாசா முடிவெடுத்தது. இதற்காக போயிங் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது.

போயிங் நிறுவனத்திற்கு விமான தயாரிப்பில் முன் அனுபவம் உண்டு, அதன் அடிப்படையில்தான் இந்நிறுவனத்தை நாசா தேர்ந்தெடுத்தது.

போயிங் நிறுவனம் இந்திய வம்சாவளியை சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அமெரிக்காவின் மற்றொரு விண்வெளி வீரரான புட்ச் வில்மோர், என இருவரையும் சர்வதேச விண்வெளி மையத்திற்கு அழைத்து சென்று, மீண்டும் பத்திரமாக பூமிக்கு கொண்டு வரும் பணியை ஏற்றுக்கொண்டது.

இதற்காக 'ஸ்டார் லைனர்' எனும் ஸ்பேஸ் ஷிப்பையும் தயாரித்தது. இந்த ஷிப் மூலம் கடந்த ஜூன் 5ஆம் திகதி அமெரிக்காவின் கேப் கனாவெரல் ஏவுதளத்திலிருந்து சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சுனிதாவும், வில்மோரும் அனுப்பி வைக்கப்பட்டனர். இரண்டு நாட்கள் கழித்து, அதாவது ஜூன் 7ஆம் திகதியன்று ஸ்டார் லைனர் சர்வதேச விண்வெளி மையத்தை அடைந்தது.

ஆனால் இந்த பயணத்தை தொடங்குவதற்கு முன்னரே பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டிருந்தன. இரண்டு மூன்று முறை 'ஸ்டார் லைனரின்' பயணம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது. இப்படி இருக்கையில் தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து சுனிதா வில்லியம்ஸையும், புட்ச் வில்மோரையும் மீண்டும் பூமிக்கு அழைத்து வருவதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

ஜூன் 7ஆம் திகதி சர்வதேச விண்வெளி மையத்திற்கு சென்ற சுனிதா மற்றும் வில்மோர் ஜூன் 14ஆம் தேதி மீண்டும் பூமிக்கு திரும்பியிருக்க வேண்டும். ஆனால், ஸ்டார் லைனரில் ஏற்பட்ட ஹீலியம் வாயு கசிவு மற்றும் உந்து விசை கருவியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு ஆகியவை இந்த பயணத்தை மேலும் ஒரு வாரத்திற்கு தாமதிக்கச் செய்தது. இதன்படி ஜூன் 26 ஆம் திகதி இவரும் பூமிக்கு திரும்பியிருக்க வேண்டும்.

ஆனால், ஸ்டார் லைனரின் தொழில்நுட்ப கோளாறுகள் இன்னும் சரி செய்யப்படாததால், இன்று வரை இருவரும் பூமிக்கு திரும்பாமல் சர்வதேச விண்வெளி மையத்திலேயே சிக்கி தவிக்கின்றனர். இது நாசா விஞ்ஞானிகளிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து பூமிக்கு திரும்ப 6 மணி நேரங்கள் தேவைப்படும். இந்த 6 மணி நேர பயணத்தில் த்ரஸ்டர் ஃபெயிலியர், வால்வு லீக்கேஜ் ஆகிவை இல்லாமல் இருக்க வேண்டும்.

இப்படி இருக்கையில், சுனிதா வில்லியம்ஸ் திட்டமிட்டதை விட அதிக நாட்கள் விண்வெளியில் இருப்பதால் அவர் தசை மற்றும் எலும்பு அடர்த்தியை இழக்க நேரிடலாம் என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

விண்வெளியில் மனிதர்கள் அதிக நாட்கள் இருப்பதால் சில சிக்கலை எதிர்கொள்கின்றனர். இதில் முக்கியமானதுதான் எடையிழப்பு, தசை மற்றும் எலும்பு அடர்த்தி இழப்பு பிரச்சினை ஆகும்.

விண்வெளியில் புவியீர்ப்பு விசை பூஜ்ஜியமாக இருக்கும். எனவே தசைகள், எலும்புகளுக்கு எடையை தூக்கும் வேலை கிடையாது. தசைகள், எலும்புகளின் பயன்பாடு குறைவதால் நாளடைவில் தசை நார் அளவு மற்றும் எண்ணிக்கை குறைந்துவிடும். இதனால் தசை செயல்பாடு பலவீனமடையும். எலும்பு விஷயத்திலும் இதுதான் நடக்கும். எலும்பு பலவீனமடைந்து, அது உடைந்து போவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும்.

இது தவிர கண்களிலும் சில மாற்றங்கள் ஏற்படும். அதாவது விண்வெளியில் இருப்பதால் மூளை மற்றும் கண்களில் அழுத்தம் அதிகரிக்கும். இது மங்கலான பார்வை, இரட்டை பார்வை மற்றும் கண் திரிபு போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தற்போது சுனிதா வில்லியம்ஸும் இந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலையில் இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.



## விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் விடுத்துள்ள எச்சரிக்கை



# தாய்ப்பாலுக்கு ஈடான போஷாக்கு உணவு கிடையாது



## உலக தாய்ப்பால் வாரமாக வருடா வருடம் ஓகஸ்ட் மாதம் முதல் வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதன் நிமித்தம் இக்கட்டுரை பிரசுரமாகிறது

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும் பிறந்தது முதல் ஆறு மாத காலப்பகுதிக்கு தாய்ப்பால் மாத்திரம் ஊட்டப்பட்ட வேண்டும் என்று மருத்துவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். தாய்ப்பாலுக்கு ஈடாக எந்தவொரு போஷாக்கு உணவும் முதல் ஆறு மாத காலப்பகுதிக்குக் கிடையாது. அதன் காரணத்தினால் தான் தாய்ப்பால் ஊட்டல் ஊக்குவிக்கப்படுகிறது.

பொதுவாக ஒவ்வொரு தாய்மாருக்கும் நாளொன்றுக்கு 600 மில்லி முதல் 1000 மில்லி வரை தாய்ப்பால் சுரக்க முடியும். பருமனானவர், ஒல்லியானவர் என்றெல்லாம் எந்தப் பாகுபாடும் இதில் இல்லை.

குழந்தையின் மூளை வளர்ச்சிக்குத் தேவையான முக்கியப் புரதமான லாக்டல்புமின் (lactalbumin) தாய்ப்பாலில் தான் உள்ளது. இது ஏனைய பிற மாற்றுப் பொருட்களில் இருக்காது.

குழந்தைகளுக்கு ஏற்படும் நிமோனியா, வயிற்றோட்டம், சளி, காய்ச்சல் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தக்கூடியதும் நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிக்கக்கூடியதுமான திறன் இதற்குள்ளது. தாய்ப்பால் அருந்தும்போது குழந்தையின் நா, வாய் போன்றவை அசைந்து செயற்படும். புட்டிப் பாலை பயன்படுத்தும்போது, அது குழந்தைகளின் நோயெதிர்ப்புச்சக்தியை குறைத்துவிடலாம். மார்பகத்தில் இருந்து நேராக பால் புகட்டும்போது தாய்க்கும் சேய்க்குமான அன்பு உறவு வளரும். குழந்தை பாதுகாப்பாக இருப்பதாக உணரும்.

தாய்ப்பாலைத் தவிர பிற மாற்றுப் பொருட்களையும் குழந்தையால் எடுத்துக்கொள்ள இயலும். ஆனால் பசுப்பால் போன்ற மாற்றுப் பொருட்களில் உள்ள உப்புச்சத்துகள் போன்றவை குழந்தைகளின் இளம் சிறுநீரகத்துக்கு செறிவுமிக்கதாக இருக்கலாம். அதன் ஊடாக குழந்தைகளுக்கு சிரமங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே தான் குழந்தைகளுக்கு 6 மாதங்கள் வரை தாய்ப்பால் கட்டாயம் என வலியுறுத்தப்படுகிறது.

தாய்ப்பால் தவிர்ந்த பிற பொருட்களை வழங்குவது குழந்தையின் வளர்ச்சியில் சிக்கல்களை ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது. அதனால் உலக தாய்ப்பாலூட்டல் வாரத்தையொட்டி இலங்கையிலும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.



# மானுடவியல்



175

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகத்திலே "சதுரம்மறை" என்னும் முதற்றிருப்பாட்டுப் பாடியமாத்திரத்தில் திருக்கதவு அடைக்கப்பட்டது. அதுகண்டு, நாயன்மாரிருவரும் திருவருளை வியந்து களிப்புற்று வணங்கினார்கள். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தாம் எடுத்த திருப்பதிகத்தை முடித்தருளினார். அன்று தொடுத்து அந்தத் திருக்கதவு திறத்தலும் அடைத்தலுமாகிய வழக்கம் என்றும் நிகழ்ந்தது. அங்கே நிகழ்ந்த அற்புதத்தைக் கண்ட அடியார்கள் சமஸ்தரும் ஆச்சரியங்கொண்டு, உரோமாஞ்சங்கொள்ள கண்ணீர்சொரிய நாயன்மாரிருவருடைய திருவடிகளிலும் விழுந்து நமஸ்கரித்தார்கள்.

நாயன்மாரிருவரும் திருமடத்தை அடைந்தபின் திருநாவுக்கரசு நாயனார் "சிவபெருமான் ஆதியிலே அருளிச் செய்த முதனூலாகிய வேதங்களின் தாற்பரியங்களை அமைத்துத் தமிழ் வேதஞ் செய்தருளும் சிவாநுபூதிப் பெருவாழ்வாகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தாமே அக்கடவுளைப்போல அருட்செய்கை செய்ய வல்லவர். அவரொழிந்த என்போலும் அடியார்களுக்கு அவ்வேதங்களோடு இடையீடு பெரிதாகும். அவ்வேதங்களாலே திருக்காப்புச் செய்யப் பட்ட திருக்கதவு என்பாடலினல் அரிதிற்றிறக்கப்பட்டதும், அவர் பாடலினால் எளிதில் அடைக்கப்பட்டதும் இதனாலன்றோ" என்று சிந்தித்து, அருநித்திரை செய்தார். அப்பொழுது பரமசிவன் அவரிடத்திற் சென்று, "நாம் வாய்மூரிலே இருப்போம், அவ்விடத்திற்குத் தொடர்ந்து வா" என்று அருளிச் செய்துபோக; அப்பமூர்த்தி அவருக்குப்பின் விரைந்து சென்றார். நெடும்போது சென்றதும், அவரைச் சமீபிக்கப்பெற்றிலர். சுவாமி சமீபத்திலே காட்சி கொடுப்பவர்போல ஒரு திருக்கோயிலை எதிரே காண்பித்து, அதனுள்ளே புகுந்தருள; அப்பமூர்த்தியும் அவ்விடத்திலே விரைந்து தொடர்ந்தார். பிள்ளையாரும், அப்பமூர்த்தி திருவாய்மூருக்குப் போகின்றார் என்று கேள்வியுற்று, வந்து சேர்ந்தார். அப்போது பரமசிவன் பார்வதியாரோடு ஆடல் காட்ட; பிள்ளையார் தரிசித்துத் திருப்பதிகம் பாடினார். பின் அப்பமூர்த்தியோடு திருவாய்மூருக்குப் போய், சுவாமிதரிசனஞ் செய்து கொண்டிருந்து, சிலநாளாயின பின், வேதாரணியத்துக்குத் திரும்பி வந்து, சுவாமி தரிசனஞ் செய்து கொண்டிருந்தார். அது நிற்க.



பாண்டிநாட்டிலே பாண்டியராஜன் தான் பூர்வஜென்மத்திலே செய்த தீவினையினால், உலகமெல்லாம் இப்படியே நித்தியமாய் இருக்கும் அருகேசுரன் குருத்துவமாத்திரத்திலே கருத்தாவாய் இருப்பன் எனப்பிதற்றுகின்றபடிகளாகிய சமணர்களுடைய துர்ப்போதனையை மெய்யென்று துணிந்து, சத்தியமார்க்கமாகிய சைவத்தை விட்டு, அவர்களுடைய அசத்திய மார்க்கமாகிய ஆருகதமதத்திலே பிரவேசித்தான்.

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# ஆடி போக வைக்கும் ஆடி மாதம்

சூரியனை அடிப்படையாகக் கொண்ட மாதங்கள் நம் தமிழ் மாதங்கள். சூரியபகவான் கடக ராசியில் சஞ்சரிக்கும் மாதமே ஆடி மாதம். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையிலான ஆறு மாதங்களும் தட்சிணாயன புண்ணியகாலம் எனப்படும். சூரிய பகவான் தனது வடக்கு முகமான பயணத்தை முடித்துத் தெற்கு திசை நோக்கிய பயணமே தட்சிணாயனம். தெற்கு என்பதே பித்ருக்களின் திசையைக் குறிக்கும். அதனால்தான் இந்தக் காலத்தில் மிகுதியாகப் பித்ருக்களுக்கு பிரீத்தி செய்யும் வழிபாடுகள் மிகுதியாக இருக்கும்.



இந்த ஆடி மாதத்தில் மற்றுமொரு சிறப்பு, ஆறு மாதத்துக்கும் மேலாகச் சந்திரனைத் தவிர வேறு கிரகங்கள் அனைத்தும் கேதுவுக்கும் ராகுவுக்கும் இடையிலேயே அடைபட்டு இருக்கின்றன. சந்திரனும் மாதத்தில் பாதி நாள்கள் கேதுவுக்கும் ராகுவுக்கும் இடையில் நகர்ந்து கால சர்ப்ப தோஷம் அமைந்தது. கடந்த டிசம்பர் மாதம் தனுசு ராசியில் ஆறு கிரக சேர்க்கை ஏற்பட்டது. இதன்பின்தான் நோய் தொற்று தோன்றி உலகையே ஆட்டிவைத்தது. தற்போது ஆரோக்கியத்துக்கு அதிபதியான சூரியன் அந்த நிலையை உடைத்து வெளியே வருவது மிகவும் முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகிறது. எனவே, நோய்த் தொற்று படிப்படியாகக் குறையும் என்று நம்பப் படுகிறது.

ஆடி மாதத்தின் தொடக்கமே புண்ணியகாலமாகக் கருதப்படும். இந்த நாளில் முன்னோர்களுக்குரிய வழிபாடுகளைச் செய்வது மிகவும் புண்ணிய பலன்களைத் தரும். அதனால்தான் ஆடி மாதத்தின் முதல் நாளை ஆடிப் பண்டிகை என்றே சொல்வது வழக்கம்.

ஆடிமாதத்தில் வரும் மற்றுமொரு புண்ணிய தினம் அனைவரும் தவறவிடக் கூடாத, ஆடி அமாவாசை. ஆடி அமாவாசை அன்று சமுத்திரக் கரைகளிலும் நதிக்கரைகளிலும் கூடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் தரும் வழக்கம் உண்டு. இந்த நாளில் செய்யும் முன்னோர் வழிபாடு வாழ்வில் முன்வினை காரணமாக உண்டாகும் தீவினைப் பயன்களைக் குறைத்து நல்வினைப் பயன்களை அதிகப்படுத்தும்.

## ஆடிப்பூரம்

பூமி தேவியின் அம்சமான ஆண்டாள் நாச்சியார் இந்த பூலோகத்தில் அவதரித்த திருநாள். அன்னை பார்வதி தேவி இந்த உலகின் நன்மைக்காக பூலோகத்தில் தோன்றிய தினமும் ஆடிப்பூரம் என்கின்றன புராணங்கள். பூர நட்சத்திர தினத்தில் அம்மன் வழிபாடும் ஆண்டாள் வழிபாடும் செய்வது மிகவும் பயனுடையதாகச் சொல்லப்படுகிறது. ஆடிப்பெருக்கு

ஆடி மாதம் என்பது விவசாயத்தைத் தொடங்கும் மாதம். மழை பொழிந்து நதியில் நீர்ப்பெருக்கு காணும் மாதம். அதனால்தான் ஆடிப் பட்டம் தேடி விதை என்னும் பழமொழி நம்மிடையே காணப்படுகிறது. நீரே நமக்கு உணவாகிறது. அந்த நீரை வழிபடும் நாள் ஆடிப்பெருக்கு. ஆடி மாதம் 18 ம் தேதி இது கொண்டாடப்படுவதால் பதினெட்டாம் பெருக்கு என்றும் சொல்லப்படுகிறது. காவிரித் தாயை இந்த நாளில் பூத்தூவிக் கொண்டாடும் மரபு நம்மிடையே உண்டு. அவ்வாறு செய்வதன் மூலம் நல்ல விளைச்சல் உண்டாகும் என்பது நம்பிக்கை.

இவை தவிர முருகக் கடவுளை வழிபட வேண்டிய ஆடிக் கிருத்திகை, ஹயக்கிரீவரை வழிபட வேண்டிய ஆடிப் பௌர்ணமி, ஹரியும் ஹரனும் ஒன்று என்று விளக்கும் ஆடித் தபசு என்று பல்வேறு சிறப்புகளும் இந்த மாதத்தில் உண்டு.

ஆடியில் அம்மன் வழிபாடு கட்டாயம் செய்ய வேண்டிய ஒன்று. ஆடி மாதம் காற்றடி காலமாகச் சொல்லப்படுவது. காற்றின் மூலம் பரவும் நோய்கள் அதிகரிக்கும் காலம் இது. எனவே இந்தக் காலத்தில் நோய்கள் நீங்க வீட்டில் வேப்பிலைக் காப்பிட்டு அம்மனை வழிபடும் மாதமாக இந்த ஆடி மாதத்தை நம் முன்னோர்கள் குறித்தனர். அம்மனை இந்த மாதத்தில் வீட்டுக்கு அழைத்து அவளுக்குகந்த கூழ் ஊற்றி வழிபடுவது வழக்கம். அனைத்து அம்மன் கோயில்களிலும் திருவிழாக்கள் நடைபெறும். கிராமங்களில் அனைத்து கிராம தேவதைக் கோயில்களிலும் விழாக்கள் களைகட்டும். எந்த தெய்வத்தை மறந்தாலும் குல தெய்வத்தை வழிபட மறக்கக் கூடாது என்பது பழமொழி. குலதெய்வ வழிபாடு செய்ய வேண்டிய மாதமாக இந்த ஆடி மாதம் திகழ்கிறது.












# நெஞ்சங்களை பக்தி உணர்வூட்டி நெகிழ வைத்த தீபம் அறநெறியின் கண்காட்சி

மத்திய மாகாணத்திலுள்ள கண்டி கிரிமெட்டிய தீபம் அறநெறி பாடசாலை மாணவர்களால் நடாத்தப்பட்ட இந்து சமய ஆன்மீகக் கண்காட்சி கிரிமெட்டிய பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. மத்திய மாகாண முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இராமநாதன் இந்தக் கண்காட்சியைப் பற்றி கூறியதாவது, கிரிமெட்டிய தீபம் அறநெறி பாடசாலையின் மாணவர்களால் நடாத்தப்பட்ட ஆன்மீகக் கண்காட்சி படங்களைப் பார்க்கும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தித் தந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி மாதுரிக்கு நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம். தீபம் அறநெறிக் குழந்தைகளுக்கும் ஒழுங்கமைத்த பொறுப்பாசிரியர் உட்பட அனைத்து ஆசிரியச் செல்வங்களுக்கும் நாவல்நகர் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பில் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார். மாணவர்களிடையேயும் பெற்றோர்களிடையேயும் ஆன்மீகப் பண்புகளை வளர்க்க இவ்வாறான ஆன்மீகச் செயற்பாடுகள் மிகவும் உந்து சக்தியாக அமையும். மலையகத்தில் ஒரு பின்தங்கிய நிலையிலுள்ள பகுதியில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அறநெறிப் பாடசாலையை நடத்தி வருவதே போற்றத்தக்க ஒரு விடயமாகும். பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தாலும் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடத்தப்பட்ட இந்த கண்காட்சி பாரிய வெற்றியை அளித்துள்ளது. ஆன்மீகப் பண்புகள், விழுமியங்கள் அனைத்தும் இதில் அச்சொட்டாக அமைந்திருந்தன. கண்களால் காணும் அனைத்து நெஞ்சங்களையும் ஆன்மீக மழையில் நனைந்து ஆனந்தத் தாண்டவம் ஆட வைத்தது இந்த ஆன்மீகச் செயற்பாடு. இதனை நடத்திய அறநெறி பாடசாலையின் மாணவ மாணவிகளும் நடத்துவதற்கு பேருதவி புரிந்த பொறுப்பாசிரியர், பெற்றோர்களும் வழிகாட்டி ஊக்குவித்த ஆசிரியர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். அனைத்து நெஞ்சங்களையும் பக்தி உணர்வூட்டி நெகிழ வைத்தது தீபம் அறநெறி பாடசாலையின் ஆன்மீகக் கண்காட்சி என்றால் அது மிகையாகாது.

# அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**20171) இறை உண்மையை எடுத்துரைக்கும் நூல்கள் எவை?** வேதமும் ஆகமமும்

**20172) இவை இரண்டும் யாரால் அருளிச் செய்யப்பட்டவை?** இறைவனால்

**20173) இவற்றுள் பொது நூல் எது?** வேதம்

**20174) இவற்றுள் சிறப்பு நூல் எது?** ஆகமம்

**20175) வேதத்தின் முடிவான வேதாந்தமும், ஆகமத்தின் முடிவான ஆகமாந்தமும் (அதாவது சித்தாந்தமும்) என்னவென்று கூறுவர்?** வேறுபட்டவை என்று கூறுவர்.

**20176) ஆயினும், இவற்றின் உண்மைப் பொருளைத் தெளிந்த ஞானிகளுக்கு இரண்டும் எப்படிப்பட்டதாக இருப்பதாக சொல்லப்படுகிறது?** வேறுபாடு இல்லாதவைகளாக.

**20177) வேத, ஆகமங்கள் யாருடைய மொழியாகவே கருதப்படுகின்றன?** இறைவனுடைய

**20178) "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்று பாடியவர் யார்?** மாணிக்க வாசகப் பெருமான்

**20179) வேத காலத்து முனிவர்கள் பற்றி கூறுவதாக இருந்தால்?** உலக விஷயங்களில் பற்று வைக்காமல் எல்லாவற்றிருக்கும் மேலான பரம்பொருளை ஆர்வத்துடன் நாடினார்கள்.

**20180) வேத காலத்து முனிவர்கள் பற்றி வேறு என்ன கூறலாம்?** சீரிய முறையில் இறைவனைப் பற்றிச் சிந்தித்தவர்களாக, தங்கள் உள்ளத்தை அவர்கள் ஆழ்ந்து ஆராய முற்பட்டார்கள்.

அதன் விளைவாக இறை உணர்வு முழுதும் பெற்ற அருட் பெரியார்களுடைய உள்ளங்களில் வேதங்கள், கனிந்த அனுபவமாக எழுந்தன.

# ஆரையம்பதி ஸ்ரீபேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவம்



ஆரையம்பதி ஸ்ரீபேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவ சடங்கு நிகழ்வில் ஆடிவெள்ளி பக்தி மிகு தீமிதிப்பு வைபவம் மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. இத்தீ மிதிப்பை நூற்றுக்கணக்கான பக்தர்கள் கண்டுகளித்தனர். இத் தீமிதிப்பில் கலந்துகொண்ட பக்தர்கள் தங்களது நேர்த்தியைச் செலுத்தினர். அதிகமான பெண்களும் சிறுமிகளும் கற்பூரச் சட்டியை ஏந்திய வண்ணம் தீமிதிப்பில் கலந்துகொண்டு தங்களது நேர்த்திகளைச் செலுத்தினர்.









# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 97



மனித வாழ்க்கைக்கும் ஒரு மூல விதை உள்ளது. அதனை நாம் கடவுள் என்றும், பரப்பிரம்மம் என்றும் பரமாத்மா என்றும் பகருகிறோம். மூல விதையான பரமாத் மாவிடமிருந்து நாம் விலகிச் செல்வதால் தான் மனிதர்களாகிய நாம் அமைதியிழந்து, புனிதம் கெட்டு தனிப்பட்டு நிற்கிறோம்.

வாழ்க்கையின் மூலாதாரமாக இறைவனுடன் நாம் நம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் அவன் மனம் விசாலமடையும். சமுதாயக் கடலில் மூழ்குவதால் தனி மனிதன் தன்னுடைய அகந்தை, சுயநலம். பதுக்கல், ஹிம்சை. சூழ்ச்சி போன்ற தீயவைகளிலிருந்து விடுபட முடியும். பரமாத்மாவுடன் ஒன்று சேர்வதால். பொறாமை, தனிமை மரண பயம் போன்றவை நீங்கும். விளங்கும்

நாலாபுறமும் பரவியிருப்பது மரத்தின் இயல்பு, நாமும் பரந்த மனப்பான்மையுடன் செயல் புரிவோம். வீடு, குடும்பம், சமூகம், தேசம். உலகம் ஆகியவைகளுடன் அன்பு, பாசம், மரியதை நற்குணம் வெளிப்படுத்துவோம். நிழல் வேண்டுவோர்க்கு நிழலாகவும், மழை வேண்டுவோர்க்கு மழையாகவும், உதவி வேண்டுவோர்க்கு உதவி வழங்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும். தனி மனிதனாக இருந்து உதவுவதை விட சமூகத்துடன் சேர்ந்து உதவும் போது பரந்தளவில் உதவிட முடியும்.

நம் நிலை உயரும் போது நாம் கடவுளை மறந்து விடக் கூடாது. மறந்தால் மீண்டும் நாம் ஜடப் பொருளாகி விடுவோம். அந்த ஜடப் பொருள்களிலிருந்து விலகி, மேம்பட்டு இறைவனை பரமாத்மாவை அடைவதற்காகத்தான் இந்த நமக்கு மானுடப்பிறவி கிடைத்துள்ளது. சின்னதாக ஒரு சங்கடம் வந்து விட்டாலே பலர் பெரிய அளவில் பயந்து குய்யோ முய்யோ என கதறுவதை நாம் பார்த்துள்ளோம். கடவுள் மீதே அவர்களுக்கு அவநம்பிக்கை வந்து விடுகிறது. இது முறையல்ல, சரியல்ல. வாழ்வில் எந்நேரமும், எப்போதும் பிரச்சினைகள் வரத்தான் செய்யும். அதற்காக, நாம் கலங்கி விடக் கூடாது. இம்மாதியான சங்கடங்கள் கடவுள் தன் குழந்தைகளிடம் விளையாடும் ஒரு விளையாட்டு என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பேப்பரில் வரையப்பட்ட பூதம், சிங்கம், புலி போன்ற முகமூடி அணிந்து கொண்டு ஒரு தந்தை குழந்தைகளிடம் வேடிக்கை காட்டுவது போலவே சில சங்கடங்களை தந்து கடவுள் நம்மிடம் விளையாடுகிறார். தன் தந்தை முகமூடி அணிந்து பயப்படச் செய்வதை பழகிப் போன பின் குழந்தை பயப்படுவதை நிறுத்திக் கொள்ளும். இதே போல் சங்கடங்கள் தாங்கி கொள்ளக் கற்றுக் கொள்ளும் போது எப்பிரச்சனைகளையும் எதிர்த்து போராடும் குணம் நமக்கு உண்டாகும்.

கடவுள் மீது முழு நம்பிக்கை கொள்ளாதவனுக்குத் தான் பிரச்சினைகள் பயமுறுத்தும். அப்படிப்பட்டவன் தான் சூழ்நிலையை கண்டு பயப்படுகிறான். எவன் கடவுளிடம் முழு நம்பிக்கை வைத்துள்ளானோ, கடவுளை சர்வ ஒருவன் வல்லமை படைத்தவனாகக் கருதுகிறானோ, கடவுள் நிச்சயம் நமக்கு கருணை காட்டுவார் என நம்புகிறானோ, கடவுளை தாய் தந்தையாக கருகிறானோ அவனுக்கு எந்த சூழ்நிலையும் நல்லதையே செய்யும். கடவுளின் தொடர்பை துண்டித்துக் கொண்டவனே அனைத்திற்கும் பயப்படுவான்.

# மட்டக்குளி ஸ்ரீபத்ரகாளியம்மன் ஆலய ஆடிப்பூர பாற்குட பவனி

கொழும்பு 15, 279, பர்கியூஷன் வீதி, மட்டக்குளியில் அமைந்துள்ள ஸ்ரீபத்ரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆடிப்பூர பால்குட பவனி எதிர்வரும் 07 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இவ்வாலயத்தின் பாற்குட பவனி கொழும்பு 15, பர்கியூஷன் வீதி, மட்டக்குளியில் அமைந்துள்ள முனிஸ்வரர் ஆலயத்தில் இருந்து அன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். இந்த பால்குட பவனி ஆலயத்தை வந்தடைந்ததும் அம்பாளுக்கு அபிஷேகம், என்பன நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும். அன்று மாலை 6 சீர்வரிசை கொண்டு வரும் நிகழ்வு நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

## ஏழு கோடி ரூபா...

இதன் பெறுமதி ஏழு கோடி ரூபாவென கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இதில்,மூன்று சந்தேக நபர்களும் கைதாகினர்.

கைதானவர்கள் மன்னார் மற்றும் வலைப்பாடு பகுதிகளைச் சேர்ந்த 22 வயது முதல் 35 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

## லெபனானில் இலங்கையரின்...

செயற்படுகிறது.தற்போது 7,600க்கும் அதிகமான இலங்கையர்கள் லெபனானில் உள்ளனர்.

அவர்களில் சுமார் 25 பேர், யுத்தம் நிலவும் தென் பிராந்தியங்களில் வசிக்கின்றனர்.

எனினும்,பாதுகாப்பு கெடுபிடிகள் இன்றி அவர்கள் உள்ளனர்.

லெபனானில் உள்ள இலங்கையர்கள் நடமாட்டத்தை மட்டுப்படுத்தி, மக்கள் கூடும் இடங்களைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இஸ்ரேலிலிருந்து டுபாய், அபுதாபி மற்றும் புதுடில்லி ஊடாக கொழும்புக்கு வருவதற்கான விமானங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இலங்கை தூதுவர் நிமல் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

விமான நிலையத்திற்கு செல்வதற்கு முன்னர்,நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்குமாறும் இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை,மத்திய கிழக்கில் அதிகரித்துள்ள யுத்த பதற்றம் காரணமாக லெபனானை விட்டு வெளியேறுமாறு அமெரிக்கா, உட்பட பல நாடுகள் அங்குள்ள தமது பிரஜைகளை வலியுறுத்தியுள்ளன.

பிரிட்டன், சுவீடன்,பிரான்ஸ்,கனடா மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகள் இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பொருளாதார மூலோபாய...

கல்வி மத்திய நிலையங்களாக அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தினார்.

மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் டி. சிவநாதன், செயலாளர் எச்.ஐ.அஜித் உள்ளிட்ட சட்டத்தரணிகள் பலர் இதில் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் செயற்பாட்டாளர்களின் சந்திப்பும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் நடைபெற்றது. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் மற்றும் புத்துயிரளிக்கும் பிரதான பொருளாதார மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்கள் தொடர்பில், இதன் போது சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி விளக்கமளித்தார்.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவாலை விளக்கிய ஜனாதிபதி, நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) உடன்படிக்கைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்கும் நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்த ஒப்பந்தங்களை மாற்ற முயற்சிப்பதன் மூலம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய நிதியுதவியை இழக்க நேரிடும் என்றும் தெரிவித்தார். ஐ.எம்.எப் ஒப்பந்தங்களை மாற்றினால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகள் தொடர்பிலும் ஜனாதிபதி இங்கு தெளிவுபடுத்தினார்.

2035ஆம் ஆண்டுக்குள் இலங்கையை ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நாடாக மாற்றும் திட்டத்தையும் தெளிபுபடுத்திய ஜனாதிபதி, அதற்காகவே பொருளாதார பரிமாற்றச் சட்டம் கொண்டுவரப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

மாகாணங்களுக்கிடையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்திய ஜனாதிபதி,மத்திய அரசாங்கத்தின் சுமையை குறைத்து மாகாணங்களுக்கு அபிவிருத்தியை பகிர்ந்தளிக்கும் வகையில் மாகாண சபைகளை பலப்படுத்துவதே தமது நோக்கம் எனவும் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வி. கனகசிங்கம், சிவில் அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ். மாமாங்கராஜா, உப தலைவர் எம். செல்வராஜா உட்பட சிவில் அமைப்புக்களின் ஒன்றிய உறுப்பினர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.மேலும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்,தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரும் ஜனாதிபதியுடனான இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## சமய, சமூகப்பணிகளில்...

இயற்கைச் சீற்றங்களால் அழிந்த உயிர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார்.

முதியோர் மையங்கள் மற்றும் பராமரிப்பு மையங்களுக்கும் இயன்றளவு உதவியவர்.

சமூக சேவைக்காக பிரித்தானிய அரசியின் கௌரவ விருதையும் இவர் பெற்றிருந்தார்.

தாய்லாந்து, ஜப்பான், தாய்வான், கொரியா மற்றும் சிங்கப்பூர் போன்ற ஆசிய நாடுகளிலும் மேற்குலக நாடுகளிலும் தேரவாத மதப் பணிகளை பிரபலப்படுத்த அவர் எடுத்து முயற்சிகள் அளப்பரியவை.

தேவையான அனைத்து வளங்களுடனும் இந்த பணிகளை அவர் தொடங்கவில்லை. நிர்வாகத் திறமையும் உறுதியும் மட்டுமே அவரிடம் இருந்தன . அந்த இரண்டு பலத்தையும் கொண்டு பல காரியங்களை அவர் சாதித்தார்.

எனவே, அவரை சிறிய துறவி என்று கூறினாலும் உறுதிப்பாட்டின் அடிப்படையில் மிகப்பெரிய துறவியாகவே அவரைக் கருத வேண்டும். நமது நாட்டிற்காக பல சிறந்த சமய மற்றும் சமூக சேவைகளை ஆற்றிய வணக்கத்திற்குரிய கலபொட ஞானிஸ்ஸர தேரரின் ஆன்மா சாந்தியடையட்டும்.

இவ்வாறு தனது இரங்கல் செய்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## தபால் மூல வாக்கு...

மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு கிடைக்க வேண்டும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எனினும் இன்றைய தினம் விண்ணப்பங்களை தபாலிடல் அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வதற்கு காரணமாக அமையாது என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2024 ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெற வுள்ளது. அந்த வகையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்காக நேற்று வரை 14 வேட்பாளர்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட 8 அரசியல் கட்சிகளும் மேலும் ஒரு அரசியல் கட்சியும் 5 சுயாதீன வேட்பாளர்களும் இவ்வாறு கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணத்தை பொறுப்பேற்கும் காலம் ஜூலை 26 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 14ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வழங்கப்பட்டுள்ளது.

அதே வேளை,ஆகஸ்ட் 15 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் முற்பகல் 11:30 மணிவரை வேட்புமனு தாக்கல் இடம் பெற வுள்ளது. அந்த காலத்துக்குள்ளேயே ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் ஆணுக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## கட்சியை விட நாடே...

தமது பிரதேச மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலேயே, இம்முறை தேர்தலில் தாம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் விடுதலை முன்னணிக்கு இந்த நாட்டை தாரை வார்க்க முடியாது. அதே வேளை, காலையில் ஒன்றை தெரிவித்து விட்டு அன்று மாலையே வேறு எதையோ கூறி வரும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடமும் நாட்டைக் கையளிக்க முடியாது. இந்த வாய்ச்சொல் வீரரான தலைவர்களுக்கு எமது தாய் நாட்டைக் கொடுப்பதா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். நாட்டின் நலன் கருதி நான், ஒரு முடிவை எடுத்துள்ளேன். மக்களின் நிலைப்பாட்டுக்குத் தலை வணங்கி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இந்த நாட்டின் ஜனாதிபதியாக்க நான், பூரண ஆதரவை வழங்குவேன். அவரின் வெற்றிக்கான வேலைத் திட்டங்களுக்கு தயாராகி வருகிறேன். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சட்டபூர்வ உரிமையின்றி...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முழுமையான சட்ட ரீதியான உரிமை எமது தரப்பினருக்கே உள்ளது. எனினும் கட்சியுடன் எந்த உத்தியோகபூர்வ உரிமையும் இல்லாத தயாசிறி ஜயசேகர, விஜேதாச ராஜபக்ச ஆகியோர் அந்த கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் தலைவர் பதவிகளை உபயோகித்து ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒத்துழைப்பு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளனர்.

இவர்கள் இருவருக்கும் கட்சியின் நடவடிக்கைகளில் தடை ஏற்படுத்தாமல் இருக்க நீதிமன்றம் தடையுத்தரவும் பிறப்பித்துள்ளது.

இவ்வாறான நிலையிலும் கட்சி ஆதரவாளர்களை திசை திருப்பும் வகையில், இவர்கள் பதவிகளையும் கட்சியின் பெயரையும் உபயோகித்து செயற்படுவதற்கு எந்த விதத்திலும் அவர்களுக்கு சட்டபூர்வமான உத்தியோகப்பூர்வ உரிமை கிடையாது. அதற்கிணங்க அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தாய், மகள் உட்பட...

கராண்டுகல பொலிஸ் நிலையத்தில் தற்கொலை செய்து கொண்ட பொலிஸ் உத்தியோகத்தரே மேற்படி இரண்டு பெண்களையும் மற்ற பொலிஸ் உத்தியோகத்தரையும் கொலை செய்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

காணித் தகராறு ஒன்றே இந்த கொலைகளுக்கு காரணமாக இருந்திருக்கலாம் என்றும் அவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். கொல்லப்பட்ட பொலிஸார் 33 வயதுடையவர் என்றும் தற்கொலை செய்த பொலிஸார் 42 வயதுடையவர் என்றும் தெரிய வந்துள்ளது.

## கட்சிக்கு மீண்டும் வருவோருக்கு...

கட்சிக்குள் உள் வரவும் கட்சியை விட்டு வெளியேறவும் முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.இது பற்றி கருத்து தெரிவித்த நாமல்ராஜபக்ஷ;

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் மீண்டும் வர விரும்புவோருக்கு கதவுகள் திறந்தே உள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம் சந்திரசேனவுக்காக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச நிபந்தனையற்ற விதத்தில் செயற்பட்டார். அவர் எதிர்பார்த்த பதவியை பெற்றுக் கொடுப்பதற்காக முயற்சி செய்தார். இதனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மன வருத்தப் படும் நிலைமையும் ஏற்பட்டது. எமது செயற்பாடுகள் தூய்மையானவை. நாம் அவர்களுக்காக உச்ச அளவில் செயற்பட்டோம். எனினும் அவர்கள் தற்போது மேற்கொண்டுள்ள தீர்மானம் சரியானதா என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொருளாதார வளர்ச்சியை...

நிலைப்பாடு என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கான விஜயத்தை முடித்துக் கொண்ட பின்னர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை தொடர்பில், தெளிவுபடுத்தும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீற்றர் ப்ரூவர் நாட்டின் பொருளாதார வளர்ச்சி காலாண்டுக்குக் காலாண்டு முன்னேற்றமடைவது தொடர்பில் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்தல் தொடர்பிலும் பணவீக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு கையிருப்பை அதிகரித்தல் தொடர்பிலும் அவர் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் சில தரப்பினர் வெளியிடும் கூற்றுக்கள் தொடர்பில், அவதானமாக செயற்படுவது அவசியம் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தல்: அச்சக...

செலவிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டின் நீளம் 27 அங்குலமாக காணப்பட்டது. இம்முறை அதன் நீளம் மேலும் அதிகரிக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்பார்க்கும் வகையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில், வாக்குச் சீட்டின் நீளமும் அதிகரிக்கும் என்றும் அதற்கிணங்க அச்சீட்டு செலவுகளும் அதற்கு ஏற்ப, அதிகரிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புத்தபெருமானின் போதனைகள்

...(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

"இலங்கை அரசின் முதன்மையான கடமையும் பொறுப்பும் பௌத்த சாசனத்தை பேணிக்காப்பதாகும்." ஜேர்மன் தம்ம போதனை சங்கத்தின் செயலாளர் சேனக வீரரத்ன, பெர்லின் விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்த பிரபல பௌத்த அறிஞரான கலாநிதி பால் டால்கே 1919 ஆம் ஆண்டு பெர்லினின் புறநகர்ப் பகுதியான புரோனாவில் 11 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி 'Das BuddhistischeHaus' ஆரம்பித்ததையும் 1924 இல் அப்பணிகள் நிறைவடைந்ததையும் நினைவு கூர்ந்தார்.

ஜேர்மனிய தூதர் கலாநிதி பீலிக்ஸ் நியூமன் கூறுகையில், பெர்லின் விகாரை பல கலாசாரங்கள் மற்றும் பல மதங்களை ஜெர்மன் சமூகம் ஏற்றுக் கொண்டதன் வலிமைக்கு ஒரு சிறந்த சான்றாகும்.

புத்தர் பெருமான் போதித்த அன்பு மற்றும் காருண்யத்தை வளர்க்கும் கொள்கையில் ஜெர்மன் சமூகம் உறுதியாக உள்ளது என்றார்.

இந்த நிகழ்வில் “100 Years of Das BuddhisticheHaus in Berlin” என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், தபால் திணைக்களத்தினால் விசேட முத்திரையும் முதல் நாள் கடித உரையும் வெளியிடப்பட்டது.

# இன்றைய பலன்கள் (05.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
குடும்பத்தில் அமைதி நிலவும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். சில பணிகள் அலைக்கழிப்பை தரலாம்.



**ரிஷபம் :**
சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். எதிர்பார்க்கும் முக்கிய காரியங்கள் தள்ளிப் போகலாம்.



**மிதுனம்:**
கூட்டுத்தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம். அனேக காரியங்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.



**கடகம்:**
உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது அவசியம். எதிர்பார்த்து காத்திருக்கும் பணவரவு தாமதமாகலாம்.



**சிம்மம்:**
கூட்டுத் தொழிலில் லாபம் குறைக்கலாம். சில காரியங்கள் நடைபெறாமல் தள்ளிப்போய் கவலை ஏற்படுத்தும்.



**கன்னி:**
முக்கியமான காரியங்களை கொஞ்சம் தள்ளிப் போடுங்கள். கூட்டுத் தொழில் வியாபாரத்தில் நல்ல லாபம் ஏற்படலாம்.



**துலாம்:**
உத்தியோகத்தில் மற்றய பணியாளர்களின் சொந்த விஷயங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. பணவரவுகளில் தடைகளை தவிர்க்க முடியாது.



**விருச்சிகம்:**
சில காரியங்களில் வெற்றி பெற நண்பர்களின் உதவி தேவைப்படும். சிலருக்கு பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கலாம்.



**தனுசு:**
கூட்டுத் தொழில் நன்கு நடைபெறக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான போக்கு காணப்படும். முயற்சிகளில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள்.



**மகரம்:**
சொந்தத் தொழிலில் ஆதாயம் அதிகரிக்கலாம். புதிய வாடிக்கையாளர் ஒருவரின் பணியை முடிக்க ஓய்வின்றி உழைப்பீர்கள்.



**கும்பம்:**
ஊழியர்கள் எதிர்பார்க்கும் சலுகைகளை செய்து கொடுப்பீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரம் நல்ல லாபத்தை பெற்று தரும்.



**மீனம்:**
அவசர வேலை ஒன்றை உடனடியாக செய்ய வேண்டியது இருக்கும். வரவு செலவு சரிசமமாக இருக்கும்.

## பேருவளை இரத்தினக்கல்

...(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். பொருளாதாரம் வீழ்ந்து விடாமல் பாதுகாத்து நாட்டை தற்போதைய நிலைக்கு கொண்டு வந்தமைக்காகவே இவர்கள்,ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முன்வந்திருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் எம்.பி மர்ஜான் பழீல்,கட்சியின் மீதான மரியாதை மற்றும் அன்பை வெளிப்படுத்தியதுடன்,இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிக்காக ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கமைய களுத்துறை மாவட்ட பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அமோக வெற்றியை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றனர்.

பேருவளை தொகுதியில் மாணிக்கக்கல் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் ஃபழீல் உள்ளிட்ட வர்த்தக சமூகத்துடன் நேற்று முன்தினம் (03) நடத்திய சந்திப்பிலே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

வர்த்தகத் துறையை ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாற்றுவதற்கு ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றார். பெங்கொக் மற்றும் ஹொங்கொங்கை போன்று இரத்தினக்கற்கள் ஏற்றுமதிக்கு முற்றிலும் சுதந்திரமான சந்தை நிலைமையை உருவாக்க ஜனாதிபதி செயற்படுவார். சமீபத்தில் அந்த மாற்றங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டார்.

அத்துடன், நாட்டில் வரி தொடர்பில் நடவடிக்கைகளை தொடர்ந்து நாணயத்தாள்களை தடைசெய்யும் வகையில் இலங்கை மத்திய வங்கி மூலம் நடவடிக்கை மேற்கொண்டார். எந்த அரசாங்கமும் அதிக வட்டிக்கு கடன் வாங்கக்கூடாது என்பதற்காக கடன் கட்டுப்பாடு சட்டத்தையும் நிறைவேற்றினார். அரசியலில் உண்மைக்கு புறம்பான வாக்குறுதிகளை அளித்து வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பணம் ஒதுக்க முடியாது. இதற்காக நிதி முகாமைத்துவ சட்டத்தை ஜனாதிபதி கொண்டு வந்தார். அதன்படி, இனி வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க நாடாளுமன்றத்தில் தனி அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் திருட்டு, மோசடி மற்றும் ஊழல் செய்ய முடியாத வகையில் கடுமையான ஊழல் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த நாட்டை பொருளாதார அபிவிருத்தியின் உச்சத்திற்கு கொண்டு செல்லக்கூடிய பொருளாதார சிந்தனைகள் உள்ள ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. அவரை வெற்றிபெறச் செய்வதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம். இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

## ஷுஹதாக்களை நினைவுகூரும்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ரீ. ஜமால்தீன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வில் கத்தமுல் குர் ஆன் தமாம், சுகதாக்கள் ஞாபார்த்த உரை, சுகதாக்கள் ஞாபகார்த்த ஆவணப்படுத்தலுக்கான விளக்க உரை,“துஆப்பிராத்தனை”ஆகியன இடம்பெறவுள்ளன.

கொலைசெய்யப்பட்ட ஊனமுற்ற,காயமடைந்த முஸ்லிம்களின் விபரங்ககளையும் படங்களையும் உள்ளடக்கிய“சாட்சியமாகும் உயிர்களின் கதை” எனும் நூலும் வெளியிடப்படும்.முஸ்லிம் தேச இழப்பீட்டு ஆய்வு மையத்தினர் இந்நூலை தொகுத்துள்ளனர்.

விழா தொடர்பான எல்லா ஒழுங்குகளையும் அமைப்பின் செயலாளர் எம்.எல்.அப்துல் மஜீத் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டுவருகின்றனர்.

## ஸ்ரீ.மு,.கா, மலையக மக்கள்

...(3ஆம் பக்கத் தொடர்ச்சி

ஊடகவியலாளர் சந்திப்பின் போது, மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் கட்சியின் மேற்படி தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

## பொது ஜன பெரமுனவின்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கியுள்ளது. கம்பஹா மாவட்ட அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அதேவேளை அனுராதபுரம் மாவட்ட அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்ரசேன, மாத்தறை மாவட்ட அமைப்பாளரான அமைச்சர் கஞ்சன விஜேசேகர, காலி மாவட்ட அமைப்பாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரன ஆகியோரும் மாவட்ட அமைப்பாளர் பதவிகளில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர். இந்த வெற்றிடங்களுக்கே புதிதாக நான்கு பேர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# MEI அறக்கட்டளை ஏற்பாட்டில் வறிய மாணவர்களுக்கு உதவிகள்













MEI அறக்கட்டளை மற்றும் இளம் பெண்கள் முஸ்லிம் சங்கத்துடன் இணைந்து Colombo Times ஆதரவில் வறிய மாணவர்களுக்கு பாடசாலை காலணிகளை வழங்கும் வைபவம் அகில இலங்கை YMMA பேரவை மாநாட்டு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. விழாவின் பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தோனேசிய குடியரசின் தூதுவர் Dewi Gustina Tobing கலந்து சிறப்பித்தார். MEI அறக்கட்டளை செயலாளர் டாக்டர் கிபாயா இப்திகார், இளம் பெண்கள் முஸ்லிம் சங்கம் தலைவி பவாஸா தாஹா, வை. எம். எம். ஏ. தலைவர் அம்ஹர் ஷெரீப், சர்வதேச அலுவல்கள் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் மொஹமட் ரசூல்தீன், முன்னாள் தலைவர் காலித் எம். பாரூக், இலங்கை ஹஜ் கமிட்டி தலைவர் அன்சார் இப்ராஹிம் மற்றும் பாத்திமா முஸ்லிம் பெண்கள் கல்லூரி முன்னாள் அதிபர் ஷிஹானா அப்துல் சலாம் ஆகியோர் கலந்து கொண்டதோடு அதிதிகளினால் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள், காலணிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

**ருஸைக் பாரூக்**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 155,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள்**
**2024 ஒகஸ்ட் 07ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124K089 | LKA18225B074 | LKA36425H083 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 55,000 | 55,000 | 45,000 | 155,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 ஒகஸ்ட் 07
தீர்ப்பனவுத் திகதி : 2024 ஒகஸ்ட் 09
வழங்கப்படும் திகதி : 2024 ஒகஸ்ட் 09
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஒகஸ்ட் 07 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாமென்ற அதேவேளை மேலே குறிப்பிடப்பட்டவாறு குறைந்தபட்ச விலைக்குறிப்பீட்டுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# சவுதி அரேபியா நகரில் 44 ஆவது வருடமாக இடம்பெறவுள்ள சர்வதேச அல்குர்ஆன் மனனப் போட்டி



சவுதி அரேபியாவின் இஸ்லாமிய விவகாரங்கள் அழைப்பு மற்றும் வழிகாட்டல் அமைச்சரும், போட்டியின் பொது மேற்பார்வையாளருமான அஷ்ஷெய்க் கலாநிதி அப்துல்லா பின் அப்துல் லத்தீப் ஆலுஷேக் இரண்டு புனித மஸ்ஜிதுகளின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆலு சவூத்தின் முழுமையான ஆதரவிலும் கண்காணிப்பிலும் வருடா வருடம் நடத்தப்படும் 44 ஆவது சர்வதேச புனித அல்குர்ஆன் மனனப் போட்டிகள் வழமை போன்று இந்த வருடமும் நடத்துவதற்கான முழு ஏற்பாடுகளும் மேற்கொண்டுள்ளது.



எதிர்வரும் 08ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை நடைபெற உள்ள இப் போட்டியில் உலகின் பல பாகங்களில் இருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

புனித குர்ஆன் மற்றும் அதன் மீதான தொடர்பை மென்மேலும் வலுப்படுத்தும் நோக்கில் அதிக அக்கறை செலுத்தி வரும் சவுதி அரேபியா இந்த போட்டியை உலகளாவிய ரீதியில் வாழுகின்ற முஸ்லிம்கள் அல்குர்ஆனுடனான தொடர்பை மென்மேலும் பேண வேண்டும் என்பதற்காகவும் அவர்களின் உள்ளங்களில் அல்குர்ஆனை மனனமிட்டு அதன் வழிகாட்டல்களின் அடிப்படையில் செயல்பட வேண்டும் என்பதற்காகவும் இவ்வாறான சர்வதேச போட்டிகளை நடத்தி வருகின்றது.

புனித அல்குர்ஆனுக்கு சவுதி அரேபிய அரசாங்கம் சேவை செய்வதிலும் அதை அச்சிட்டு உலகளாவிய நாடுகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிப்பதிலும் கவனம் செலுத்தும் அதே நேரத்தில் இஸ்லாமிய குழந்தைகள் அதை மனப்பாடம் செய்தல், அதன் விளக்கங்களை அறிந்து கொள்வது போன்ற மிக முக்கியமான என்னக் கருவை அடிப்படையாகக் கொண்டு வருடா வருடம் இவ்வாறான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இஸ்லாமிய விவகாரங்கள் அழைப்பு மற்றும் வழிகாட்டல்கள் அமைச்சர் இந்த போட்டியை பற்றி கூறுகின்ற பொழுது, புனித அல்குர்ஆனுக்கு சேவை செய்வதிலும், அதை மனனம் செய்ய வேண்டும் என்பதில் இஸ்லாமியர்களை ஊக்குவிக்கும் மிகப்பெரிய ஒரு பொறுப்பை சவூதி அரேபிய அரசாங்கம் எடுத்துவருகின்றமை பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும். இந்தப் போட்டி சுமார் நான்கு தசாப்தங்களாக நடாத்தப்பட்டு வருகின்றமை போற்றப்பட வேண்டிய ஒரு விடயமாகும் என்றும் தெரிவித்தார்.

கலாநிதி அப்துல் லதீப் பின் அப்துல் அஸீஸ் ஆல் சுஊத் தொடர்ந்து கூறுகையில் இந்த சர்வதேச அல்குர்ஆன் மனனம் போட்டி சவுதி அரேபியாவின் நிர்வாக மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துல் ரஹ்மான் ஆல் சவுத்தின் பெயரைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இதற்கான முழுமையான பரிசில்களுக்குமான தொகையாக 40,00000 சவுதி அரேபியா ரியால்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகள் பின்வரும் மிக முக்கியமான ஐந்து பிரிவுகளில் நடத்தப்பட உள்ளன.

**முதல் பிரிவு : அல்குர்ஆன் முழுவதையும் ஏழு கிராத் அடிப்படையில் அதன் விளக்கத்தோடு மனனமாக ஓதுதல்.**

**இரண்டாம் பிரிவு: அல்குர்ஆன் முழுவதையும் மனனமாக தஜ்வீத் முறைப்படி இராகத்தோடு ஓதி அதன் சொற்களஞ்சியங்களின் விளக்கத்தையும் உள்ளடக்கியிருத்தல்.**

**மூன்றாம் பிரிவு : புனித அல்குர்ஆன் முழுவதையும் மனனமாக தஜ்வீத் முறைப்படி இராகமாக ஓதுதல்.**

**நான்காம் பிரிவு : அல்குர்ஆனில் 15 ஜுஸ்உக்களை தஜ்வீத் முறையில் திறம்பட இராகமாக மனனமாக ஓதுதல்.**

**ஐந்தாம் பிரிவு : நல்ல செயற்திறனோடு தஜ்வீத் அடிப்படையில் ஐந்து ஜுஸ்உக்களை மனனமாக ஓதுதல்.**

புனித அல்குர்ஆனை உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் மனனம் செய்ய வேண்டும் என்பதில் அவர்களை ஊக்குவிக்கும் மிகப்பெரிய ஒரு பொறுப்பை சவுதி அரேபியா அரசாங்கம் எடுத்த வருகின்றது பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும் என்றும் கலாநிதி அப்துல் லதீப் ஆலு ஷேக் தெரிவித்துள்ளார்கள்.

புனித மக்கமா நகரில் நடைபெறவிருக்கும் சர்வதேச அல்குர்ஆன் மனனப் போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கையிலிருந்து காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அரபுக் கல்லூரியின் மனனப் பிரிவில் சேர்ந்து அல்ஹாபிழ் பட்டம் பெற்ற A.R.M. ஷிபாக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



கே.எம். முஜீபுர் ரஹ்மான் (பலாஹி, மதனி)
அதிபர், இஸ்லாமிய கற்கைகள் பிரிவு,
அல்ஹுதா கல்லூரி, திஹாரிய.






# நகர்வலம்



# நாட்டு மக்களின் நலன் கருதியே நான் சரியான தீர்மானத்தை எடுத்தேன்

## இம்முறை தேர்தலில் ஜனாதிபதி ரணிலுக்கே எனது பூரண ஆதரவு

(அஜ்வாத் பாஸி)

நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலன் கருதியே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு தான் தீர்மானித்ததாக மீன்பிடி நீரியல்வளத்துறை இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

பேருவளையில் நேற்றைய தினம் (04) இடம்பெற்ற பொதுமக்களுடனான முக்கிய சந்திப்பொன்றிலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த,



இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடு அதளபாதாளத்தில் இருந்த நிலையில் இருந்து, இந்நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எனது முழுமையான ஆதரவை வழங்க நான் தீர்மானித்துள்ளேன். இந்த முடிவை நான் ஒருபோதும் மாற்றமாட்டேன். தொடர்ந்தும் இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லக்கூடிய ஒரு தலைவராக இன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க காணப்படுகிறார். அதனால்தான் ஜனாதிபதிக்கு பேராதரவு வழங்க நாட்டு மக்கள் முடிவெடுத்து விட்டனர். பொதுஜன பெரமுன கட்சியில் அமைச்சர்களான ரமேஷ் பாதிரன, பிரசன்ன ரணதுங்க மற்றும் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ போன்றோர் இருக்கும்போது கட்சி புதிய ஒருவரை வேட்பாளராக நிறுத்த முடிவு செய்தமை வருத்தமளிக்கும் செயல் என்று தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த, கட்சி பற்றியோ அல்லது அரசியல் நலன்கள் குறித்தோ சிந்திக்கும் நேரம் இது வல்ல. நாட்டின் நலன்தொடர்பில் சிந்தித்து முடிவெடுக்கும் நேரம் இதுவாகும். என்றும் கூறினார். ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகள் எத்தகைய முடிவுகளை எடுத்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பேராதரவு வழங்கும் முடிவை நாட்டு மக்கள் எடுத்துவிட்டனர்

பல சவால்களுக்கு மத்தியில் நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றபோது அவருக்கு ஆட்சியை முன்னெடுத்து செல்வதற்கு எமது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பெரும்பான்மை ஆதரவை வழங்கியதை ஞாபகப்படுத்திய இராஜாங்க அமைச்சர், தேர்தலில் நாம் பிரிந்து நின்று செயற்படுவது அவ்வளவு சிறப்பானதல்ல. இது இணைந்து பயணிக்க வேண்டிய தருணம். அதனால்தான், நான் அனைத்தையும் தூக்கியெறிந்து விட்டு நாடு என்ற வகையில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளேன். எவர் எதை குறிப்பிட்டாலும் நான் அதனை நம்ப தயாரில்லை. ஒப்பீட்டுரீதியாக களமிறங்கியுள்ள வேட்பாளர்களை நாம் நோக்குகின்றபோது, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்குரிய ஆளுமையும், அனுபவமும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமே இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த இதன்போது மேலும் தெரிவித்தார்.

## மல்வத்து ஓயாவிற்கு அருகில் சடலம் மீட்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் மல்வத்து ஓயா புதிய பாலத்திற்கு அருகிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள அடையாளம் தெரியாத நபரொருவரின் சடலம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சடலம் சிங்க கனுவவை அடுத்து ஓடுகின்ற புதிய மல்வத்து ஓயா பாலத்திற்கு கீழிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன் சடலம் யாருடையது என்பது தொடர்பில் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம்.ஜயவீர வின் மேற்பார்வையின் கீழ் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## புதையல் தோண்டிய 08 பேர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் விஜேபுர மற்றும் தெலவுகஸ்வெவ ஆகிய பகுதிகளில் புதையல் தோண்டியதாக சந்தேகிக்கப்படும் எட்டு பேரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளதாக அநுராதபுரம் மற்றும் கலென்பிந்துனுவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்கள் 23 65 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் பயாகல , கலென்பிந்துனுவெவ, சீன குடா , அநுராதபுரம், அம்பலாந்தோட்ட மற்றும் திக்வெல்ல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை கலென்பிந்துனுவெவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## அக்கரைப்பற்றில் ஐ. தே. க கிளை அலுவலகம் திறந்து வைப்பு



அக்கரைப்பற்று விசேட நிருபர்

ஐக்கிய தேசிய கட்சியின் கிளை அலுவலகமொன்று நேற்று மாலை அக்கரைப்பற்று மாநகர வலய (03) மூன்றாம் பிரிவில் திறந்து வைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று மூன்றாம் வலய அமைப்பாளர் எம். ஏ. சலீம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில், ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் முன்னணியின் அமைப்பாளர் சுதத் சந்திரசேகர பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் யூ. கே. ஆதம் லெப்பை (லொயிட்ஸ்) கிளைக் காரியாலயத்தின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இதன்போது கட்சி ஆதரவாளர்களும், தொண்டர்களும் கலந்து கண்டனர்.

கால்நடையாக நாட்டை சுற்றிவரும்...

## பேருவளை சஹ்மி சஹீதுக்கு மர்ஜான், இம்தியாஸ் வாழ்த்து

பேருவளை விசேட நிருபர்



நாட்டின் சுற்றுலாத் தளங்களை உலகறியச் செய்யும் நோக்குடன், இன மத வேறுபாடின்றி இலங்கையர்கள் அனைவரும் ஒற்றுமையானவர்கள் என்பதை உலகிற்கு பறைசாற்றும் நோக்குடனும்,நாட்டைச் சுற்றி கரையோரமாக நடந்து வரும் சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ள பேருவளை சஹ்மி சஹீத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல் மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை வரலாற்றை சற்று பின்னோக்கிப் பார்த்தால்,அரேபியர்கள் கால்பதித்த முதல் ஊர் என்ற சரித்திரப்புகழ் பேருவளைக்குத் தான் உள்ளது. அதனடிப்படையில் எம் முன்னோர்கள் பலர், பேருவளையின் தனித்துவத்தை உலகறியச் செய்யும் பல கட்ட முயற்சிகளை செய்திருப்பதை நாம் அறிவோம்.

அதே பாதையில், அதே உன்னத நோக்குடன் இன்று பேருவளையின் நாமத்தை உலகறியச் செய்யும் சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ள சஹ்மி ஷஹீத் வரலாற்றில் பதியப்பட வேண்டிய வரலாற்று செல்வன் என்றால் அது மிகையாகாது.

சஹ்மி, தன் பயணத்தின் இறுதிக் கட்டத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறார். அவரது அடுத்தகட்ட பயணங்களும் எந்தத் தடைகளும் இன்றி வெற்றிகரமாக கடந்து வர நாம் பிரார்த்தனை செய்கிறோம். அதுபோல் ஷஹ்மி பேருவளை நகரில் கால்பதிக்கும் போது, பேருவளை இளைஞர்கள் அனைவரும் திரண்டு அவரை உற்சாகமாக வரவேற்க வேண்டும். மேற்படி இளைஞனின் சாதனை பயணமானது, பேருவளைக்கு மட்டுமன்றி இலங்கைக்கு கிடைத்துள்ள பெருமையாகும்.



சஹ்மி சஹீதை பல்வேறு ஊறுகளிலும் உற்சாகப்படுத்தி வரவேற்ற, வரவேற்கின்ற அனைவருக்கும் எமது ஊர் மக்கள் சார்பில் நன்றிகளையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

## புத்தளம் நகர ஜம்இய்யத்துல் உலமா சபை ஏற்பாட்டில் இஸ்லாமிய கலாசார நிகழ்வு

புத்தளம் தினகரன் நிருபர்

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் ஏற்பாட்டில் இஸ்லாமிய கலை, கலாசார விழுமியங்களை மேம்படுத்தும் முகமாக இஸ்லாமிய கலைக் கலாசார நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகள் யாவும் புத்தளம் ஸாஹிரா தேசிய பாடசாலை மைதானத்தில் எதிர்வரும் 10 ம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் களிகம்பு அடித்து இஸ்லாமிய கீதம் இசைத்தல், ரபான் அடித்து இஸ்லாமிய கீதம், இஸ்லாமிய கீதங்கள், முஹர்ரம் மாதத்தின் சிறப்புக் கவிதை, ஓரங்க நாடகம், பிள்ளைகள் வளர்ப்பதற்கான வழிகாட்டல், கௌரவிப்பு நிகழ்வு மற்றும் பட்டிமன்றம் ஆகியன இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் ஆண்கள் பெண்கள் இருபாலாரும் கலந்து கொள்ள முடியும். பெண்களுக்கு தனி வசதிக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மேற்படிநிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் ஊடக பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## நாச்சியாதீவில் வீதி பெயர் பலகை திறப்பு

திறப்பனை தினகரன் நிருபர்



நாச்சியாதீவு அந் நூர் இளைஞர் சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட முதலாவது வீதிப்பலகை திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் நாச்சியாதீவில் இடம் பெற்றது.

நாச்சியாதீவு அந் நூர் இளைஞர் கழகத்தின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வு பாடசாலை வீதி பிரதான பாலத்திற்கு அருகாமையில், வைத்தியசாலை சந்தி, மைய வாடி வீதி ஆகிய மூன்று முக்கிய இடங்களில் நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலயம், அல் ஹிகம் அரபுக் கல்லூரி, தபால் நிலையம், நீர் தேக்கம் ஆகியவற்றை காட்டும் பெயர் பலகைகளாக காட்சிப்படுத்தப்பட்டு இவை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பொது மக்களின் போக்குவரத்துக்கு இலகுபடுத்தும் நோக்கில் இவ் வீதி பெயர் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் கனமூலை பாடசாலைக்கு ரூ. 37.5 லட்சம் நிதி ஒதுக்கீடு

### பாடசாலை சமூகம் அலிசப்ரி ரஹீம் எம்.பிக்கு பாராட்டு



புத்தளம், கனமூலை அரசினர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூட நிர்மாணம் மற்றும் உள்ளக பாதை அபவிருத்தி வேலைத்திட்டத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் ரூ. 37.5 இலட்சம் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார். இவ்வேலைத்திட்டம் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அன்மையில் பாடசாலையின் அதிபர் பீ.எம். முஸ்னி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜவ்சி, இணைப்பாளர் அமீர் அலி ஆசிரியர் உட்பட பாடசாலை நிர்வாகிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்களும் கலந்துகொண்டனர்.

# களுத்துறை மாவட்ட ஜனாஸா சேவைகள் சங்க ஏற்பாட்டில் விசேட கருத்தரங்கு

களுத்துறை மாவட்ட ஜனாஸா சேவைகள் சங்கத்தின் கருத்தரங்கொன்று அண்மையில் மக்கொன அல்ஹஸனியா மகாவித்தியாலயத்தில் லங்கா முஸ்லிம் ஜனாஸா சேவைகள் சங்கத்தின் தேசிய தலைவர் வைத்தியர் எம்.எம்.எம். முஸ்னியின் வழிகாட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முக்கிய வளவாளர்களாக இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸா சம்பந்தமான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னணியில் நின்று சேவை புரியும் லங்கா முஸ்லிம் ஜனாஸா சேவைகள் சங்கத்தின் தேசிய தலைவர் வைத்தியர் எம்.எம்.எம். முஸ்னியுடன் தேசிய அங்கத்தவர் ஐ.டி பரீட் மற்றும் வைத்தியர் பஷீர் முஸ்தபாவும் கலந்து சிறப்பித்தனர்.





தேசிய தலைவரின் உரையில் முஸ்லிம் ஜனாஸாக்களை விரைவில் பெற்றுக்கொள்வதற்கான தெளிவுகள், அவர்கள் சட்டத்தின் முன் வென்றெடுத்த பெறுபேறுகள், ஆலோசனைகள் என்பன முன்வைக்கப்பட்டன.

கருத்தரங்கில் களுத்துறை மாவட்டத்திலுள்ள களுத்துறை, பேருவலை, மக்கொனை, அளுத்கமை, அடுளுகமை, பாணந்துறையில் ஹேனமுல்ல தொட்டவத்தை, அம்பலந்துவை மற்றும் வியங்கல்லை, வெலிப்பன்னை இவர்களோடு அண்மித்த மாவட்டங்களாகிய துந்துவையும், மோதர போன்ற இன்னும் பல இடங்களிலிருந்தும் பிரமுகர்கள் கலந்துகொண்டமை விசேட அம்சமாகும். கேள்வி நேரத்தில் விடுக்கப்பட்ட வினாக்கள் அனைத்துக்கும் வைத்தியர் முஸ்னியவர்களால் தெளிவான பதில்கள் மொழியப்பட்டு சந்தேகங்களும் தீர்க்கப்பட்டன. அதேபோன்று, வைத்தியர் பஷீர் முஸ்தபா முஸ்லிம் சமூகத்திற்கு 'கொரோனா' காலத்தில் ஆற்றிய சேவைகளை நினைவுறுத்தி பாராட்டப் பட்டதோடு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

## நீர் நிலைக்குள் விழுந்து மீனவர் உயிரிழப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் மதுரங்குளி, மூக்குத்தொடுவா பகுதியில் உள்ள சிறிய நீர் நிலையில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர், அந்த நீர் நிலைக்குள் வீழ்ந்து வெள்ளிக்கிழமை (02) உயிரிழந்துள்ளார்.

மதுரங்குளி மூக்குத்தொடுவா பகுதியைச் சேர்ந்த இம்மானுவேல் பெர்னாண்டோ எனும் 59 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த மீனவர் நேற்று முன்தினம் (02) வெள்ளிக்கிழமை மாலை மீன் பிடிப்பதற்காக மூக்குத்தொடுவா பகுதியில் உள்ள சிறிய நீர்நிலையொன்றுக்கு சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, அங்கு மீன் பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அவர், திடீரென மயங்கி குறித்த நீர் நிலைக்குள் வீழ்ந்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் அந்த நபரை உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். எனினும் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் மதுரங்குளி பொலிஸார் கூறினர்.

# கிழக்கின் குரல்



## நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணிலுக்கு முஸ்லிம்கள் நன்றியுடன் இருக்க வேண்டும்

### எஸ்.எம்.எம்.முஷாரப் எம்.பி தெரிவிப்பு!



பொருளாதார பின்னடைவினால் பாதிக்கப்பட்டிருந்த நாட்டை மீட்டெடுத்து குறுகிய காலத்திற்குள் வளமான நாடாக மாற்றியமைத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முஸ்லிம்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

பாலமுனை சுப்பர் ஓர்கிட் விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கட் சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு சின்னப்பாலமுனை அல்ஹிக்மா மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (02), சுப்பர் ஒக்கிட் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஜே.அமீன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்த, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்,

'எமது நாடு வளமிக்க தேசமாக இருந்த காலகட்டத்தில் பல சவால்கள் காணப்பட்டசூழ்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் குறுகிய ஆட்சிக் காலத்தில் நல்ல சூழ்நிலை உருவாகி உள்ளதை அனைவரும் அறிவீர்கள்.

நாட்டுக்காக அரும் பணியாற்றி வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாம் நன்றியுடையவர்களாக விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது பிரதேசத்தின் அபிவிருத்திகளுக்கு கூடுதலான நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார். இந்த நிதி மூலம் எமது பிராந்தியத்தில் பின் தங்கிய பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை மீட்டெடுத்து, சிறிய காலத்திற்குள் அபிவிருத்தி பாதைக்கு கொண்டு சென்றுள்ள பெருமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே சாரும். நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்து, இருளில் மூழ்கியிருந்தபோது நாட்டை மீட்டெடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை. நாடும், சர்வதேசமும் ஏற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இந்த நாட்டை மீட்டெடுத்து நாட்டை அபிவிருத்தி பாதைக்கு கொண்டுச்சென்று மீள கட்டியெழுப்பியுள்ளார்.

கடந்த காலங்களில் பிராந்திய சிறுபான்மை விளையாட்டு வீரர்கள் தேசிய ரீதியில் விளையாட்டுத் துறைக்கு உள்வாங்கப்படாத நிலை காணப்பட்டது.

தற்போது அந்த நிலை மாறி எமது விளையாட்டு வீரர்கள் தேசிய ரீதியில் சாதனை படைத்து வருகின்றார்கள். எந்த விடயத்தையும் சரியான முறையில் நிறைவேற்றுவதற்கு சிறந்த திட்டமிடல்கள் அவசியமாகும்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காத்தான்குடியில் 34 ஆவது வருட சுகதாக்கள் நினைவு தினம் அனுஷ்டிப்பு!



காத்தான்குடியில் 34 ஆவது வருட சுகதாக்கள் நினைவு தினம் நேற்று முன்தினம் (03) சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் ஹூசைனியா பள்ளிவாசல்களில், இரவு இஷா தொழுகையில் இருந்தவர்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 103 பேரை நினைவு கூர்ந்தே இந்த சுகதாக்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற சுகதாக்கள் தினத்தை முன்னிட்டு, படுகொலை இடம் பெற்ற காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் ஹூசைனியா பள்ளிவாசல்களில் புனித அல் குர்ஆன் ஓதப்பட்டு, விசேட பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இதன்போது உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், முக்கியஸ்தர்கள், காத்தாங்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் காத்தான்குடி உலமா சபை பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ரணிலே வெற்றி பெறுவார்

**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மீண்டும் வெற்றி பெற்று ஜனாதிபதியாக தெரிவிவுசெய்யப்படுவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் யூ.கே. ஆதம் லெப்பை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து, கடந்த சனிக்கிழமை (03.08.2024) அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற மகளிர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டில் இருண்டயுகத்தை இரண்டு வருடங்களுக்குள் நிவர்த்தி செய்து சாதனை புரிந்து மக்களை நிம்மதியாக வாழ வழி வகுத்துள்ளதை நாம் எளிதில் மறந்து விடமுடியாது.

தனது வீடு தீக்கிரையாக்கப்பட்ட போதும், மக்களுக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றி, நாட்டின் பொருளாதாரம் விருத்தியடைய வழி வகுத்தார். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்று அவர் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவிசெய்யப்படுவார் என அவர் குறிப்பிட்டார்.

இன்றைய தினம் அக்கரைப்பற்று பிரதேச ஐக்கிய தேசியக் கட்சியின் வலயக் காரியாலயமும் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் ஐக்கிய இளைஞர்கள் அமைப்பின் தவிசாளர் சுதத் சந்ரசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதேவேளை, நேற்று (04) அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வலயக் காரியாலயமும் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறப்பாக இடம்பெற்ற மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தோற்சவம்





**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தோற்சவம் ஆடி அமாவாசை தினமான நேற்று (04) வெகு விமரிசையாக நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ அரோகரா என்ற கோசங்கள் முழங்க தீர்த்தோற்சவம் நடைபெற்றது.

மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் பிரதமகுரு சிவாகம கலாநிதி சிவ ஸ்ரீ கமலராஜ குருக்கள் தலைமையில் உற்சவம் கிரியைகள் இடம்பெற்றன.

இராம பிரானால் வழிபட்ட பெருமையினைக் கொண்டமைந்துள்ள ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயம், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற ஆலயமாகவும், இலங்கையில் மிகவும் உயரமான திராவிட முகப்புத்திர சிற்ப மகாரதம் கொண்ட ஆலயமாகவும் திகழ்கின்றது.

பிதிர்க்கடன் தீர்க்கும் தீர்த்தக் கேணியைக் கொண்ட பெருமையினை கொண்ட மாமாங்கேஸ்வரர் ஆலயம், அனுமன் இலங்காபுரியை எரித்தபோது தனது வாலினை நனைத்து கோபம் தணிந்த ஆலயம் என்ற இதிகாச புராணக்கதையினைக் கொண்டதாகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காசநோய் கட்டுப்பாடு தொடர்பான வருடாந்த மீளாய்வுக் கூட்டம்



NPTCCD இன் வழிகாட்டுதலுடன் கிழக்கு மாகாண காசநோய் கட்டுப்பாடு தொடர்பான வருடாந்த மாவட்ட மீளாய்வுக் கூட்டம், அண்மையில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் மட்டக்களப்பு மார்புநோய் சிகிச்சை நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

NPTCCD பணிப்பாளர் மற்றும் CCP பிரசன்னமாயிருந்த இந் நிகழ்வில், கிழக்கு மாகாணத்தின் முக்கியமான சுகாதார அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

குறிப்பாக, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மாகாண ஆலோசனையாளர்கள் சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்பட மார்புநோய் சிகிச்சை நிலைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

எமது கல்முனை பிராந்தியம் சார்பாக RDHS, MSBH/Sammanthurai, RE,MOH/Sammanthurai, MO Microbiologist AMH, SPHID உடன் கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சை நிலையத்தின் முக்கிய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறையில்

## பாடசாலை மாணவர்களுக்கு வழங்கிய இலவச உணவில் பழுதடைந்த கௌபி

**(ஒலுவில் விசேட நிருபர், மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

சம்மாந்துறை வலய கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றுக்கு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச மதிய உணவில், நுகர்வுக்கு பொருத்தமற்ற பழுதடைந்த கௌபி, பயறினை விநியோகித்த உணவு வழங்குனருக்கு சம்மாந்துறை நீதவான் நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளது.

மாணவர்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, சம்மாந்துறை வலய கல்வி அலுவலக இலவச மதிய உணவு குழுவினரால் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது, புழுக் குற்றிய நிலையில் கௌபி பயறு காணப்பட்டதாக சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஐ.எம். கபீர் தெரிவித்தார்.

நுகர்வுக்கு பொருத்தமற்ற பழுதடைந்த கௌபி, பயறினை விநியோகித்த உணவு வழங்குனருக்கு எதிராக சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு செய்யப்பட்டுள்ளது.இந்த வழக்கு விசாரணையின் போது, குறித்த உணவு வழங்குனரிடம் மருத்துவ சான்றிதழ் காணப்பட்டமையால் 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதக்கப்பட்டுள்ளது.

உணவகங்கள், மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் பணி புகின்றவர்கள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குச் சென்று மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு உரிய மருத்துவசான்றிதழை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி இதன்போது கேட்டுக்கொண்டுள்ளார்.

உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொது மக்களால் முன்வைக்கப்பட்ட, முறைப்பாட்டுக்கமைய உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பன திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். இந்நிலையில், உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகார சட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கமைய உணவு தயாரிப்பாளர்கள் செயற்படவேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றினை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமெனவும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஐ.எம். கபீர் கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அம்பாறையில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பம் சிறந்த விளைச்சலால் விவசாயிகள் மகிழ்ச்சி

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுது மும்முரமாக நடைபெற்றுவரும் நிலையில், இம்முறை எதிர்பார்த்த சிறந்த விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

கடந்த 03 வருடங்களில் தொடர் நஷ்டத்தை எதிர்கொண்ட விவசாயிகளுக்கு இம்முறையே கணிசமானளவு விளைச்சல் கிடைத்துள்ளதாகவும், சாதாரணமாக, ஏக்கரொன்றுக்கு 120 முதல் 160 மரைக்கால் வரை விளைச்சல் கிடைத்து வருவதாகவும் விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

மாவட்டத்திலுள்ள அரிசி ஆலை உரிமையாளர்கள், தனியார் வியாபாரிகள் ஆகியோர் விவசாயிகளிடமிருந்து நெல்லை உடனுக்குடன் கொள்வனவு செய்து வருகின்றனர்.

அதன்படி, 66 கிலோகிராம் நிறையுடைய வெள்ளை அரிசி நெல் மூடையொன்று 6,400 ரூபாவுக்கும், சிவப்பரிசி மூடையொன்று 6,600 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அம்பாறை



மாவட்டத்திற்கு வெளிமாகாணங்களிலிருந்து வருகை தரும் வியாபாரிகளும் நெல் கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஜூலை மாதம் நெல் அறுவடை ஆரம்பமாகும் போது 7,500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட நெல் விலையே தற்பொழுது குறைவடைந்துள்ளது.

அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து உத்தரவாத விலைக்கு நெல்லை கொள்வனவு செய்யாதது, நெல் விலை வீழ்ச்சிக்கு பிரதான காரணம் என சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆகையால், அரசின் உத்தரவாத நெல் கொள்வனவுத் திட்டத்தை உடன் ஆரம்பிக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த வருடங்களில் விவசாயிகள் இரசாயன உரம் இன்றி, அதிகம் சிரமங்களை எதிர்கொண்டனர். அத்துடன் உரம் மற்றும் களை நாசினி, கிருமி நாசினிகளை அதிக விலைக்கு கொள்வனவு செய்து பிரயோகித்தனர். கறுப்பு சந்தையிலும் இவற்றை கொள்ளை விலைக்கு கொள்வனவு செய்யவேண்டிய அவலம் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காததனால் விவசாயிகள் அதிகம் நஷ்டத்தை எதிர்கொண்டனர். இவ்வாறு கடந்த 03 வருடங்களாக விவசாயத்தில் நஷ்டத்தை எதிர்நோக்கிய விவசாயிகளுக்கு, இம்முறை சிறந்த விளைச்சல் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





வரலாற்று சிறப்புமிக்க திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் நேற்று (04) இடம்பெற்ற போது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தீர்த்தமாடுவதை படங்களில் காணலாம்.

# தர்ம ரஷ்மி வரலாற்றில் இத்தகைய வெசாக் கூடு போட்டி நடாத்தப்பட்ட முதல் சந்தர்ப்பம்













## தர்ம ரஷ்மி பொசன் வலய லேக்ஹவுஸ் கூடுப்போட்டி வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கிய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்









பொசன் உற்சவத்தையொட்டி ஹோமாகம, 'தர்ம ரஷ்மி' பொசன் வலயத்தில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட பொசன் வெளிச்சக் கூடுகள் போட்டியில் முதல் பரிசு பெற்ற எஸ்.எல்.சனத் பந்து என்ற நபருக்கு 10 இலட்சம் ரூபாவுக்கான காசோலை நேற்று லேக் ஹவுஸ் நிறுவனத்தில் வழங்கப்பட்டது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், ரூபவாஹினி தலைவர் சுதந்த லியனகே, இ.போ.ச. தலைவர் எஸ்.எம்.டி.எல்.கே.டி.அல்விஸ் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





இரண்டாம் பரிசு டபிள்யூ விஷால் ஸ்ரீ பினரவ



## லேக்ஹவுஸ் நிறுவனம் இப்போட்டிக்காக எந்த நிதியையும் செலவிடவில்லை

**லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம்**





மூன்றாம் பரிசு கே. இனுதீப யோகச்சந்திரா

## படைப்பாளிகளின் ஆக்கத்திறன் அதிவிஷேடமானது



**கலாநிதி ஹன்சமாலா ரிடிகஹபொல**













ஹோமாகம தர்ம ரஷ்மி பொசன் வலயத்தை செயல்படுத்தியது மிஹிந்தலை ,அநுராதபுரம் செல்ல முடியாத பலருக்கு பொசன் செய்தியை பெற்றுக்கொடுக்கவென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்த நாட்டின் இளைஞர்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் இந்த கலாசார கொடைகளை வழங்குவதில் ஊடக நிறுவனங்களுக்கு விசேட பங்கு உண்டு என்றார்.

இலங்கை வரலாற்றில் இவ்வாறான கூடு போட்டி நடாத்தப்பட்டு பாரிய பணப்பரிசுகள் வழங்கப்படுவது இதுவே முதல் முறை. அடுத்த ஆண்டு இதை விட விசேடமாக ஏற்பாடு செய்யப்படும். இந்த மாபெரும் பணிக்கு பங்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அமைச்சர் கூறினார். லேக்ஹவுஸ் நிறுவனத்தில் (02) நடைபெற்ற தர்ம ரஷ்மி பொசன் வலய வெசாக் கூடு போட்டியின் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்ச்சியில் தெரிவித்தார்.

முதல் பரிசான 10 இலட்சம் ரூபாவை எஸ்.எல். சனத் பந்துவும் இரண்டாம் பரிசான 5 இலட்சம் ரூபாவை டபிள்யூ விஷால் ஸ்ரீ பினரவும், மூன்றாம் பரிசான 2 இலட்சம் ரூபாவை கே. இனுதீப யோகச்சந்திராவும் பெற்றுக்கொண்டனர்.

இதில் 22 பேர் 50,000 ரூபா மற்றும் 25,000 ரூபா பணப்பரிசுகளை வென்றதுடன் இரத்மலானை , கம்பஹா , மட்டக்குளி, ஹோமாகம ஹொரணை , களுத்துறை டிப்போக்கள் மற்றும் வட்டருக்க சிறைச்சாலை இலங்கை காலாட்படை இராணுவ உபகரணப் படையினரும் பரிசுகளை வென்றமை விசேட அம்சமாகும். அமைச்சர் மேலும் கூறியதாவது:

முக்கியமான நிகழ்வில் கலந்துகொள்ளும் உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன். . மிஹிந்தலை, அனுராதபுரத்திற்கு செல்ல முடியாத பலருக்கு பொசன் செய்தியை வழங்குவதற்காக பொசன் வலயம் எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் சென்று சமய அங்கத்துவம் மற்றும் கலாசார மறுமலர்ச்சி குறித்து சில புரிதல்களை ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது. வரலாற்றின் போக்கை மாற்றியது மகிந்ததேரரின் வருகை.

நாட்டின் வெகுசன ஊடகங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் எனக்கு வழங்கப்பட்டுள்ள பெரும் பொறுப்பையும், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு இந்த கலாசாரப் பரிசுகளை வழங்குவதும் ஊடக நிறுவனங்களால் ஆற்றப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நாட்டில் உள்ள ஊடக நிறுவனங்கள் உரிமையாளர்கள் மற்றும் அதிபர்களும் அத்தகைய நோக்கம் கொண்டவர்கள் என்று நான் நினைக்கிறேன்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு. டி.ஆர்.விஜேவர்தன, லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஊடாக தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது பௌத்த மதத்தின் மறுமலர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றினார். அதனால்தான் விஜேவர்தன குடும்பத்தினர் மிஹிந்தலை ஆலோக பூஜைக்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பௌத்த பிரிவுகளை நடத்துவதற்கும் தனிப்பட்ட நன்கொடைகளை வழங்கி வருகின்றனர்.

தேசிய ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சியும் இணைந்து இது போன்ற விடயங்களில் பங்களிக்கின்றன. நல்ல விடயங்களுக்கு ஒன்றுபடக்கூடிய பலரை ஒன்று திரட்டி தான் நான் தலைவராக இருக்கும் ஹோமாகம தொகுதியை அடிப்படையாக கொண்டு பொசன் பிரதேசத்தை உருவாக்க முடிவு செய்யப்பட்டது.

காலஞ்சென்ற காமினி ஜயசூரிய, சேர் அநகாரிக்க தர்மபாலவின் பேரன் எனது தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தியவர், சிங்கள பௌத்த புனர்ஜீவன அமைச்சுப் பதவிகளை வகித்து, இத்தொகுதியில் பௌத்த மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற உணர்வுடன் சில கொள்கைகளை அறிமுகப்படுத்தினார். பௌத்த தலைவராக அவர் இந்த நாட்டில் மதுவை ஒழிப்பதற்காகப் போராடினார். அதன் பின் ஏற்பட்ட மாற்றங்களில், பின்னர் நான் கல்வி அமைச்சராக பதவி வகித்த போது, இப்பிரதேசம் குறித்து வித்தியாசமாக சிந்தித்து கல்வி நகரமாக்க, மகிந்த ராஜபக்ச கல்லூரி, கொழும்பு மத்திய பிரதேசத்தில் பாரிய பாடசாலைகள் இருந்த போது ஆசியாவிலேயே மிகப் பெரிய இடைநிலைப் பாடசாலையாக எமது அழகிய கிராமத்தில் கட்டப்பட்டது. 7000 மாணவர்கள் மற்றும் 300 ஆசிரியர்கள் படிக்கும் அரச பாடசாலை. காலை 7.30 மணிக்கு தொடங்கி மாலை 3.30 மணிக்கு முடியும். போசனசாலை இல்லை. பெற்றோர்கள் குழந்தைகளுக்கு இரண்டு பக்கட் உணவு அனுப்ப வேண்டும். பௌத்த குழந்தைகள் வெள்ளிக்கிழமை தேசிய ஆடைகளை அணிய வேண்டும். பௌர்ணமி தினத்தில் சில் எடுக்க வேண்டும். நாட்டிலேயே அதிகபட்சமாக இப்பாடசாலையில் இருந்து 768 மாணவர்கள் க.பொ.த பரீட்சைக்கு தோற்றினார்கள். அனைவரும் உயர் தரத்துக்கு தோற்றி சித்தியடைந்தார்கள். எனது மாதச் சம்பளத்தில் இருந்து , ஒவ்வொரு மாதமும் பாடசாலை அபிவிருத்தி நிதிக்கு பணம் செல்கிறது. இந்தப் பள்ளியில் எனது குழந்தைகள் யாரும் படிக்கவில்லை. மரபுப்படி கொழும்புக்கு வந்தவர்கள். பாடசாலையின் வேலிக்கு அருகில் பசுமை பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. 13000 பேர் அங்கு தங்களுடைய படிப்பை மேற்கொள்கின்றனர். அதற்கு முன்னால் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடம் உள்ளது. 25 ஏக்கரில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடம் உள்ளது. வர்த்தகத்துக்கு பொறுப்பான அமைச்சராக இருந்த வேளையில் கொழும்புக்கு வெளியே எடை மற்றும் அளவீட்டுத் துறையை கொண்டு சென்றேன்.

டெலிகொம் தரவுக் கிடங்கு, பாடப்புத்தகக் கிடங்கு வளாகம், தேசியப் பாதுகாப்பை வழங்கும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, பயோடெக் பண்ணை ,ஹேலிஸ் நிறுவனத்தின் மருந்து உற்பத்தி ஆலை , 400 ஏக்கர் முழு கல்வி நகரமாக அமைந்துள்ளது. ஞானத்தால் பிணைக்கப்பட்ட நகரம். அதனால்தான் இன்று வேறு மாகாணங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு சுமார் 500 அறைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பெருமளவிலான முச்சக்கரவண்டி மற்றும் ஏனைய வாகன வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று காலை 7.30 மணியளவில் வீதிக்கு கார்பட் இடும் நிகழ்வில் கலந்து கொண்டேன். இந்த மாகாணம் முழுமையாக வளர்ச்சி அடைந்துள்ளது. பாளி மற்றும் பௌத்த பல்கலைக்கழகம் , தியகம மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்பத் துறை தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச மைதானம் என்பன அந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. விளையாட்டுப் பல்கலைக்கழகம் விரைவில் நிறுவப்படும். மத்தேகொட ஜயவர்த்தனபுர பொறியியல் பீடம் நிறுவப்பட்டுள்ளது.

13 கி.மீ பொசன் வலயம் உருவாக்கப்பட்டது. இராணுவ முகாம் பனாகொடயில் போதி ராஜா விகாரை உள்ளது. இராணுவத்தைச் சேர்ந்த 400 வீரர்கள் தர்ம ரஷ்மி வெசாக் வலயத்தில் தானம் வழங்க சமைத்தனர். 9000 கிலோ சம்பா , 1500 தேங்காய் எண்ணெய் பாட்டில்கள் உள்ளிட்ட பொருட்கள் சென்றன. ராணுவம் இல்லாமல் இதை செய்ய முடியாது. போரில் பனாகொட முகாமைச் சேர்ந்த பெருமளவிலான போர்வீரர்கள் உயிரிழந்தனர். அந்த போர்வீரர்களுக்கு புண்ணியம் வேண்டியே உதவினார்கள். . எங்களுக்கு நிறைய நன்கொடைகள் கிடைத்தன. சிலர் பெயர் சொல்ல வேண்டாம் என்றார்கள். நான் அவர்களை நடுவர் மன்றத்திற்கு அழைத்த போது இந்த மக்கள் அனைவரும் தங்கள் நேரத்தையும் முயற்சியையும் முன்வந்து வழங்கினர். குழந்தைகளுக்கு தனி வெசாக் கூடு போட்டி நடத்தப்பட்டது. முதல் இடத்துக்கு ஐந்து லட்சமும், இரண்டாம் இடத்துக்கு மூன்று லட்சமும் மூன்றாம் இடம் பிடித்தவர்களுக்கு தலா இரண்டு லட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இந்த கூடுகளை உருவாக்குவதற்கு கண்கவர் விடயங்களை உருவாக்கிய வடிவமைப்பாளர்களுக்கு ஊக்கமளிக்க விரும்பினேன், எனவே இதைச் செய்ய முடிவு செய்தேன். சைக்கிள் பந்தயங்களுக்கு நிறைய பணம் கொடுக்கப்படுகிறது. கிரிக்கெட் வீரர்களுக்கு பெரும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இலங்கை வரலாற்றில் இவ்வாறான கூடு போட்டி நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும். முதல் பரிசு ரூ.10 லட்சம். இரண்டாம் பரிசாக ரூ.5 லட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசாக ரூ.2 இலட்சம் நான்காம் இடம் முதல் 14வது இடம் வரை ஐம்பதாயிரம் ரூபாயும், 15வது இடத்திலிருந்து 25ம் இடம் வரை இருபத்தைந்தாயிரம் ரூபாயும் வழங்கப்படும். இலங்கை வரலாற்றில் அதிகூடிய பரிசுத்தொகை வழங்கும் பணி இன்று நிறைவேற்றப்படுகிறது. இதற்காக லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர், பணிப்பாளர் சபை, ஆசிரியர் குழுத் தலைவர்கள் பெரும் முயற்சி எடுத்தனர். பணம் கிடைக்குமா என்று தெரியவில்லை என்று பலர் கேட்டனர். இந்த பரிசுத் தொகையை விட லேக்ஹவுஸ் விளம்பரத்திற்கு முந்தைய நடவடிக்கைகளுக்காக அதிகப் பணத்தைப் பெற்றுள்ளது. கடுமையாக உழைத்து தீர்ப்பு வழங்கிய அனைவருக்கும் பாராட்டுக்கள். ஒவ்வொரு வருடமும், லேக்ஹவுஸ் மற்றும் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் வருடா வருடம் சிறப்பாகச் செயல்படுவதற்கான பலத்தையும் தைரியத்தையும் பெற வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். இன்று படைப்புகளால் பரிசளிக்கப்படுபவர்கள் அனைவரும் திறமையானவர்கள். இந்த தகுதி பெற்றோருக்கு பெருமையாகவும், ஆசிரியர்களுக்கு பெருமையாகவும் நாட்டிற்கு பலமாக உள்ளது. இந்த தொண்டுக்கு பங்களித்ததற்காக அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயல்பட அழைக்கிறேன்.

ஹரேந்திர காரியவசம், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர்

மகிந்த தேரர் அன்று இலங்கைக்குக் கொண்டுவந்தது பௌத்தம் மட்டுமல்ல. பொசன் போயா அன்று இலங்கை மக்களின் இருளில் மூழ்கிய தேசத்திற்கு ஒளியும் கிடைத்தது. எனவே பொசன் போயா தினம் இலங்கையர்களாகிய எமக்கு விசேடமான நாளாகும். இதன் காரணமாக ஹோமாகம நகரை மையமாகக் கொண்டும் கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டும் தர்ம ரஷ்மி பொசன் வலயம் உருவாக்கப்பட்டது. அமைச்சரின் வழிகாட்டுதலிலும் அனுசரணையிலும் திறந்த பொசன் கூடு போட்டியை நடத்துவது எங்களுக்கு பெரிய கௌரவம் என கருதுகிறேன். முதல் பரிசு 10 லட்சம் மொத்தப் பரிசுத் தொகையான 25 லட்ச ரூபாய்க்கு மேல் உங்களுக்காக செலவிடப்பட்டது. இந்த பரிசுத் தொகை பல்வேறு நன்கொடையாளர்களிடமிருந்து நலனா விரும்பிகளிடமிருந்தும் பெறப்பட்டது லேக்ஹவுஸால் பணம் எதுவும் செலவிடப்படவில்லை. அமைச்சரின் பணிப்புரைக்கமைய எஞ்சிய பணத்தை மஹிந்த ராஜபக்ஷ பாடசாலை நிதிக்கு வழங்கவுள்ளோம். 54 கூடுகள் என்பது மிகவும் பாரிய போட்டியாகும். அதன் வெற்றியாளர்கள் இன்று தேர்வு செய்யப்படுவார்கள். அவர்கள் மிகவும் நடுநிலையான குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கலாநிதி ஹன்சமாலா ரிடிகஹபொல, ரவீந்திர குருகே குஷான் தேவிந்த, புத்ததாச கலப்பதி உள்ளிட்ட பலர் நடுவர்களாக செயல்பட்டனர். பொசன் வலயத்தின் ஸ்தாபகரான கலாநிதி பந்துல குணவர்தன அவர்களுக்கும், லேக்ஹவுஸ் பணிப்பாளர் சபை உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் , பொது முகாமையாளர், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள், சந்தைப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தூர நோக்கு கொண்ட தைரியமாக முடிவுகளை எடுக்கும் அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு மேலும் பலமும் தைரியமும் கிடைக்க வேண்டுமென லேக் ஹவுஸ் குடும்பத்தின் சார்பாக நாங்கள் பிரார்த்தனை செய்கின்றோம்.

கலாநிதி ஹன்சமலா ரிடிகஹபொல, படைப்பாளிகளின் ஆக்கத்திறன் அதிவிஷேடமானது எனவும் தெரிவித்தார்.

**வீ.ஆர்.வயலட்**

















# நாடு சுபீட்சமடைய வேண்டுமாயின் மாணவ சமூகத்துக்கு வழிகாட்டப்பட வேண்டும்

## மத்திய மாகாண ஆளுநர் தெரிவிப்பு



(அக்குறணை குறூப் நிருபர்)

நாடு சுபீட்சமடைய வேண்டுமாயின் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதங்களை மறந்து யாவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்துள்ளார்.

30 மில்லியன் ரூபா செலவில் தெல்தோட்டை, எனசல்கொல்ல ஆரம்பப் பாடசாலைக்கு புதிய கட்டிடம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

அதற்கான அடிக்கள் நாட்டு வைபவம் அண்மையில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் இடம் பெற்ற போது, நிகழ்வில் கலந்துக் கொண்டு, உரையாற்றிய ஆளுநர்,

நாடு சுபீட்சமடைய வேண்டுமாயின் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதங்களை மறந்து யாவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். எதிர்காலத்தை பொறுப்பேற்க உள்ள மாணவ சமூகத்திற்கு நேர் வழிகாட்டப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில், கண்டி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி சமரி அந்தரகே, உதவி கல்விப் பணிப்பாளர் ஏ.ஆர்.என். அமீன், பாடசாலை அதிபர் திருமதி சி.எம். எப். சிமாரா உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலைச்சாரல்

### சிறுத்தை புலியினால் மக்கள் அச்சம்



(ஊவா சுழற்சி நிருபர்)

கதிர்காமம் புத்தள வீதியில் மாலை நேரங்களில் இளம் மஞ்சள் நிறத்திலான சிறுத்தைப் புலி ஒன்று சுற்றித் திரிவதனால் அப் பிரதேச மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், புத்தளையிலிருந்து கதிர்காமம், செல்ல கதிர்காமம் நோக்கி பயணிக்கும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செல்லுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அத்துடன், புத்தள வழியாக கதிர்காமம் செல்லும் யாத்திரியர்களும், தனியார் வாகன சாரதிகளும் மிகவும் அவதானத்துடன் பயணிக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். அதேவேளை, மாலை நேரங்களில் இச் சிறுத்தைப் புலி வீதியில் திரிந்து வருவதால், வீதியில் செல்லும் மக்கள் மிகவும் அச்சத்துடனே பயணிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 22 நாட்டுகளுக்கு பின்னர் மாணவர்கள் கண்டுபிடிப்பு

(தலவாக்கலை குறூப் நிருபர்)

கடந்த 22 நாட்களாக காணாமல் போயிருந்த, தலவாக்கலை பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலை மாணவிகளும் பாடசாலை மாணவர் ஒருவரும் நேற்று (04) காலி, மெட்டியகொட பிரதேசத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலவாக்கலை, கிறேட் வெஸ்டன் லூசா தோட்டத்தைச் சேர்ந்த, 16 வயதுடைய பாடசாலை மாணவிகள் மூவரும், 14 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவருமே இவ்வாறு காணமல்போயிருந்தனர்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த குறித்த மாணவர்கள், பொலிஸாரின் தீவிர தேடலில் நடவடிக்கையினையடுத்து, காலி, மெட்டியகொட பிரதேசத்தில் மறைந்திருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

காணாமற்போன, மாணவனும், மாணவி ஒருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அக்கா, தம்பி எனவும், மற்றைய இரு மாணவிகள் அவர்களது வீடுகளுக்கு அருகில் வசிக்கும் இரு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் வேலை தேடி காலி, மெட்டியகொட பகுதிக்கு சென்றதாகவும், பின்னர் அந்த பகுதியிலுள்ள மாணவர் ஒருவரின் உறவினர் வீட்டில் தங்கியிருந்து வேலை தேடி சென்றதாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# ஜெயிலானி உதைப்பந்தாட்ட அணிகள் அகில இலங்கை போட்டிக்கு தெரிவு





(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை இ/ ஜெயிலானி தேசியப் பாடசாலையின் 18 வயது மற்றும் 16 வயதின் கீழ் உதைப்பந்தாட்ட அணிகள் இரண்டும் அகில இலங்கை போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

இதில், 18 வயதின் கீழ் அணி மாகாண மட்டத்தில் முதலிடத்தையும், 16 வயதின் கீழ் அணி மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று இவ்வாறு அகில இலங்கை போட்டிக்கு தெரிவாகியுள்ளதாக பாடசாலையின் உடற்பயிற்சி ஆசிரியர் எம்.ரீ.எம்.ரூமி தெரிவித்துள்ளார்.

இதற்காக ஒத்துழைத்த பாடசாலை அதிபர் எம்.ஜே எம்.மன்சூர் உட்பட அனைத்து விளையாட்டுத்துறை ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ள அவர், மாணவர்களுக்கும் தனது பாராட்டுக்களை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியின் வெற்றிக்கு

# பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்றிணைய வேண்டும் என வலியுறுத்து

அரசாங்கத்தின் பிரதான பங்காளிகளான பொதுஜன பெரமுன கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்து செயற்படுமாறு பெல்மதுளையில் கட்சிகளின் ஆதரவாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பெல்மதுளையில் அமைந்துள்ள, வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியின் இல்லத்தில் அண்மையில் ஒன்றுகூடிய, கட்சியின் ஆதரவாளர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஆகியோர் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது, அங்கு வருகைத்தந்திருந்த கட்சியின் ஆதரவாளர்கள், அமைச்சரின் இல்லத்தில் கூட்டமொன்றை ஏற்பாடுசெய்து, பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றுபட்டு செயற்டுபடுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதுடன் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டு மக்கள் 2 வருடங்களாக அனுபவித்துவரும் இன்னல்களை யாழ்ப்பாண மக்கள் 10 வருடங்களாக அனுபவித்துள்ளனர்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(சாவகச்சேரி விசேட நிருபர்)

நாட்டு மக்கள் கடந்த இரு வருடங்களாக அனுபவித்து வருகின்ற துன்பங்களை யாழ். மாவட்ட மக்கள் பத்து வருடங்களாக அனுபவித்து வருகின்றனர் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுடைய அலுவலகத்திற்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன், பாராளுமன்றத்தில் அளப்பரிய பணியாற்றுவது போலவே யாழ்ப்பாண மாவட்டத்திலும் சிறந்த மக்கள் சேவையை முன்னெடுத்து வருகிறார். அவர் எப்போதும் யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டம் குறித்து சிந்தித்து அவற்றை மேம்படுத்த உழைத்து வருகிறார்.

எமது நாடு வங்குரோத்து நிலையை அடைந்து தற்போது அதிலிருந்து மெல்ல மீண்டு வருகிறது. இது போன்ற ஓர் நிலைமை இதுவரை ஏற்பட்டதில்லை. டொலரின் பெறுமதி 370 ரூபாய்க்கும் அதிகமாக சென்றதனை யாரும் கண்டதில்லை. இறுதியில் கொழும்பு அரசாங்கம் கூட இல்லாமல் போனது.

எதிர்க்கட்சி தலைவர் அவர்களை அரசாங்கத்தை பொறுப்பெடுக்கக் கோரிய போது ஓடினார். ஜே.வி.பி தலைவரை அப்போது தேடக்கூட முடியாத நிலை இருந்தது.

சிந்தித்துப் பாருங்கள் எந்த நாட்டில் அதிகாரத்தைக் கொடுக்கும் போது தலைவர்கள் தப்பித்து ஓடுவார்கள் என்று.

அவர்களிடம் பிரச்சினைக்கான தீர்வுகள் இருக்கவில்லை. இறுதியாக பாராளுமன்றத்தில் ஒரே ஒரு ஆசனத்தைக் கொண்டிருந்த எனக்கு இந்த நாட்டை பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனை ஓர் உலக சாதனை என்றே நினைக்கின்றேன்.

தற்போது நாம் வங்குரோத்து நிலைமையில் இருந்து மீண்டு வருகிறோம். எமது வேலைத்திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக இருப்பதாக ஜப்பான் அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்துள்ளது. ஏனைய நாடுகளும் இவ்வாறு பகிரங்கமாக அறிவிக்கும் போது கஷ்டமான இருண்ட யுகம் நிறைவுக்கு வரும். I.M.F ஸ்தாபனத்துடனான உடன்படிக்கையை நாம் 2032ஆம் ஆண்டு வரை கொண்டு செல்ல வேண்டும். அதனை மாற்ற முயற்சித்தால் எமக்கு ஒரு சதம் பணம் கூட கிடையாது.

ஆனால் சிலர் நாம் அந்த உடன்படிக்கையை மாற்றப்போகிறோம் என கூறி வருகின்றனர். அவ்வாறு முயற்சித்தால் எல்லாமே பிழைத்துப்போய் விடும். தற்போது உள்ள நிலைமை மாறி மீண்டும் இருண்ட யுகத்திற்குள் சென்று விடுவோம்.

அன்று போல் வாழ்க்கை கடினமானதாகவும் இல்லை ஆனால் வாழ்வது எளிதான ஒரு விடயமும் இல்லை. எவ்வாறு இருப்பினும் எஞ்சிய தூரத்தை கடக்க வேண்டியுள்ளது. எமக்கு இருக்கும் மிகப்பெரிய பிரச்சினை நாட்டிற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்ய பணம் இல்லை. கடன்களையே பெறுகிறோம். கடனை மீளச் செலுத்தவும் பணம் இல்லை. நாம் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி நகரவேண்டியுள்ளது. புதிய ஏற்றுமதி பொருட்கள் மற்றும் சேவைகளை இனங்காண வேண்டியுள்ளது. எதிர் வரும் 5 வருடங்களில் இத் திட்டத்தில் வெற்றி கண்டால் நாடு சிறந்த ஓர் நிலையை அடையும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# குழந்தை பால் குடிக்க மறுத்தமையால் கை, கால்களை திருகினேன்

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் அளவெட்டி பகுதியில் சசிரூபன் நிகாஸ் என்ற ஒன்றரை மாத குழந்தை (03/08) உயிரிழந்துள்ளது.

உடலில் காயங்கள் காணப்பட்டமையால், உடற்கூற்று பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட வேளை, குழந்தையின் கைகள், கால்கள் முறிந்து, தலையில் அடிகாயங்கள் காணப்பட்டதோடு உடலில் கண்டல் காயங்களும் கண்டறியப்பட்டுள்ளது. குழந்தையின் மரணம் இயற்கை மரணம் அல்ல என உடற்கூற்று பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மரண விசாரணை அதிகாரி மற்றும் பொலிஸ் விசாரணையின்போது, குழந்தையின் தாயார், குழந்தை பால் குடிக்க மறுப்பதால், கைகள் கால்களை திருகினேன். ஆனால் நான் கொலை செய்யவில்லை என தெரிவித்துள்ளார்.

பொலிசார், தாயை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அதேவேளை குழந்தையின் தந்தையையும், குழந்தையை பராமரிக்க வீட்டிற்கு வந்து சென்ற பெண்ணொருவரையும் பொலிஸ் காவலில் வைத்து விசரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குழந்தையின் உடற்கூற்று பரிசோதனை அறிக்கை உள்ளிட்டவை நீதி மன்றில் பாரப்படுத்திய பின்னரே, நீதிமன்ற உத்தரவின் பேரிலையே குழந்தையின் சடலம் ஒப்படைக்கப் படும் என தெரிவிக்கப்படுகிறது

# யாழில் விபத்து: பெண் உயிரிழப்பு



(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் , சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில், சுன்னாக சந்திக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு பெண்களை, ஹயஸ் ரக வாகனம் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்த பெண் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் சுன்னாக பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வடக்கின் உதயம்

### கரப்பந்தாட்டத்தில் சாம்பியனாகிய மாணவ அணியினருக்கு மாபெரும் கௌரவிப்பு



(தலைமன்னார் விஷேட நிருபர்)

கடந்த மாதம் (20) யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயத்தில் இடம் பெற்ற வட மாகாணத்தின் 2024 ஆம் ஆண்டு 18 வயது ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர் அணியும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மாணவர் அணியும் மோதிக் கொண்டது.

இப்போட்டியில் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர் அணி வெற்றியீட்டி சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த அணியின் வீரர்களான ஆர்.மரி அன்று. ஏ.ஆகாஷ், என். மரிய றுசிலன், ஜே.யோசப் விஜய், ஜே.ஜனிச சில்வா, எம்.றிஷான் மற்றும் ஜே.ஜெரோன் ஆகியோரை பாடசாலை சமூகம் கிராம மக்கள் ஒன்றிணைந்து இவர்களை கௌரவிக்கும் முகமாக துள்ளுக்குடியிருப்பிலிருந்து பேசாலை ஊடாக திறந்த வாகனத்தில் அழைத்து வரப்பட்டு பாடசாலை மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வு வெள்ளிக்கிழமை (02/08) இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன். மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப். மன்னார் உதவிக் கல்விப் பணிப்பாளர் (விளையாட்டு) பி.ஞானராஜ் மற்றும் பங்கு தந்தை அருட்பணி ஞானாதிக்கம் அடிகளார் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# காரைநகரில் நான்கு தமிழக கடற்தொழிலாளர்கள் கைது

(யாழ்.விசேட நிருபர்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 4 இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் காரைநகரை அண்மித்த பகுதியில் அத்துமீறி கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட 04 இந்திய கடற்றொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கையின் போது படகொன்றும் கைப்பற்றப் பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட கடற்தொழிலாளர்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**விலைமனுக்கள் திறக்கும் காலத்தை ஒத்திவைத்தல்**

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கம் |
|---|---|
| 1. | கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதி (CKE), வெளிச்சுற்று அதிவேக வீதி (OCH), தெற்கு அதிவேக வீதி மற்றும் தெற்கு அதிவேக வீதியின் விரிவாக்கம் - RDA/EOM&M/ELE/TBM/2024/13 |

மேற்கூறப்பட்ட பெறுகைக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், அதிவேக வீதி பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை**


# 4 சதவீதமாகவிருந்த வடக்கின் குடிநீர் விநியோகம் இன்று 40 சதவீதமாக உயர்வடைந்துள்ளது

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்ற போது வடக்கில் குடிநீர் விநியோகம் 4 சதவீதமாகக் காணப்பட்டது. இக்குடிநீர் திட்டத்தின் மூலம் வெள்ளிக்கிழமை (03) முதல் இது 40 சதவீதமாக உயர்வடையும் என நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்மைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் நம்பிக்கை வெளியிட்டார்.



யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

குடிநீர் அடிப்படை உரிமையாகும். அதை மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, செலவு அதிகமாக இருந்ததால் சிக்கல் ஏற்பட்டது. ஆனால் மக்களின் குடிநீர் தேவையை உறுதிப்படுத்த இந்த சவாலை ஏற்றுக்கொண்டேன்.

நான் கடந்த வருடம் ஜனவரி 2023 ஆம் ஆண்டு இந்த அமைச்சை பொறுப்பெடுத்தேன். இந்த அமைச்சை நான் பொறுப்பெடுக்கும்போது, என்னிடம் ஒப்படைத்த அமைச்சிடமிருந்து கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு 2800 மில்லியன் நஷ்டத்தில் இயங்கியது. அதுமட்டுமில்லாமல் என்னிடம் மூத்த அரசியல்வாதிகள், அதிகாரிகள் சொன்ன ஒரு விடயம், உங்களால் இந்த அமைச்சை எடுத்து எந்த பிரயோசனமும் இல்லை என்றார்கள். ஆனால் தற்பொழுது இலாபம் ஈட்டும் அமைப்பாக மாற்றியுள்ளேன். இதற்காக ஜனாதிபதி பொதுமக்கள் முன்னிலையில் என்னிடம் பாராட்டினார்.

ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்ற போது வடக்கில் குடிநீர் விநியோகம் 4 சதவீதமாகக் காணப்பட்டது. இன்று முதல் இது 40 சதவீதமாக உயர்வடையும். இந்த திட்டத்துக்கு பல கிராமங்கள் காணிகளை கொடுக்க விரும்பவில்லை.

இருப்பினும் இந்த காணியை வழங்கிய தாளையடி கிராம மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# போதைப் பொருளை சப்பாத்தில் மறைத்து வைத்திருந்த சிறைச்சாலை அதிகாரி கைது

## அவர் வேலைநீக்கம் செய்யப்பட்டதாகவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

போதைப்பொருளை தம் வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரி ஒருவரின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் பணிபுரியும் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் வெலிக்கடை சிறைச்சாலையின் பிரதான நுழைவாயிலில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது சிறைச்சாலை அவசர தந்திரோபாயப்படை அதிகாரிகளே அவரை கைது செய்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரியை பரிசோதித்த போது, அவரிடம் ஐஸ் என சந்தேகிக்கப்படும் போதைப்பொருள் பொதிகள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அவற்றை அந்த சிறைச்சாலை அதிகாரி தனது காலணியில் சூட்சுமமாக மறைத்து வைத்திருந்ததாகவும் கைது செய்யப்பட்டுள்ளவர் சுமார் 20 வருடங்கள் சிறைச்சாலையில் பணியாற்றி வரும் உத்தியோகத்தர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு**

**வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனி**

STATE FERTILIZER

**2024 தொடக்கம் 2027 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டு காலத்திற்காக வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனிக்கு இரசாயன உரம் வழங்கலின் பதிவுக்கான அழைப்பு**

01. 2024/2027 காலப் பகுதிக்கு இரசாயன உரங்களின் பின்வரும் வகைகளை வழங்குவதற்காக பதிவு செய்வதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வழங்குநர்களுக்கு (தகுதி பெற்ற உர வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், முதன்மையாளர்கள் அல்லது அங்கீகாரம் பெற்ற முகவர்கள்) இலங்கையின் வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனி சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் அழைப்பு விடுக்கப்படுகிறது.
    - i. யூரியா (துண்டுகளாக்கப்பட்டது)
    - ii. யூரியா (சிறு மணி)
    - iii. ட்ரிப்ல் சுபர் பொசுபேற்று (TSP)
    - iv. பொட்டாசியம் முரியேட்டு (MOP)
    - v. அமோனியம் சல்பேட்டு (SA)
    - vi. பொட்டாசியம் சல்பேட்டு (SOP)
    - vii. வர்த்தக ரீதியான எப்சம் உப்பு (CES)
    - viii. நாக சல்பேட்டு (Zn)
    - ix. கீசரைட் (மெக்னீசியம் சல்பேட்டு மோனோஹைட்ரேட்)
    - x. ஈர் அமோனியம் பொசுபேற்று (DAP)
02. தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 4 ஆவது உறுப்புரையை பார்க்க) மதிப்பீடு ஒன்றின் அடிப்படையில் 2024/27 ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பட்டியல் ஒன்றில் சேர்க்கப்படும் என்பதோடு அவ்வாறான வழங்குநர்கள் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு தகுதி பெறுவார்கள். 2024 செப்டெம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் 2027 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையான காலத்திற்காக வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனிக்கு, மேலுள்ள உரங்களை வழங்குவதற்காக 2024/27 காலப் பகுதியில் அவ்வப்போது விலைமனுக்கள் கோரப்படும்.
03. இந்த விண்ணப்ப முறை 03 (மூன்று) ஆண்டு காலத்திற்காக பேணப்படும் என்பதோடு 2027 ஜுலை 31 ஆம் திகதி வரை செல்லுபடியான காலாவதிக்கு முன்னர் ஒரு மாதம் வரை பெறுதல் மற்றும் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்கும். முன் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் என்ற வகையில் பதிவுக்கான விண்ணப்பதாரர்களின் தகுதி/ தகுதியின்மை அறியத்தரப்படும். பதிவுக்கு தகுதியுடைய வெற்றிகரமான வழங்குநர்களுக்கு பதிவு செய்யப்பட்ட வழங்குநர் அந்தஸ்த்து வழங்கப்படும். அதன் பின்னர், பதிவு செய்யப்பட்ட அனைத்து வழங்குநர்களுக்கும் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் என்பதோடு அவர்கள் வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனியின் பெறுகைப் பிரிவினால் விலைமனுக் கோரலுக்கான அழைப்பு கிடைப்பதற்கு தகுதி பெறுவர்.
04. **தகைமை அளவுகோல்**

    பதிவுக்கான தகுதிக்கு, விண்ணப்பதாரர்கள் பின்வரும் கட்டாயத் தேவைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் - (விண்ணப்பத்துடன் ஆவண அத்தாட்சி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்).
    - i. விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் நேரத்தில் குறைந்தது இரண்டு (02) ஆண்டு காலத்திற்கு வர்த்தகப் பதிவாளர் அல்லது குறித்த நாட்டில் முறையான நிர்வாகத்துடன் வர்த்தக நிறுவனம் ஒன்றாக பதிவு செய்திருத்தல் வேண்டும்.
    - ii. விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் நேரத்தில் ஓர் (01) ஆண்டு காலத்திற்காக சர்வதேச வர்த்தகத்தில் இரசாயன உர வழங்கலில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். நிறுவனத்தின் பெயர் திருத்தப்பட்டிருந்தால், முந்தைய நிறுவனத்தின் அனுபவமும் கருத்தில் கொள்ளப்படும். (நிறுவனத்தின் பெயர் திருத்தங்களை நிரூபிப்பதற்கு குறித்த ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.)
    - iii. அண்மித்த கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் ஓர் ஆண்டில் 05 மில்லியன் டொலர் (ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்) குறைந்தபட்ச ஆண்டுப் புரள்வை பெற்றிருத்தல் வேண்டும்.
    - iv. வெளிநாட்டு விலைமனுதாரராக இருந்தால் முதன்மை விலைமனுதாரரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இலங்கையில் உள்ளூர் பிரதிநிதி/ உள்ளூர் முகவர் ஒருவரை பெற்றிருத்தல் வேண்டும்.
05. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 50,000 இலங்கை ரூபாவை (இலங்கை ரூபா ஐம்பதாயிரம் மாத்திரம்) இலங்கை, வத்தளை, ஹுனுப்பிட்டி, வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனியின் பெறுகைப் பிரிவுக்கு 2027 ஜுலை 31 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் (வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனிக்கு) ரொக்கப்பணம் அல்லது வங்கி வரைவில் செலுத்தி விண்ணப்பப் படிவம், விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள் அடங்கிய விண்ணப்பங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கௌ்வனவு செய்யலாம்.
06. பதிவுக்காக, முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு வெவ்வேறு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் "இரசாயன உர வழங்கலின் பதிவுக்கான விண்ணப்பம் - 2024/27" என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனியின் பெறுகை பிரிவில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பதிவு நடைமுறைக்காக, அவசியமான ஆவணங்களுடன் சேர்த்து முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை பின்வரும் முகவரிக்கு மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனி, பெறுகைப் பிரிவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

    **தலைவர்,**
    **திணைக்கள பெறுகைக் குழு (DPC),**
    **வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனி**
    **பெறுகை பிரிவு,**
    **லக்பொஹொர ஸ்வர்ணஜயந்தி மாவத்தை**
    **ஹுனுப்பிட்டி**
    **வத்தலை,**
    **இலங்கை.**
07. **விண்ணப்பங்களின் மதிப்பீடு**
08. 2024 ஓகஸ்ட் 26 ஆம் திகதி பி.ப. 2.30 இற்கு விண்ணப்பங்களின் 1ஆவது மதிப்பீடு இடம்பெறும்.
09. இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட நேரம் இலங்கையின் நிலையான நேரமாகும்.

    மேலதிக விபரங்களை பின்வரும் அதிகாரிகளிடம் இருந்து பெற முடியும் -
    **முகாமையாளர் - (பெறுகை மற்றும் இறக்குமதிகள்),**
    **வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனி,**
    **லக்பொஹொர ஸ்வர்ணஜயந்தி மாவத்தை**
    **ஹுனுப்பிட்டி, வத்தளை,**
    **இலங்கை.**
    **தொலைபேசி: 94-11-2947765 அல்லது 94-77-2069981,**
    **இணையதளம்: www. lakpohora.lk**
    **மின்னஞ்சல்: actgpm@lakpohora.lk/ pm@statefertilizer.lk**

**தலைவர்**
**திணைக்கள பெறுகை குழு (DPC),**
**வரையறுக்கப்பட்ட அரச உரக் கம்பனி,**
**பெறுகை பிரிவு,**
**லக்பொஹொர ஸ்வர்ணஜயந்தி மாவத்தை**
**ஹுனுப்பிட்டி,**
**வத்தளை,**
**இலங்கை.**

**திகதி: 2024 ஓகஸ்ட் 05**


# மனாராத் மகளிர் அமைப்பினால் பெண்களுக்கான ஒன்றுகூடல்

பேருவளை சீனன்கோட்டை மனாராத் மகளிர் அமைப்பினால் பெண்களுக்கான அல்குர்ஆன் ஒன்றுகூடல் நிகழ்வொன்று எதிர்வரும் வெள்ளிக் கிழமை (09) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'அல்குர்ஆன் பெண்கள் பற்றி என்ன சொல்கிறது' என்ற கருப் பொருளில் நடைபெற இருக்கின்ற இந்நிகழ்வில் மனாராத் மகளிர் அமைப்பின் போசகரும் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி) மற்றும் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அப்பாஸ் (நளீமி) ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

மனாராத் மகளிர் அமைப்பின் தலைவி பஸ்லா ஸினான் தலைமையில் பேருவளை ஸாரா வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளதோடு, சுமார் முன்னூறு பெண்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அத்துமீறி மீன்பிடி; நான்கு இந்திய மீனவர்கள் கைது

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட நான்கு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் கோவிலான் கலங்கரை விளக்க கடற்பரப்பில் கடற்படையினரும் கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தினரும் இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போதே இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் படகும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

# சிறுவர் துஷ்பிரயோகம் சந்தேக நபர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் பிரதேசத்திலுள்ள நான்கு பொலிஸ் பகுதியில் கடந்த 30 மற்றும் 31ம் திகதிகளில் ஐந்து சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி பரசன்கஸ்வெவ பொலிஸ் பகுதியில் 16 வயதுடைய சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தையின் 39 வயதுடைய சகோதரன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 50 வயதுடைய சந்தேக நபரொருவரை கைது செய்வதற்கு பரசன்கஸ்வெவ பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நிலையில் கலாதிவுல்வெவ பொலிஸ் பகுதியில் வசித்து வரும் 14 வயதுடைய சிறுமியொருவரை ஏமாற்றி பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 25 வயதுடைய சிறுமியின் காதலனை கலாதிவுல்வெவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.


THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

**MINISTRY OF IRRIGATION**

**REQUEST FOR BIDS (RFB)**

**Climate Resilience Multi-Phase Programmatic Approach (L.N.:8996-LK)**

**NATIONAL COMPETITIVE BIDDING**

**Procurement of Goods**

**PROCUREMENT OF AWARENESS CENTER CHAIRS FOR NATIONAL BUILDING RESEARCH ORGANIZATION**

**Contract No.: SLMOI/CRES/NBRO/G/NCB/48**

**and**

**PROCUREMENT OF OFFICE FURNITURE FOR LANDSLIDE EARLY WARNING CENTRE AT NATIONAL BUILDING RESEARCH ORGANIZATION**

**Contract No.: SLMOI/CRES/NBRO/G/S/47**

**Procurement of Works**

**CONSTRUCTION OF FIELD OFFICE AT HOLOMBUWA GAUGING STATION**

**Contract No.: SLMOI/CRES/ID/W/NCB/27**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the International Bank for Reconstruction and Development (IBRD) towards the cost of Climate Resilience Multi-Phase Programmatic Approach of Ministry of Irrigation, and intends to apply part of the proceeds of this loan to payments under the above contracts.
2. The Chairman, **Project Procurement Committee** on behalf of **Climate Resilience Multi-Phase Programmatic Approach** now invites sealed Bids from eligible and qualified Bidders for **above goods & works contracts separately.**
3. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) procedure.
4. Interested bidders may obtain further information from **Project Director, Climate Resilience Multi-Phase Programmatic Approach, No. 11, Jawatta Road, Colombo 05, T.P: 011 250 7855/011 205 8451, fax: 011 205 8451, E-mail pdcresmpa@gmail.com**, and inspect the bidding documents free of charge **from 6th August, 2024 to 26th August, 2024** during normal working days from 9.30 a.m. to 3.30 p.m.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested Bidders on submission of a written application to the address below during normal working days from **6th August, 2024 to 26th August, 2024 until 3:30 p.m.** upon payment of a non-refundable fee as per the Table No. 01. The method of payment will be by cash.

**Table 01**

| RFB Reference | Non Refundable Tender Fee |
|---|---|
| SLMOI/CRES/NBRO/G/NCB/48 | LKR 5,000.00 |
| SLMOI/CRES/NBRO/G/S/47 | LKR 1,700.00 |
| SLMOI/CRES/ID/W/NCB/27 | LKR 5,000.00 |

6. Bids shall be delivered in duplicate to the address below as per the time and date mentioned in Table No. 02. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend.

**Table 02**

| RFB Reference | Bid Submission & Opening |
|---|---|
| SLMOI/CRES/NBRO/G/NCB/48 | 27th August, 2024 – 1000 hrs |
| SLMOI/CRES/NBRO/G/S/47 | 27th August, 2024 – 1100 hrs |
| SLMOI/CRES/ID/W/NCB/27 | 27th August, 2024 – 1200 hrs |

7. Bids shall be valid until **02nd December, 2024.**
8. Bids shall be accompanied by a **Bid-Security,** (*as per the format given in the Bidding Document*) as Table No. 03,

**Table 03**

| RFB Reference | Bid Security |
|---|---|
| SLMOI/CRES/NBRO/G/NCB/48 | LKR 234,000.00 |
| SLMOI/CRES/ID/W/NCB/27 | LKR 170,000.00 |

Bid Security shall be valid until **30th December, 2024.**

9. Pre-Bid Meeting will be arranged on 13th August, 2024 as per the Table No. 04, at the Conference Room, Climate Resilience Multi-Phase Programmatic Approach, No.11, Jawatta Road, Colombo 05.

**Table 04**

| RFB Reference | Pre Bid Meeting |
|---|---|
| SLMOI/CRES/NBRO/G/NCB/48 | 13th August, 2024 – 1000 hrs |
| SLMOI/CRES/NBRO/G/S/47 | 13th August, 2024 – 1100 hrs |
| SLMOI/CRES/ID/W/NCB/27 | 13th August, 2024 – 1300 hrs |

**Chairman,**
**Project Procurement Committee**
**Climate Resilience Multi-Phase Programmatic Approach**
**No. 11, Jawatta Road,**
**Colombo 05.**
5th August, 2024



**The Housewives' companion Classifieds on Daily News**

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## பெறுகை அறிவித்தல்

### வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

### மத்திய மாகாணம்

மத்திய மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பெறுகைக் குழுத் தவிசாளரினால் நிர்மாணம் மற்றும் பொருட்களை வழங்குவதற்காக நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதிகார சபையில் (CIDA) வீதிகள் துறையில் செல்லுபடியாகும் பதிவு, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரப் பதிவைக் (கைத்தொழிலுக்கு இயைபாக) கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வித் தொகை 5 அல்லது 5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைய பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

இதன் பிரகாரம் உங்கள் நிறுவனத்தினால் கேள்விகளைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்திருந்தால் இயைபுடைய கைத்தொழில் மற்றும் உங்களின் மின்னஞ்சல் முகவரியை சரியாகக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றை 2024-08-06ஆம் திகதி முதல் 2024-08-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் prdatender@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது.

கேள்விப் படிவங்கள் வழங்கும் இறுதி நாள் 2024-08-26ஆம் திகதி பி.ப. 04.00 மணியாகும் என்பதுடன் ஏனைய முக்கிய தகவல்கள் பின்வருமாறாகும்.

1. உங்களால் விண்ணப்பிக்கப்படும் வேலைக்கு இயைபான தகவல்களை வேண்டுகோள் கடிதத்தில் சரியாகவும் தெளிவாகவும் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். தகவல்கள் சரியாக இல்லாவிட்டால் அறிவிக்கப்படாமலேயே உங்களது வேண்டுகோள் கடிதம் நிராகரிக்கப்படும்.
2. மின்னஞ்சல் மூலமான வேண்டுகோள் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளல் 2024-08-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் இத்தினத்திற்கு முன் வேண்டுகோள் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ள ஒப்பந்த நிறுவனங்களுக்கு மட்டும் 2024-08-06ஆம் திகதி முதல் 2024-08-26ஆம் திகதி வரையில் அலுவலக நேரங்களில் மட்டும் கேள்விப் படிவங்கள், கேள்விதாரரினால் வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.
3. 2024-08-20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 09, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி எனும் முகவரியில் இடம்பெறும்.
4. இயைபுடைய கேள்விப் படிவங்களின் மென் பிரதியை உங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் உங்களால் கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு வன் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும். உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கேள்விப் படிவத்தின் மென் பிரதியில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல பக்கங்களும் உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்படிவத்தின் மூலப் பிரதியின் மற்றும் நகல் பிரதி உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இணைப்பில் குறிப்பிட்டுள்ள வகையில் வேலைக்கு இயைபான தொடரிலக்கம் மற்றும் வேலையின் பெயரையும் மூலப் பிரதியா அல்லது நகல் பிரதியா என்பதை தெளிவாகவும் மற்றும் சரியாகவும் குறிப்பிடவும். முறையாகப் பூர்த்தி செய்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறு உறைகளிலிட்டு **தலைவர், பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு, 109, யடிநுவர வீதி, கண்டி** எனும் முகவரிக்கு 2024-08-27ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது இக்காரியாலயத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கோ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
5. கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்த உடனடுத்து கண்டி, இல. 109, யட்டிநுவர வீதி எனும் முகவரியிலுள்ள வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சில் கேள்விகள் திறக்கப்படுமென்பதுடன் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்ளலாம்.
6. கேள்விப் படிவங்கள் வழங்கப்படுவதற்காக மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எவ்விதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. தேவையான மேலதிக விபரங்களை கண்டி, போகம்பரை, இல. 09, எஹல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரிடமிருந்து 081-2052279, 081-2204378 எனும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் prdatender@gmail.com எனும் மின்னஞ்சலின் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் ஒப்பந்த நிறுவனத்தினால் முன்னைய வருடங்களில் நிறைவேற்றப்பட்ட வினைத்திறன் ஒப்பந்தங்களை வழங்கும் போது கவனத்திற் கொள்ளப்படும். மேலும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களைக் கையளிப்பதற்கு இயைபான சுற்றுநிருபங்களின் விதிமுறைகள் பெறுகை நடவடிக்கைகளுக்கு பிரயோகிக்கப்படும். அதேபோல் ஒரு ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தத்தை வழங்கமுடியுமா என்பது பற்றி பெறுகைக் குழு தீர்மானிக்கும்.

மேலும், மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் கூரை திருத்தவேலைகளைச் செய்வதற்கான விலைக்கோரலுக்கு இயைபான மேலதிக விபரங்களை கண்டி, யட்டிநுவர வீதி, இல. 109, முதலாம் மாடியில் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 081-2234769 மற்றும் E-mail: ministryofroadscp@gmail.com) இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 1,500.00 ரூபாவை கண்டி, யட்டிநுவர வீதி, இல. 109, முதலாம் மாடியில் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட வேண்டுகோள் கடிதமொன்றுடன் அமைச்சின் திட்டமிடல் பிரிவிற்கு சமர்ப்பித்து 2024-08-06ஆம் திகதி முதல் 2027-08-26ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2024-11-12ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, மின்சாரம் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் செயலாளரின் பெயரில் வழங்கப்பட்ட 140,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைக்கோரல் பிணை முறியானது 2024-12-24ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். அல்லாவிட்டால் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியாளருக்கு இலங்கையில் செல்லுபடியாகும் பண அலகில் 70,000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் சான்றுபடுத்திய பிரதியொன்றை விலைக்கோரல் பிணை முறியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி ஆவணங்களுடன் உங்களால் வழங்கப்படும் ஆவணங்களை சரியாகவும் மற்றும் கேள்விப் படிவத்தில் தரப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு அமைவாகவும் சமர்ப்பித்தல் உங்கள் பொறுப்பாகும் என்பதுடன் இயைபான தகவல்கள் சரியாகச் சமர்ப்பிக்கப்படாமை கேள்விகள் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம். மேலும் ஏதாவது ஒரு கேள்வியை அல்லது எல்லாக் கேள்விகளையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவின் தவிசாளருக்கு உண்டென்பதுடன், ஆகக் குறைந்த விலைமனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடப்பாடும் இல்லை.

**தவிசாளர்,**
**பெறுகைக் குழு.**

**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும்**
**வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு,**
**109, யட்டிநுவர வீதி, கண்டி.**

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை
### மூன்றாம் கட்ட பெறுகைகள் கோரல் - 2024

| இல. | ஒப்பந்த இலக்கம் | விபரங்கள் | ICTAD பதிவு | அளவுப் பத்திரத்தின் பெறுமதி (ரூ. மில்.) | கேள்விப் பிணை முறி 120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்விப் பிணை ரொக்கப் பணமாக (ரூபா) | கேள்விப் பிணை வங்கிப் பிணையாக (ரூபா) |
| **மாகாண நிலையான அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித்திட்டம்** | | | | | | |
| **கண்டி மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கண்டி** | | | | | | |
| 1 | CPC/PRDA/PSDG/K/KAN/2024/04 | பேராதனை தோட்ட வீதியில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் மற்றும் வீதித் தளத்தைப் பராமரித்தல் (0+750-1+200Km) | C6 & C5 | 11.07 | 54,000.00 | 108,000.00 |
| 2 | CPC/PRDA/PSDG/K/KAN/2024/05 | பண்டரெல்தெனிய வீதியை கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (0+000 -0+400 Km) | C7 & C6 | 8.45 | 42,500.00 | 85,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ஹாரிஸ்பத்துவ** | | | | | | |
| 3 | CPC/PRDA/PSDG/K/HAR/2024/07 | அரத்தன பெத்தேகம வீதியில் உள்ள பாலத்தில் Desh Slab நிர்மாணித்தல் நீளம் 30 m (1+56Km) | C7 & C6 | 9.26 | 46,500.00 | 93,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - குண்டசாலை** | | | | | | |
| 4 | CPC/PRDA/PSDG/K/KUN/2024/03 | உடுதும்பர கலுத்தென்ன தெம்மிட்டியான வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் (6+100km) | C8 & C7 | 4.95 | 24,500.00 | 49,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கம்பொல** | | | | | | |
| 5 | CPC/PRDA/PSDG/K/GAM/2024/07 | கிராவுல்ல வரகாவல வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் மற்றும் "U" வடிவில் வடிகானை நிர்மாணித்தல் (0+800Km) | C8 & C7 | 2.77 | 14,000.00 | 28,000.00 |
| **மாத்தளை மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - மாத்தளை** | | | | | | |
| 6 | CPC/PRDA/PSDG/M/MAT/2024/03 | ரத்தொட்ட தங்கந்த மதகை நிர்மாணித்தல் மற்றும் பக்கச் சுவரை நிர்மாணித்தல் (8+250km) | C8 & C7 | 4.05 | 20,500.00 | 41,000.00 |
| 7 | CPC/PRDA/PSDG/M/MAT/2024/04 | திக்கும்புர பதின்கஸ்கொடவ வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் (0+450km) LHS | C8 & C7 | 2.42 | 12,500.00 | 25,000.00 |
| 8 | CPC/PRDA/PSDG/M/MAT/2024/05 | கல்ஒய வாரியபொல வீதியில் வரம்பிற்கு கொங்கிறீட் இடுதல் (0+200 -0+267), (1+028 - 1+078), (1+84-1+174 Km) | C9 & C8 | 1.60 | 8,500.00 | 17,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - நாஉல** | | | | | | |
| 09 | CPC/PRDA/PSDG/M/NAU/2024/03 | பதன பிடவல வீதிக்கு அஸ்போல்ட் இட்டு அபிவிருத்தி செய்தல் (1+330-1+830km) | C7 & C6 | 7.94 | 40,000.00 | 80,000.00 |
| **நுவரெலியா மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - திம்புல்ல** | | | | | | |
| 10 | CPC/PRDA/PSDG/N/DIM/2024/03 | டன்சினன் பூண்டலுஓயா வீதிக்கு முன்கலவை இடுதல் மற்றும் இரண்டாம் முறை தார் இடுதல் (13+100 - 15+920km) | C8 & C7 | 4.23 | 21,500.00 | 43,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ராகல** | | | | | | |
| 11 | CPC/PRDA/PSDG/N/RAG/2024/04 | வாவி மற்றும் சந்ததென்ன வீதியில் "U" வடிவான கொங்கிறீட் வடிகான் மற்றும் வீதி வரம்பை நிர்மாணித்தல் (0+844-1+000km) | C7 & C6 | 6.09 | 30,500.00 | 61,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ரிகில்லகஸ்கட** | | | | | | |
| 12 | CPC/PRDA/PSDG/N/RAG/2024/02 | மகுருப்ப இல்லகொல்ல வீதியில் முதலாம் முறை மற்றும் இரண்டாம் முறை தார் இட்டு அபிவிருத்தி செய்தல் (1+200- 2+000 Km) | C7 & C6 | 7.32 | 37,000.00 | 74,000.00 |
| **வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம்** | | | | | | |
| **கண்டி மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கண்டி** | | | | | | |
| 13 | CPC/PRDA/MAIN/K/KAN/2024/03 | தந்துரே அமுகல ஹேனாவல வீதியில் கொங்கிறீட் வடிகான் நிர்மாணித்தல் (3/3 Culvert, 3/5 Culvert) | C9 & C8 | 1.25 | 6,500.00 | 13,000.00 |
| 14 | CPC/PRDA/MAIN/K/KAN/2024/04 | தந்துரே தம்பகொட ஹேனாவல வீதியில் கொங்கிறீட் வடிகான் மற்றும் வரம்பை நிர்மாணித்தல் (0+810 -0+950km) | C8 & C7 | 2.15 | 11,000.00 | 22,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ஹாரிஸ்பத்துவ** | | | | | | |
| 15 | CPC/PRD/MAIN/K/HAR/2024/04 | ஹெதெனிய போலகல பல்லேகொட்டுவ வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் (4+000 Km) | C8 & C7 | 4.29 | 21,500.00 | 43,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - குண்டசாலை** | | | | | | |
| 16 | CPC/PRDA/MAIN/K/KUN/2024/05 | கரந்தகொல்ல நிகுலேதென்ன பச்சகொட்டுவ வீதியில் வடிகான் முறைமையை அமைத்தல் மற்றும் வீதி மேற்பரப்பிற்கு முன்கலவை இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்பை நிர்மாணித்தல் (0+000-0+800km) | C7 & C6 | 9.49 | 47,500.00 | 95,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கம்பொல** | | | | | | |
| 17 | CPC/PRDA/MAIN/K/GAM/2024/03 | குரு பஹுர தெனும்மிலியத்த வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் (0+990km) LHS | C8 & C7 | 2.11 | 11,000.00 | 22,000.00 |
| **மாத்தளை மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - மாத்தளை** | | | | | | |
| 18 | CPC/PRDA/MAIN/N/MAT/2024/03 | வீதிப் பராமரிப்பிற்காக கிவுல முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் (முன்கலவை அளவு 145.00 CU.M) | C8 & C7 | 2.39 | 12,000.00 | 24,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - நாஉல** | | | | | | |
| 19 | CPC/PRDA/MAIN/N/NAU/2024/02 | ஹுங்கத்வெல அலுத்கம வீதியில் கட்டமைப்பை நிர்மாணித்தல் (0+000-0+750 Km) | C8 & C7 | 2.20 | 11,500.00 | 23,000.00 |
| 20 | CPC/PRDA/MAIN/N/NAU/2024/03 | மாதிபொல பெலிகமுவ வீதியில் கடுமையான வரம்பு அமைத்தல், வடிகான் முறைமையை நிர்மாணித்தல் மற்றும் மதகுகளின் திருத்தவேலைகள் (0+000-0+400 Km) | C9 & C8 | 1.63 | 8,500.00 | 17,000.00 |
| **நுவரெலியா மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - திம்புல்ல** | | | | | | |
| 21 | CPC/PRDA/MAIN/N/DIM/2024/02 | பதுபொல மடில்ல தினியாகல வீதியில் கட்டமைப்பை நிர்மாணித்தல் (0+00-1+000Km) | C8 & C7 | 3.04 | 15,500.00 | 31,000.00 |
| 22 | CPC/PRDA/PSDG/N/DIM/2024/04 | கும்பல்ஒலுவ முற்றவெளி வளவில் மலசலகூடம் நிர்மாணித்தல் | C9 & C8 | 0.92 | 5,000.00 | 10,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ராகல** | | | | | | |
| 23 | CPC/PRDA/MAIN/N/RAG/2024/03 | ராகல முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C9 & C8 | 1.92 | 10,000.00 | 20,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ரிகில்லகஸ்கட** | | | | | | |
| 24 | CPC/PRDA/MAIN/N/RIK/2024/04 | பெரவங்குவ உனன்தென்ன வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் (Ch 5+510) | C8 & C7 | 3.89 | 19,500.00 | 39,000.00 |
| **ஏனையவை** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ராகல** | | | | | | |
| 25 | CPC/PRDA/PTSA/N/RAG/2024/01 | ராகல பஸ் நிலைய இடப்பரப்பில் கல் தார் இட்டு அபிவிருத்தி செய்தல் | C7 & C6 | 5.22 | 26,500.00 | 53,000.00 |
| **தார் வழங்குதல்** | | | | | | |
| 26 | CPC/PRDA/PSDG/TAR/2024/04 | தார் வழங்குதல் (80/100) | தார் மற்றும் திரவத் தார் வழங்குவதற்கான வியாபாரப் பதிவு | 5.62 | 28,500.00 | 57,000.00 |
| 27 | CPC/PRDA/MAIN/TAR/2024/02 | தார் வழங்குதல் (80/100) | தார் மற்றும் திரவத் தார் வழங்குவதற்கான வியாபாரப் பதிவு | 3.59 | 18,000.00 | 36,000.00 |
| **வீதி அமைச்சின் மானியம்** | | | | | | |
| **வீதி அபிவிருத்தி அமைச்சு** | | | | | | |
| 28 | CPC/RM/3/7/2/Roof/2024-03 | வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கூரை திருத்தவேலைகள் | C7 & C6 | 5.32 | 70,000.00 | 140,000.00 |

Daily News Classifieds, the Housewives' companion

## இலக்கம் 01 கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை ஹம்பாந்தோட்டை மாவட்டம் 2025

ஹம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் முதலாம் இலக்க கள்ளுத் தவறணையில் சில்லறையாக கள்ளு விற்பதற்கான கேள்விப் பத்திரம் 2024.09.05ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை ஹம்பாந்தோட்டை பிரதேசச் செயலாளரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2024.07.26 திகதியன்றைய 2395 இலக்க வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**ஜீ.சீ.ஆர். விஜேவர்தன,**
**பிரதேசச் செயலாளர்,**
**ஹம்பாந்தோட்டை**

**பிரதேசச் செயலாளர்,**
**பிரதேசச் செயலாளர் காரியாலயம்**
**ஹம்பாந்தோட்டை**
**2024.07.26**


## For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343


## விலைமனுக்கோரல்

## மாவட்டசெயலகம் - புத்தளம்

**புத்தளம் மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்றிட்டங்கள் தொடர்பாக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| தொ. இல | விலை மனு இல | செயற்றிட்டத்தின் பெயர் | மதீப்பீடு செய்யப்பட்ட பணிகளின் பெறுமதி (ரூபா) | சீடா பதிவு இல | மீள் செலுத்தப்படாத விலைமனு தொகை (ரூபா) | விலைமனுப் பிணை பணம் (ரூபா) மற்றும் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | PU/PR/ CO/24/53 | தங்கொட்டுவ கைத்தொழில் வலயத்தின் மழை நீர் வழிந்தோடும் சாக்கடை முறைமையினை நிர்மாணித்தல் | 15.5 மில்லியன் | C-5 அல்லது C-6 மட்டும் (கட்டடம்) | ரூபா. 10,000.00 | ரூபா 170,000.00 2024.11.29 வரை |
| 02 | PU/PR/ CO/24/54 | தங்கொட்டுவ கைத்தொழில் வலயத்தின் நிர்வாக கட்டடத்தின் கூரையினை செப்பனிடுதல் | 5.8 மில்லியன் | C-6 அல்லது C-7 மட்டும் (கட்டடம்) | ரூபா. 3,000.00 | ரூபா 60,000.00 2024.11.29 வரை |

02. மேற்கூறப்பட்ட விலைமனு ஆவணங்கள் 2024.08.05 ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2024.08.29 ஆந் திகதி வியாழக்கிழமை வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை மேற்குறிப்பிட்ட கட்டணத்தை புத்தளம் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் அல்லது புத்தளம் இலங்கை வங்கிக் கிளையில் செலுத்திய பின்னர் மாவட்ட செயலகக் கொள்வனவு அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுவினை விலைமனு வழிகாட்டற் கோவையில் இல 19ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு "மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி" என தொகுதி இரண்டாக பூர்த்திசெய்து முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் வெவ்வேறாக இட்டு அவற்றின் இடப்பக்கமேல் மூலையில் உரிய விலைமனு இலக்கம் மற்றும் வேலை விடயத்தினை குறிப்பிட்டு 2024.08.30 ஆம் திகதியான வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மாவட்ட செயலாளர் / தவிசாளர், திணைக்கள கொள்வனவு சபை, முதலாம் மாடி, கணக்கு கிளை, மாவட்ட செயலகம் புத்தளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது முதலாம் மாடி, கணக்கு கிளையில் உள்ள மாவட்டசெயலக கொள்வனவு அலகில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் இடுமாறோ வேண்டப்படுகின்றனர். பி.ப. 2.00 மணி நிறைவடைந்ததும் விலைமனுப்பத்திரம் மாவட்ட செயலகக் கொள்வனவு அலகினால் திறக்கப்படும்.

04. தகைமையான நிறுவனத்தினை தெரிவு செய்வதில் நிறுவனத்தின் பதிவு மற்றும் அனுபவங்கள் உட்பட்ட அனைத்து விடயங்களும் கவனத்திற்கொள்ளப்படும் என்பதால் உங்கள் அனுபவங்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

05. விலைமனு மதிப்பிடலின் போது வடமேல் மாகாணத்தில் உள்ள ஒப்பந்தக்கார்களுக்கு 5% முன்னுரிமை வழங்கப்படும்.

06. விலைமனுவிற்கு முன்னரான கூட்டம் 2024.08.20 ஆந் திகதியன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடாத்தப்படும்.

07. விலைமனு திறக்கப்படும்போது விலை மனுதாரர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதியுண்டு.

08. மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலகத்தின் 032-2265233 அல்லது 032-2265234 என்ற தொலைபேசி வழியினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**2024.08.05**

**எச்.எம்.எஸ்.பி.ஹேரத்**
**மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்**
**தவிசாளர் திணைக்கள கொள்வனவு சபை**
**மாவட்ட செயலகம், புத்தளம்**

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

## முதலீட்டு சந்தர்ப்பங்கள்

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு உரிமையுள்ளதும் கொழும்பு துறைமுகத்தினுள்ளே அமைந்துள்ள பெறுமதியுள்ள காணிப்பரப்பை சர்வதேச துறைமுகம் தொடர்பான சேவை வழங்கல் நிலையத்திற்கு குத்தகைக்கு வழங்கல்

1. கொழும்பு துறைமுகத்தின் ஆழநீர் கொள்கல முனையங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள 10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் சர்வதேச துறைமுகங்கள் தொடர்பான சேவை வழங்கல் நிலையமொன்றை செயற்படுத்த விரும்புகிறவர்களிடமிருந்து சாத்தியமான விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது அழைப்பதற்கு விரும்புகின்றது.
2. ஆர்வமுள்ள சாரார் கீழே கூறப்பட்டுள்ளவாறு கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டி ஆவணம் ஆகியவற்றை இதுஅ இடமிருந்து பெற்றுக் கொண்ட பின்னர் விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
3. 2024.08.05 ஆம் திகதியன்று ஆரம்பித்து வார நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 2024.08.26 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணி வரையும் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 464ஏ ஆம் இலக்க HQ கொழும்பு கட்டிட 8 ஆம் மாடியின் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் காணி முகாமைத்துவ பிரிவு பிரதான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டி ஆவணம் ஆகியவற்றை, கேள்வியிடக்கூடிய வரிகள் அல்லது நிருவாக அறவீடுகளின் ஆகுசெலவாக மீளளிக்கப்படாத தொகையாக 100,000 ரூபா அல்லது 325 அஐடொ செலுத்திய பின்னர், பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்விப்பிணையின் தொகையானது 1 மில்லியன் அஐடொ என்பதுடன் நிபந்தனையற்ற உத்தரவாதங்களுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட, இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது இதுஅ இன் நிதிப் பிரிவிற்கு ரொக்கப்பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
5. தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையுடன் குத்தகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.
6. ஆரம்ப குத்தகை ஒப்பந்த காலமானது 35 வருடங்களாகும்.
7. உள்ளூர் இறக்குமதி அல்லது உள்ளூர் ஏற்றுமதி மற்றும் பலநாடுகள் ஒன்றிணைந்த உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றிற்கான இதுஅ இற்கான தண்டப்பண விகித பணக்கொடுப்பனவுகள் கேள்வி விண்ணப்பங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.
8. விலைமனுதாரரின் நிதி நிலைமையை உறுதி செய்வதற்காக விலைமனுதார் கீழே வழங்கப்பட்டுள்ள தகைமைகளுக்கான ஆகக் குறைந்த தகவுத்திறனையை திருப்திப்படுத்தல் வேண்டும்.
   ஏ) தகுதிக்காக முன்னைய நிதி ஆண்டுகளில் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளின் வருடாந்த வருமானது 15 பில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும். அதே காலப்பகுதிக்காக வெளிநாட்டு அமைப்புக்கள் வருடாந்த நிதிப்புரள்வாக 50 மில்லியன் அஐடொ ஐ கொண்டிருத்தல் வேண்டும். கூட்டு ஆதனங்களின் வருமானது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் அறிக்கைகள் 15 பில்லியன் ரூபாவை விஞ்சினால் மாத்திரமே கூட்டு ஆதனங்கள் அனுமதிக்கப்படும்.
9. விலைமனுக்கள் பாதுகாப்பு முத்திரைக்குறி இடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "LEASE OF VALUABLE LAND AREA INSIDE THE PORT OF COLOMBO BELONGING TO SRI LANKA PORTS AUTHORITIES FOR THE PURPOSE OF INTERNATIONAL PORT RELATED SERVICE SUPPLY CENTER (Ref. No. SLPA/PREM/03/06/2024)" என குறிப்பிடப்பட்டு இடப்பரப்புக்கள் மற்றும் காணி அபிவிருத்தி பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடப்படல் வேண்டும்.

**விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய முகவரி:**
**பிரதான முகாமையாளர் (இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவம்),**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**5 ஆம் மாடி, தலைமையக கொழும்பு கட்டிடம்,**
**இல. 464ஏ, T.B. ஜாயா மாவத்தை**
**கொழும்பு-10.**

10. விலைமனுக்கள் 2024.08.27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2024.08.27 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு முன்மொழிவுகள் கேள்விச் சபையினால் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
11. இது தொடர்பான மேலதிக விபரங்கள் 0711732275 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பதில் கடமையாற்றும் பிரதி பிரதான முகாமையாளரிடமிருந்து (இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவம்) பெற்றுக் கொள்ளலாம்.
12. இந்த விலைமனுக்கோரல் செயற்பாட்டிற்கான எந்தவொரு நிகழ்வு தொடர்பாக எந்தவொரு சாராருக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவிற்கான எந்த கடப்பாட்டையும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது ஏற்றுக் கொள்ளாது.

## கேள்விக் கோரல்களுக்கான அழைத்தல்

**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள்**

**BID No.: 079/T/2024**

**SUPPLY OF BRAND NEW 03 Nos. BAGGAGE TRACTOR FOR COLOMBO INTERNATIONAL AIRPORT, RATMALANA AND JAFFNA INTERNATIONAL AIRPORT, PALALI**

கொழும்பு சர்வதேச விமானநிலையம், இரத்மலான மற்றும் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம், பலாலி ஆகியவற்றிற்காக 03 எண்ணிக்கையான புத்தம் புதிய பயணப்பொதி ட்ரக்டர்களை வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் ஆகியவற்றின் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான கோரிக்கைக் கடிதத்துடன் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவண கட்டணமாக பன்னிரண்டாயிரம் (12,000 ரூபா) ரூபாவை ரொக்கப் பணத்தில் அல்லது நாற்பது அமெரிக்க டொலர்களை மீளளிக்கப்படாத கேள்விக்கோரல் ஆவணக் கட்டணமாக உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக செலுத்திய பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களிலேயே கேள்விக்கோரல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.08.06 ஆம் திகதியிலிருந்து 2024.08.27 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் உட்சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

கேள்விக் கோரல்கள் 2024 ஓகஸ்ட் 28 ஆம் திகதியன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விக்கோரல்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் கோரும்போது பெறக்கூடிய வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் ஒன்பது இலட்சத்து அறுபதாயிரம் இலங்கை ரூபாவிற்கு (960,000 இ. ரூபா) நிகரான வங்கி உத்தரவாதமொன்று கேள்விக்கோரலுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனைத்து கேள்விதாரர்களும் அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிநிதிகளும் 2024.08.16 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் (ஸ்ரீலங்கா) (தனியார்) புதிய நிருவாக கட்டிட 4 ஆம் மாடி, மாநாட்டு அறையில் நடைபெறவுள்ள விலைமனு கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அழைக்கப்படுகின்றனர். கூட்டமானது ZOOM மூலமாக இணைக்கப்படுவதுடன் இணைப்பு விபரங்கள் கேள்விக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்த கேள்விதாரர்களுக்கு வழங்கப்படும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலைய சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து 011-2264102 / 022-3364103 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் அல்லது **head.scm@airport.lk** என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது **www.airport.lk** என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

## கேள்விக் கோரல்களுக்கான அழைத்தல்

**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள்**

**BID No.: 080/T/2024**

**SUPPLY OF BRAND NEW 02 Nos. OF 90 KVA GROUND POWER UNITS FOR COLOMBO INTERNATIONAL AIRPORT, RATMALANA AND JAFFNA INTERNATIONAL AIRPORT, PALALI**

கொழும்பு சர்வதேச விமானநிலையம், இரத்மலான மற்றும் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம், பலாலி ஆகியவற்றிற்காக 02 எண்ணிக்கையான புத்தம் புதிய Ground Power Units ஐ வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் ஆகியவற்றின் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான கோரிக்கைக் கடிதத்துடன் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவண கட்டணமாக இரண்டாயிரம் (2,000 ரூபா) ரூபாவை ரொக்கப் பணத்தில் அல்லது ஆறு அமெரிக்க டொலர்களை மீளளிக்கப்படாத கேள்விக்கோரல் ஆவணக் கட்டணமாக உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக செலுத்திய பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார் விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களிலேயே கேள்விக்கோரல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.08.06 ஆம் திகதியிலிருந்து 2024.08.26 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் உட்சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

கேள்விக் கோரல்கள் 2024.08.27 ஆம் திகதியன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன்பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விக்கோரல்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் கோரும்போது பெறக்கூடிய வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் ஒரு இலட்சத்து இருபதாயிரம் இலங்கை ரூபாவிற்கு (120,000 இ. ரூபா) நிகரான வங்கி உத்தரவாதமொன்று கேள்விக்கோரலுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனைத்து கேள்விதாரர்களும் அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிநிதிகளும் 2024.08.16 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) புதிய நிருவாக கட்டிட 4 ஆம் மாடி, மாநாட்டு அறையில் நடைபெறவுள்ள விலைமனு கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அழைக்கப்படுகின்றனர். கூட்டமானது ZOOM மூலமாக இணைக்கப்படுவதுடன் இணைப்பு விபரங்கள் கேள்விக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்த கேள்விதாரர்களுக்கு வழங்கப்படும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (லங்கா) விமானநிலைய சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து 011-2264102 / 022-2264103 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் அல்லது **head.scm@airport.lk** என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது **www.airport.lk** என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

# திருத்த அறிவித்தல்

**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள்**

**BID No.: 031/T/2024**

2024 ஜூலை 29 ஆம் திகதியன்று மேலேயுள்ள விலைமனு தொடர்பாக டெயிலி நியுஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விடயத்திற்கு மேலானது.

ஒப்பந்தக் கால எல்லையானது ‘‘இருநூற்றி நாற்பது (240) நாட்கள் என திருத்தப்படல் வேண்டும்.

மீளளிக்கப்படாத கட்டணமானது 14,000 ரூபாவென திருத்தப்படல் வேண்டும்.

கேள்வி உத்தரவாதமானது எட்டு இலட்சத்து எழுபதாயிரம் ரூபாவென திருத்தப்படல் வேண்டும்.

விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் இடமானது ‘‘கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய , வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் **P & D** பிரிவின் மாநாட்டு அறை’’ என திருத்தப்படல் வேண்டும்.

**www.airport.lk** என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலம் எந்தவொரு மேலதிக தகவலையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

# இரத்தினபுரி மாவட்டத்தின் இம்புல்பே பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத்தவறணைகளை விற்றல் 2025 ம் ஆண்டு பின்னவல இல 02 கள்ளுத்தவறணை

மேற்படி கள்ளுத்தவறணையை 2024 செப்டெம்பர் 11ம் திகதி மு.ப.10.30 இற்கு இம்புல்பே பிரதேச செயலகத்தில், கேள்வி மூலம் விற்கப்படும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

02. மேலதிக விபரங்களை 2024 ஜூலை 26ம் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**டி.பீ.ஜீ. ரேணுகா**
**பிரதேச செயலாளர்**
**இம்புல்பே**

**2024.07.30**
**இம்புல்பே பிரதேச செயலகத்தில்**

# சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2024 ஆம் ஆண்டு யூன் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**எச். கே. கே. ஏ. ஜயசுந்தர**
**தொழில் ஆணையாளர் நாயகம்**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு - 05**
**2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 31ஆம் திகதி.**

| | |
|---|---|
| கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில் | வேலையாள் ஒரு நாளுக்கு ரூபா. 1842.28 |

இதற்கு மேலதிகமாக, 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வரவு - செலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வரவு - செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில் தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

Repeat Your ad For Better Offers

# விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

## சுகாதார அமைச்சு

## களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் மருத்துவதீவிர கண்காணிப்பு பிரிவின் (MICU) மத்திய வளிச்சீராக்கல் முறையின் சுத்திகரிப்புமற்றும் பராமரிப்பு

1) 365 நாட்கள் காலப்பகுதிக்காக மருத்துவ தீவிர கண்காணிப்பு பிரிவின் மத்திய வளிச்சீராக்கல் முறையின் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பிற்கான தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட ஏலவிற்பனை கோரல்களை களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

2) விலைமனுக்கோரலானது தேசியபோட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.

3) ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அ. விலைமனுதாரர் மின்னியல் மற்றும் இயந்திரவியல் சேவைகள் வகுதியின் ஈஎம் 4 அல்லது மேற்பட்டதரத்தில் CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. விலைமனுதாரர் முழுமையான வேலைத்தள வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். வேலைத்தள பணிகள் மற்றும் வேலைத்தளத்திலுள்ள கருவிகள் இன்னும் பலவும் குறிப்பிடப்படல் வேண்டும்.

4) ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு:

அ. விலைமனுதாரர் வகுதி (MVAC இல் ஈஎம்4 அல்லது மேற்பட்டது ) மற்றும் ஆகக் குறைந்தது 5 வருடபணிக்குப் பின்னரான அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரர் அவர்களின் அனுபவ விபரங்களான வளிச்சீராக்கல் வேலைகளின் பராமரிப்பு அனுபவம் மற்றும் சேவை வழங்குநர்களின் விபரங்கள் மற்றும் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற நபர் இன்னும் பலவற்றையும் வழங்கல் வேண்டும்.

ஆ. விலைமனுதாரர் முழுமையான வேலைத்தள வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். வேலைத்தள பணிகள் மற்றும் வேலைத்தளத்திலுள்ள கருவிகள் இன்னும் பலவும் குறிப்பிடப்படல் வேண்டும்.

இ. விலைமனுதாரர் தகைமையுள்ள மற்றும் அனுபவமுள்ள பணியாட்களை கொண்டிருத்தல் வேண்டும். ஆகக் குறைந்தது ஒரு பதவி நிலை அலுவலர் விஞ்ஞானி பட்டம் பெற்ற பொறியியலாளராகவிருத்தல் வேண்டும். அலுவலர்களின் தகைமைகள் மற்றும் அனுபவமானது குறிப்பிடப்படல் வேண்டும்.

ஈ. விலைமனுதாரர் தகைமை மற்றும் அனுபவமுள்ள அலுவலர்களை கொண்டிருத்தல் வேண்டும். அலுவலர்களின் தகைமைகள் மற்றும் அனுபவமானது குறிப்பிடப்படல் வேண்டும்.

உ. விலைமனுதாரர் வைத்தியசாலையினால் அல்லது ஏனைய கம்பனிகளினால் இதற்கு முன்னர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவிருத்தல் வேண்டும்.

5) ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடமிருந்து பெற்று 2024.08.05 ஆம் திகதியிலிருந்து 2024.08.20 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணிவரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

6) 2024.08.05 ஆம் திகதியிலிருந்து 2024.08.20 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத தொகையாகிய ஐந்தாயிரம் இலங்கை ரூபாவைச் (5,000 இ.ரூ.) செலுத்தியபின்னர், களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2024.08.21 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படலாம் அல்லது மேலேயுள்ள முகவரியான பணிப்பாளர், கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவிலவிற்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

8) விலைமனுவின் செல்லுபடியாகும் காலயெல்லையானது விலைமனுக்களை மூடிய பின்னர் 80 நாட்களுக்கும் பராமரிப்பு வேலை காலயெல்லையானது வேலை ஆரம்பித்த நாளிலிருந்து 365 நாட்களாகும்.

9) விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகளின் 10 ஆம் உறுப்புரையின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையின் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் 2024.12.09 ஆம் திகதிவரையும் (விலைமனுக்களின் சமர்ப்பித்தலிருந்து 119 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் களுபோவில, போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டதுமான விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் அனைத்து விலைமனுக்களும் கேள்விப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் “Bid for Service and Maintenance of Central Air Conditioning system of MICU in Colombo South Teaching Hospital, Kalubowila” என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

10) களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரானவர் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் ஒப்பந்தமொன்றையும் கையளிப்பதற்கு முன்னராக விலைமனுவொன்றின் பாகமொன்றை ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையையும் அவ்வாறான செயற்பாட்டிற்கான காரணங்களையும் வழங்காமலிருப்பதற்கான உரிமையையும் கொண்டுள்ளார். ஆகக் குறைந்த அல்லது எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கான கடப்பாட்டை தொழில் வழங்குபவர் கொண்டிருக்கமாட்டார்.

11) 2024.08.11 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுமுன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**பணிப்பாளர்,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில.**

**இலங்கை இராணுவம்**

# வழங்கல் மனுக்கோரல்

## இறுதிச் சடங்குகளுக்கான சேவை வழங்கல் - 2025

1. **2025 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2025 டிசம்பர் 31 ஆம் திகதி** வரையான காலப்பகுதியினுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கான இலங்கை இராணுவத்திற்கு இறுதிச் சடங்குகளுக்கான சேவைகளை வழங்குவதற்கு கொழும்பு, ஸ்ரீ ஜவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவ தலைமையகத்தின் வழங்கல் குழு தலைவரினால் வழங்கல்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| அவிசாவளை | கிளிநொச்சி | பனாகொடை | முல்லைத்தீவு |
| அனுராதபுரம் | கொழும்பு | புத்தளம் | மொனராகலை |
| அம்பலாந்தோட்டை | கம்பஹா | பொலன்னறுவை | யாழ்ப்பாணம் |
| அம்பாறை | காலி | பதுளை | இரத்தினபுரி |
| எம்பிலிபிட்டிய | திருக்கோணமலை | பண்டாரவளை | வவுனியா |
| கந்தளாய் | தியதலாவை | கண்டி | சிலாபம் |
| களுத்துறை | தம்புள்ளை | மாத்தறை | ஹபரணை |
| கேகாலை | நாவுல | மாத்தளை | ஹம்பாந்தோட்டை |
| குருநாகல் | நுவரெலியா | நீர்கொழும்பு | ஹட்டன் |

2. மனு ஆவணங்களை வழங்குதல், மனுக்களை சமர்ப்பித்தல், மனுக்களை திறப்பதற்கான திகதி மற்றும் நேரம் பின்வருமாறு, மேலும் விண்ணப்பதாரர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அச்சந்தர்ப்பத்தில் பங்கேற்க முடியும்.

| | | |
|---|---|---|
| மனு ஆவணங்களை வழங்குவதற்கான ஆரம்பம் | - | 2024.08.06 |
| மனு ஆவணங்கள் வழங்கும் இறுதி மற்றும் நேரம் | - | 2024.09.04 பி.ப.0300 மணி வரை |
| மனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி மற்றும் நேரம் | - | 2024.09.05 மு.ப.1100 மணி வரை |
| மனு திறக்கப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் | - | 2024.09.05 மு.ப.1100 இலங்கை இராணுவத் தலைமையகம், இராணுவத் தலைமையக வாகனத் தரிப்பிடம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை. |

3. வழங்கலுக்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள ஒரு முகாமிற்கு மீள் செலுத்தப்படும் **ரூபா.1,500.00** வழங்கல் வைப்பு பணம் மற்றும் மீள் செலுத்தப்படாத **ரூபா.1,000.00** வழங்கல் விண்ணப்ப கட்டணத்தையும் கோட்டை, ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவ தலைமையகத்தின் பணிப்பாளர் - நிதி இற்கு செலுத்தப்பட வேண்டும். (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.) அக்கட்டணத்தை செலுத்தியதன் பின் வழங்கப்படும் பற்றுச்சீட்டை **கோட்டை, ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தின் வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பகத்திற்கு** வழங்கி வழங்கலுக்கான மனு விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளலாம்.

4. மனுக்களை இடும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **“இறுதிச்சடங்குகளுக்கான சேவை வழங்கல் இலங்கை இராணுவம் 2025”** எனக்குறிப்பிட்டு முத்திரயிடப்பட்ட வழங்கல் விண்ணப்பங்களை பதிவுத்தபாலின் மூலம் **தலைவர், இராணுவ கொள்முதல் குழு, உபகரண பணிப்பாளர் நாயகம் கிளை, இராணுவ தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு** இற்கு அனுப்பி வைக்கவோ முடியும் அல்லது **வழங்கல் குழு, தலைவர், இலங்கை இராணுவத் தலைமையகம், இராணுவத் தலைமையக வாகனத்தரிப்பிடம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு** எனும் விலாசத்திற்கு சமூகமளித்து, அங்கு வைக்கப்பட்டுள்ள தேசிய வழங்கலுக்கு உரித்தான பெட்டியில் இடவேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் மனு விண்ணப்பத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை முன்வைக்க வேண்டும்.

அ. வியாபார பதிவுச் சான்றிதழ் (உறுதி செய்யப்பட்ட நகல்படிவம்)

ஆ. நிதி ஸ்திரத்தன்மை மற்றும் சொத்து உரிமையை நிரூபிக்க, விண்ணப்பதாரர் இலங்கையில் உள்ள ஒரு வங்கியில் வைத்திருக்கும் கணக்கிலிருந்து வங்கி அறிக்கையை வழங்க வேண்டும்.

இந்த ஆவணம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இ. மேற்கொள்ளப்பட்ட இறுதிச்சடங்குகள் தொடர்பான ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்கள்

ஈ. விண்ணப்பதாரர் அரச அல்லது அரசு தொடர்பிலான எந்த ஒரு தொழிலையும் மேற்கொள்ளவில்லை என்பதற்கான கிராம சேவகரினால் உறுதி செய்யப்பட்ட எழுத்துமூல அறிக்கை முன்வைக்க வேண்டும்.

6. கொள்முதல் விண்ணப்பத்தை கோரும் போது, சேவை நிறுவன கடிததலைப்பை வழங்க மனுதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் இடங்களைக் குறிப்பிட வேண்டும்.

7. விண்ணப்பதாரர்களினால் வழங்கப்பட வேண்டிய சேவைகளை வழங்குவதற்கு வேறு தரப்பினரை நியமிப்பின் அல்லது நியமிக்க திட்டமிட்டிருப்பின் அவர்களின் (துணை ஒப்பந்ததாரர்கள்) தகவல்களும் அந்தந்த விண்ணப்பிக்கும் இடங்களுக்கு ஏற்ப குறிப்பிடப்படல் வேண்டும்.

8. குறித்த தேவைகளை நிவர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். திணைக்களத்தின் வழங்கல் சபைக்கு எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் / நிராகரிக்கும் முழு உரிமையும் உண்டு.

9. ஆர்வமுள்ள மனுதாரர்கள், இலங்கை இராணுவத் தலைமையகத்தின் வழங்கல் மற்றும் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும், மேலும், **2024.08.06** முதல் **2024.09.04** வரை **மு.ப.0900** மணி முதல் **பி.ப.0300** வரை அரசு வேலை நேரங்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ள பந்தி 10 ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி தொடர்புடைய மனு ஆவணங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.

10. மேல் குறிப்பிடப்பட்ட முகவரி ஆவது.

| | |
|---|---|
| **கவனத்திற்கு** | : **பணிப்பாளர் நாயகம் (வழங்கல் மற்றும் போக்குவரத்து)** |
| **விலாசம்** | : **இலங்கை இராணுவத் தளபதி, இலங்கை இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை.** |
| **தொலைபேசி** | : **0112302568, 0112302569** |
| **மின்னஞ்சல்** | : **dtesandt@army.lk / dtesandt0@gmail.com** |

இராணுவத் தளபதி
இலங்கை இராணுவ தலைமையகம்
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை.

SELACINE

Daily News Classifieds, the Housewives’ companion

The Housewives’ companion
Classifieds on
Daily News

# சுப்பர் ஓவர் விதியை தவறவிட்ட நடுவர்கள்

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி சமநிலையில் முடிந்தும் சுப்பர் ஓவர் விதி செயற்படுத்தப்படாத நிலையில் தொடரின் எஞ்சிய போட்டிகளில் அதனை பயன்படுத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் (ஐ.சி.சி.) அறிவுறுத்தியுள்ளது.

ஆர். பிரேமதாச மைதானத்தில் கடந்த வெள்ளிக்கழமை (02) நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா 230 ஓட்டங்களை பெற்ற நிலையில் நடுவர்கள் சுப்பர் ஓவரை முறையை பயன்படுத்தாமல் போட்டி சமநிலையில் முடிந்ததாக அறிவித்தனர்.

எனினும் ஐ.சி.சி. ஒருநாள் போட்டிகளிலும் சுப்பர் ஓவரை பயன்படுத்தும் வகையில் கடந்த ஆண்டு டிசம்பரில் போட்டி விதிகளில் மாற்றம் கொண்டு வந்திருந்தது. எனினும் அதனை கடைப்பிடிப்பதற்கு தவறி இருப்பதாக ஐ.சி.சி. குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து ஐ.சி.சி. அறிவுத்தியதாகவும் ஏஞ்சிய போட்டிகளில் சரியான விதி செயற்படுத்தப்படும் என்றும் இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.



சமநிலை பெற்ற இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது போட்டியின்போது போட்டி மத்தியஸ்தராக ரஞ்சன் மடுகல்ல செயற்பட்டதோடு கள நடுவர்களாக ஜேவேல் வில்சன் மற்றும் ரவீந்திர விமலசூரியவுடன் மேலதிக நடுவராக ருச்சிர பல்லியகுரி மற்றும் தொலைக்காட்சி நடுவராக போல் ரைபல் ஆகியோர் செயற்பட்டனர்.

## சம்பியனானது றஹீமிய்யா

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



யூத்ஸ் டிவிதமிழ் ஆதரவில் இடம்பெற்ற ஸக்கி ஞாபகார்த்த கிண்ண கிரிக்கெட் தொடரில் பள்ளிக்குடியிருப்பு றஹீமிய்யா விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் 32 அணிகளின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை (02) நடைபெற்றது. இதில் அக்கரைப்பற்று சினாத் அணியை இறுதிப் போட்டியில் எதிர்கொண்ட றஹீமிய்யா அணி ஐந்து ஓவர்களுக்கு நிர்ணயித்த 20 ஓட்ட வெற்றி இலக்கை இரண்டு ஓவர்களில் இலகுவாக எட்டியது.

இத்தொடரின் சிறப்பாட்டக்காரராக சினாத் அணியின் வீரர் முஹம்மட் சஜீர் தெரியானார்.

## சோபர் அணி வெற்றி

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



மகிழூர்முனை நியு எவரெஸ்ட் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் வேலுப்பிள்ளை பத்மநாதன் ஞாபகார்த்த கிண்ண மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டு கழகம் சம்பியனானது.

கடந்த 10 தினங்களாக 64 அணிகளின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்தத் தொடரின்; இறுதிப் போட்டி கடந்த வியாழனன்று நடைபெற்றதோடு அதில் மட்டக்களப்பு ஈஸ்ரன் சலஞ்சேஸ் அணியை எதிர்கொண்ட சோபர் கழகம் 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக சோபர் கழகத்தின் முகம்மது அக்ரமும், இறுதிப்போட்டியில் சிறந்த வீரராக அந்தக் கழகத்தின் அஸ்ஜதும் தெரிவாகினர்.

## பாரிஸ் ஒலிம்பிக்: அதிவேக வீராங்கனையானார் அல்பிரட்

பாரிஸ் ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஜூலியன் அல்பிரட் வெற்றியீட்டி ஒலிம்பிக் வரலாற்றில் செயின்ட் லூசியாவுக்கு முதல் பதக்கத்தை வென்றுகொடுத்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டியில் அதிவேக வீராங்கனையை தேர்வு செய்யும் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்ற போது எவரும் எதிர்பார்க்காத வகையில் அல்பிரட் போட்டித் தூரத்தை 10.72 விநாடிகளில் நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை வென்றார்.



அமெரிக்காவைச் சேர்ந்த உலக சம்பியன் ஷக்கரி ரிச்சட்சன் 10.87 விநாடிகளில் வெள்ளிப் பதக்கத்தை வென்றதோடு அவரின் போட்டியாளரான அமெரிக்காவின் மெலிஸா ஜெப்பர்ஸன் (10.92 விநாடி) மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

## பாலின சர்ச்சைக்கு இடையே கலிப்புக்கு ஒலிம்பிக் பதக்கம்



பாலின சர்ச்சையில் சிக்கிய அல்ஜீரிய குத்துச் சண்டை வீராங்கனை இமான் கலிப் ஒலிம்பிக் பதக்கத்தை உறுதி செய்துகொண்டுள்ளார்.

பாலின சோதனையில் தோல்வி அடைந்து கடந்த ஆண்டு நடந்த உலக சம்பியன்சிப் போட்டியில் தடை செய்யப்பட்ட கலிப், பெண்களுக்கான 66 கிலோகிராம் எடைப் பிரிவில் இத்தாலி விராங்கனையுடன் ஆரம்ப சுற்றில் போட்டியிட்டபோதும் எதிர்த்துப் போட்டியிட்ட வீராங்கனை கலிப்பிடம் குத்து வாங்க முடியாமல் 46 ஆவது விநாடியிலேயே விலகிக் கொண்டார்.

இதன்போது அவரிடம் ஆண் தன்மை இருப்பதாக சர்ச்சை எழுப்பப்பட்டது.

எனினும் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஹங்கேரியாவின் லூகா அன்னா ஹமோரியை எதிர்கொண்ட 25 வயதான கலீப் அந்த போட்டியில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியதன் மூலம் ஒலிம்பிக் பதக்கத்தை உறுதி செய்துள்ளார்.

அவர் நாளை தாய்லாந்தின் ஜன்ஜயிம் சுவனபங்கை அரையிறுதியில் எதிர்கொள்ளவுள்ளார்.



கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான எறிபந்து போட்டியில் சம்பியன் கிண்ணத்தை வென்ற கல்முனை கல்வி வலயத்திலுள்ள சேனைக்குடியிருப்பு கணேஷா மகாவித்தியாலய பெண்கள் அணியினர் அந்தப் பாடசாலை அதிபர் பொ. கமலநாதன் மற்றும் உடற்கல்வி ஆசிரியைகள் திருமதி தேவதாஸ், திருமதி இலஞ்சேரலதன், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் எஸ். ஜீவிதன் ஆகியோருடன் உள்ளதை காணலாம். (படம் : துறைநீலாவணை நிருபர்)



## சர்வதேச செய்திகள்

**இஸ்ரேலுடனான போர் பதற்றம் உச்சம்:**

# லெபனானில் இருந்து வெளியேற பிரஜைகளுக்கு அமெரிக்கா உட்பட நாடுகள் அவசர எச்சரிக்கை

மத்திய கிழக்கில் போர் பதற்றத் அதிகரித்திருக்கும் சூழலில் பல நாடுகளும் இஸ்ரேல் மற்றும் லெபனானுக்கான பயண எச்சரிக்கைகளை விடுத்திருப்பதோடு 'லெபனானில் இருந்து உடன் வெளியேறுவதற்கு' தமது நாட்டு மக்களை அமெரிக்கா அறிவிறுத்தியுள்ளது.

பிரிட்டன், சுவீடன், பிரான்ஸ், கனடா மற்றும் ஜோர்தான் நாடுகளும் இது போன்ற பயண எச்சரிக்கைகளை விடுத்துள்ளன.

டெஹ்ரானில் வைத்து கடந்த புதன்கிழமை ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மைல் ஹனியே படுகொலை செய்யப்பட்டதற்கு இஸ்ரேல் மீது குற்றம்சாட்டும் ஈரான் கடுமையான பதிலடி கொடுக்க உறுதிபூண்டுள்ளது.

பெய்ரூட்டில் வைத்து ஹிஸ்புல்லா அமைப்பின் முன்னணி தளபதியான புவாத் ஷுக்ர் கொல்லப்பட்டு சில மணி நேரத்தின் பின்னரே ஹனியே படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இஸ்ரேல் மீது முன்னெடுக்கப்படும் எந்த ஒரு பதிலடியிலும் லெபனானைத் தளமாகக் கொண்ட ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு முக்கிய பங்கு வகிக்கும் என்பதோடு அவ்வாறான பதிலடி ஒன்று பிராந்தியத்தில் முழு அளவில் போர் ஒன்றை ஏற்படுத்தக் கூடும் என்ற அச்சமும் நிலவி வருகிறது.

ஹிஸ்புல்லா அமைப்பு நேற்று வடக்கு இஸ்ரேலில் உள்ள பெயித் ஹிலால் நகர் மீது சரமாரி ரொக்கெட் குண்டுகளை வீசியது. இஸ்ரேலிய வான் பாதுகாப்பு அமைப்பான அயன் டோம் ரொக்கெட்டுகளை இடைமறிக்கும் காட்சிகள் சமூக ஊடகத்தில் வெளியாகி இருந்தன. பாதிப்புகள் பற்றிய எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை.

பதிலடியாக தெற்கு லெபனானில் இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

காசாவிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் அங்கு மேலும் பலர் கொல்லப்பட்டிருப்பட்டிருப்பதோடு இஸ்ரேலில் நேற்று இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

டெல் அவிவுக்கு அருகில் உள்ள ஹொலோனில் நேற்றுக் காலை பரபரப்பான நேரத்தில் பலஸ்தீன தாக்குதல்தாரி இந்தக் கத்திக்குத்தை நடத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். தாக்குதல் நடத்தியவர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

காசாவில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கு நீடித்து வரும் போர் பிராந்தியம் எங்கும் பதற்றத்தை தீவிரப்படுத்தியுள்ளது.

எனினும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல் தொடர்ந்தும் அதே தீவிரத்துடன் இடம் பெற்று வருகிறது.



காசா நகரில் இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் மற்றொரு பாடசாலை மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மறுபுறம் டெயர் அல் பலாஹ்வில் உள்ள அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனைக்கு அருகில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள கூடாரங்கள் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய ஆளில்ல விமானத் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டு மேலும் 16 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் அந்தக் கூடாரங்களில் பாரிய அளவில் தீ பரவியுள்ளது.

டெயிர் அல் பலாஹ் அகதி முகாமில் அல் ஹசனத் குடும்பத்திற்குச் சொந்தமான வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு காசாவில் ஜபலியா அகதி முகாமின் அல் பகூரா பகுதியில் அல் அமூதி குடும்பத்திற்கு சொந்தமான வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் தாக்குதல்களில் 33 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 118 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த பத்து மாதங்களில் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 59,583 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 91,398 பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் லெபனானில் உள்ள அமெரிக்க தூதரகம் சனிக்கிழமை வெளியிட்ட அறிவுறுத்தலில், லெபனானில் தொடர்ந்து தங்கி இருக்க தீர்மானிக்கும் அமெரிக்க பிரஜைகள் அவசர திட்டங்களுக்கு தயாராக இருக்க வேண்டும் என்றும் நீண்ட காலம் தங்குவதற்கான இடம் ஒன்றுக்கு தயாராக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல விமான சேவைகளும் விமானங்களை இடைநிறுத்தி மற்றும் ரத்துச் செய்திருப்பதோடு பல விமான டிக்கெட்டுகளும் விற்றுத் தீர்ந்திருப்பதாகவும் லெபனானில் இருந்து வெளியேறுவதற்கு வர்த்தக விமானத்திற்கான வாய்ப்பு தொடர்ந்து இருப்பதாகவும் அமெரிக்க தூதரகத்தின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரான் மற்றும் அதன் கூட்டணிகளால் நடத்துவதற்கு வாய்ப்புள்ள தாக்குதல்களில் இருந்து இஸ்ரேலின் பாதுகாப்புக்கு உதவ பிராந்தியத்திற்கு மேலதிக போர்க் கப்பல்கள் மற்றும் போர் விமானங்கள் அனுப்பப்பட்டிருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகன் குறிப்பிட்டுள்ளது.

மக்களை வெயியேற்றும் பணிகளுக்கு உதவும் வகையில் மேலதிக இராணுவத்தினர், தூதரக பணியாளர்கள் மற்றும் எல்லைக் காவல் அதிகாரிகள் அனுப்பப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் பிரிட்டன், 'வர்த்தக விமானங்கள் செயற்படும்போதே லெபனானை விட்டு வெளியேறிவிடும்படி' நாட்டு மக்களை அறிவுறுத்தியுள்ளது.

இரு பிரிட்டன் இராணுவ கப்பல்கள் ஏற்கனவே பிராந்தியத்தில் நிலைநிறுத்தப்பட்டிருப்பதோடு அந்நாட்டு விமானப்படை போக்குவரத்து ஹெலிகொப்டர்களை தயார்நிலையில் வைத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு கொள்கை தலைவர் ஜோசெப் பொரெல் கடந்த வெள்ளிக்கிழமை, ஈரான் பதில் வெளியுறவு அமைச்சர் அலி பக்கரி கானியை தொலைபேசியில் அழைத்திருந்தார். அப்போது, 'இஸ்ரேலை தண்டிக்கும் இயல்பான மற்றும் சட்டரீதியான உரிமையை ஈரான் சந்தேகத்திற்கு இடமின்றி பயன்படுத்தும்' என்று கானி குறிப்பிட்டிருந்தார்.

'உலகம் அசாதாரண காட்சிகளை காணும்' என்று ஈரான் அரச தொலைக்காட்சி அறிவிப்பாளர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை குறிப்பிட்டிருந்தார். இஸ்ரேலியர்களை எச்சரித்த பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'சவாலான நாட்கள் எம் முன்னே உள்ளது. அனைத்துப் பக்கங்களிலும் இருந்தும் நாம் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளோம். எந்த ஒன்றுக்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்' என்றார்.

## குறுகிய தூர ஏவுகணை மூலம் இஸ்மைல் ஹனியே படுகொலை

ஈரான் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே ஈரான் தலைநகர் டெஹ்ரானில் அவர் தங்கி இருந்த விருந்தினர் இல்லத்திற்கு வெளியில் இருந்து வீசப்பட்ட 'குறுகிய தூர ஏவுகணை' தாக்கியே கொல்லப்பட்டிருப்பதாக ஈரான் புரட்சிக் காவல் படை தெரிவித்துள்ளது.



'இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளின்படி சுமார் 7 கிலோ வெடிபொருட்களை சுமந்த குறுகிய தூர ஏவுகணை ஒன்றின் மூலம் அவர் தங்கி இருந்த விருந்தினர் இல்லத்திற்கு வெளியில் இருந்து ஹனியேவுக்கு எதிராக தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது' என்று ஈரான் புரட்சி காவல்படை நேற்று முன்தினம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரான் ஜனாதிபதியின் பதவி ஏற்பு நிகழ்வில் பங்கேற்பதற்கு சென்றபோது ஹனியே கடந்த வார ஆரம்பத்தில் படுகொலை செய்யப்பட்டார். இஸ்ரேல் வகுத்துக் கொடுத்த திட்டம் அமெரிக்காவின் ஆதரவோடு செயல்படுத்தப்பட்டதாக ஈரான் குற்றஞ்சாட்டியது.

ஹனியேவின் மரணம் குறித்து இஸ்ரேல் இதுவரை எதுவும் கூறவில்லை. அவர் கொல்லப்பட்டதற்குப் பின் ஈரானிய இராணுவ அதிகாரிகள் பலர் கைது செய்யப்பட்டு அல்லது இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஈரானிய உளவுத்துறை ஹனியே மரணம் குறித்து தற்போது விசாரணை நடத்துவதாக அது குறிப்பிட்டுள்ளது.

அவர் தங்கியிருந்த வீட்டின் பாதுகாவலர்கள் விசாரிக்கப்படுகின்றனர். அவர்களின் கைத்தொலைபேசிகள் உள்ளிட்ட மின்னிலக்கச் சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. ஈரானிய அரசியல் தலைவர்களுக்கான பாதுகாப்பு நடைமுறை முழுமையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஹனியேவுக்கு பதில் புதிய தலைவர் ஒருவரை தேர்வு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அந்த அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 5ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பதுளை மாவட்ட செயலகம்

1. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து பதுளை மாவட்ட செயலக, பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல. | பணிகளின் விபரம் | மதிப்பிடப்படும் செலவு (மில். இ. ரூபா) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைமனு பிணை தொகை (ரூபா) மற்றும் 2024.12.29 வரை செல்லுபடி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ரொக்கப் பணம் | வங்கி உத்தரவாதம் |
| BD/FMG/PROC /2024/15 | எல்ல நகரில் பீரா எல்ல கந்துரவின் (Beera Ella Kandura) மேம்பாடு | 37.23 | 120 நாட்கள் | C4 மற்றும் C5 – வெள்ள நீர் அகற்றல் மற்றும் நில வடிகாலமைப்பு/ நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய் | 372,400.00 | 744,800.00 |

2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. “1987 இன் 30 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின்” ஏற்பாடுகளால் இந்த விலைமனு நிர்வகிக்கப்படும். அதனால், விலைமனுதாரர் மொத்தப் பெறுமதி ஐந்து மில்லியன் இலங்கை ரூபாவுக்கு (இ.ரூபா 5,000,000.00) மேற்பட்டதாயின் மாத்திரம், விலைமனுவுடன் சேர்த்து குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 11ஆவது பிரிவு விதியில் உள்ள இலங்கையின் பொது ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான பதிவுச் சான்றிதழை (PCA 3 படிவம்) சமர்ப்பித்தல் வேண்டும். (http://www.drc.gov.lk)
4. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தரத்துக்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) தொடர்புடைய துறையில் பதிவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு தேவையான தகைமையில், விலைமனு ஆவணத்தில் 05 ஆவது பிரிவில் அட்டவணைகள் (விலைமனு தரவு/ ஒப்பந்தத் தரவு) மற்றும் 04 ஆவது பிரிவில் தகைமை தகவல்கள் உள்ளடங்கும்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வார நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பதுளை மாவட்ட செயலக, மாவட்ட செயலாளர் (055-2222451), பதுளை – உள்ளூராட்சித் திணைக்கள, தலைமை பொறியியலாளரிடம் (0552222407) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.
7. மீளளிக்கப்படாத கட்டணமாக 7,500.00 ரூபாவை செலுத்தி 2024.08.05. ஆம் திகதி தொடக்கம் 2024.08.23 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை பதுளை மாவட்ட செயலகத்தில் இருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை 2024.08.26 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் பதுளை மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பதுளை மாவட்ட செயலகம், 5ஆவது மாடி, மாவட்ட செயலாளரின் மாநாட்டு அறையில் 15.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரத்தின்படி, விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.08.16 ஆம் திகதி 10.00 மணிக்கு பதுளை மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் என்பதோடு ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பதுளை மாவட்ட செயலகம்**
**0552222465**
**2024.08.05**

# பெறுகை அழைப்பு

**சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு**

## சப்ரகமுவ மாகாண சபை

சப்ரகமுவ மாகாண சபையின் சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சினால் தேசிய போட்டி கேள்விக்கோரல் (NCB) இன் கீழ் கீழ்க்காணும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அங்கவீனர்களுக்கான புனர்வாழ்வு உபகரணங்களை கொள்வனவு செய்தல்**

| கேள்வி கோரல் இலக்கம் | கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கும் உபகரணம் | பொது மதிப்பீட்டுப் பெறுமதி (ரூ.மி.) | கேள்விப் பத்திரக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணை வைப்பு (ரூ) |
|---|---|---|---|---|
| SRIM/FMD/ 06/2024/SW/03 | கொமட் சக்கர நாற்காலி - 114<br>அக்குள் தாங்கி - 30<br>சாதாரண சக்கர நாற்காலி - 286<br>கைத்தாங்கி - 248<br>வெள்ளைப் பிரம்பு - 10 | 25 | 3,000.00 | 1,250,000.00 |

**பின்னவல ஜனசலு நிலையத்தில் அத்தியாவசிய பழுதுபார்த்தல் விடயங்கள்**

| கேள்வி கோரல் இலக்கம் | கைத்தொழில் | பொதுவான மதிப்பீட்டுப் பெறுமதி (ரூ.மி.) | பதிவுத் தரம் | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்விப் பிணை வைப்பு (ரூ.) |
|---|---|---|---|---|---|
| SRIM/FMD/ 06/2024/ DRDC/04 | பின்னவல ஜனசலு நிலையத்தின் அத்தியாவசிய பழுது பார்த்தல் விடயங்கள் | 9.5 | C7 மற்றும் C7 | 3,000.00 | 500,000.00 |

2024.08.05 முதல் 2024.08.27 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை, அமைச்சு அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்க முடிவதுடன் கேள்விகளை சமர்ப்பித்தலுக்கு ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்விப் பத்திர வேண்டுதலுக்காக வழங்குநர்களின் எழுத்துமூல வேண்டுதலுடன் மேற்கண்டவாறு கேள்விப் பத்திர கட்டணத்தை இலங்கை வங்கியின் இரத்தினபுரி கிளையில் கணக்கு இல : 0001016456 இன் கீழ் செயலாளர், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சின் பெயரில் கணக்கில் இடப்பட்டு பற்றுச்சீட்டை சமர்ப்பித்து இவ் அமைச்சு அலுவலகத்தில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த கேள்விப் பத்திரத்துடன் மேலே தரப்பட்டுள்ள பெறுமதியுடையதாக செயலாளர், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு, சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி பெயரில் கோரும் போது காசாக்கக்கூடியதாக அரச அங்கீகாரம்பெற்ற வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும், நிபந்தனைகள் அன்றி (unconditional, on demand) கேள்விப்பிணையொன்றை அல்லது குறித்த தொகையை இலங்கை வங்கியின் இரத்தினபுரி கிளையின் கணக்கு இல: 0001016456 இன் கீழ் செயலாளர், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில் அமைச்சின் பெயரில் கணக்கில் இட்டு அதற்காக அமைச்சிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணையின் செல்லுபடிக்காலம் 2024 டிசம்பர் 06 வரையாக இருத்தல் வேண்டும்.

குறித்த சகல நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் கேள்விப் பத்திரத்துடன் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளல் 2024.08.28 பி.ப. 2.00 இற்கு முடிவடைவதுடன் கேள்விப்பத்திரங்கள் திறத்தல் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் 2024.08.28 பி.ப. 2.00 இற்கு இடம் பெறுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அனுமதி பெற்ற ஒருவர் சமுகமளிக்கலாம். குறித்த தினம் அரச விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்படின் அடுத்த அலுவலக தினம் கேள்விப் பத்திரம் திறக்கப்படும் தினமாகக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது பகுதிகளாக ஏற்றுக்கொள்ளல், நிராகரித்தல் அல்லது அதுபற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை தலைவர் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர், பெறுகைக் குழு,**
**சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும்**
**சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும்**
**கிராமிய கைத்தொழில் அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி,**
**தொ.பே.இல : 045-2222145, 045 - 2228137**

The Housewives' companion
Classifieds on
Daily News

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மேல் மாகாணம்)

**மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு- (மேல் மாகாணம்)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தலைவர் இத்தால் கோருகிறார்.
2. ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு சித்திகரமான ஒப்பந்தக்காரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்காதவர்களாவும் மற்றும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் எதிரில் தரப்பட்டுள்ள CIDA (ICTAD) பதிவுடன் மேல் மாகாண நிர்வாக எல்லைக்குள் கம்பனி பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-12, இல. 59, செபஸ்தியன் மேடு, 2ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), பெறுகை அதிகாரியிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் 2024 ஆகஸ்ட் 05ஆம் திகதி முதல் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் PE/2024/AG/28, 29, AV/30, KA/31 என்பவைகளுக்கு 2024 ஆகஸ்ட் 05ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 20ஆம் திகதி வரையிலும் மற்றும் PE/2024/MO/32 என்பதற்கு 2024 ஆகஸ்ட் 06ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி வரையிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணத்தையும் மற்றும் எழுத்துமூல விண்ணப்பமொன்றையும் செய்வதன் பேரில் கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), 2ஆம் மாடி, பெறுகை அதிகாரியிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
5. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘திட்டப் பெயரை’’க் குறிப்பிட்டு தலைவர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12 என முகவரியிட்டு கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா) பெறுகை அதிகாரிக்கு PE/2024/AG/28, 29, AV/30, KA/31 என்பவைகளுக்கு 2024 ஆகஸ்ட் 21ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன்னர் மற்றும் PE/2024/MO/32 என்பதற்கு ஆகஸ்ட் 28ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய மற்றும் இலத்திரனியல் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. சுய விருப்பத்தின் பேரில் வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடிவுறுத்தப்பட்டுள்ள நேரத்திற்கு பின் உடனடியாகத் திறக்கப்படும்.
7. சகல விலைமனுக்களுடனும் PE/2024/AG/28, 29, AV/30, KA/31 என்பவைகளுக்கு 2024 டிசம்பர் 17ஆம் திகதி வரையிலும் மற்றும் PE/2024/MO/32 என்பதற்கு 2024 ஆகஸ்ட் 24ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிணை முறியானது விலைமனு ஆவணத்தின் நிலையான படிவத்தில் உள்ளவாறு வங்கி உத்தரவாதம்/ காப்புறுதி பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.
8. PE/2024/MO/32 என்பதற்கு திட்டத்திற்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024 ஆகஸ்ட் 20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), 02ஆம் தளத்தில் இடம்பெறும்.
